விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை (09.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

நாட்டிற்காக செயற்படும் ஜனாதிபதிக்கு

## மஹாசங்கத்தினருடைய ஆசீர்வாதம் உள்ளது

- திம்புலாகலை தேவாலங்கார தேரர்

(கொழும்பு)

சில தரப்பினரின் நடவடிக்கைகளுக்கு மத்தியில் நாடு என்ற ரீதியில் சவால்களுக்கு முகம்கொடுத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் எப்போதும் நாட்டுக்காகவே தீர்மானங்களை மேற்கொண்டு தைரியமாக செயற்பட்டு வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனைத்து மஹா சங்கத்தினரினதும் ஆசீர்வாதம் உள்ளதாக சங்கைக்குரிய திம்புலாகலை தேவாலங்கார 15

அரசு, பிரதமர் இல்லாமல்

## பாராளுமன்றை ஏற்க முடியாது!

- வாசுதேவ நாணயக்கார



(கொழும்பு)

தற்போது நடைபெறுவது பாராளுமன்ற கூட்டத் தொடர் 15

ஓர் இலட்சம் பேரை திரட்டி

## தலைநகர் கொழும்பில் மூன்று நாள் பேரணி

ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் அடுத்த வாரம் ஓர் இலட்சம் பேரைக் குவித்து, மாபெரும் பேரணியை மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை பொருட்படுத்தாமல், இந்தப் பேரணியை நடத்துவதற்கு 16

## முச்சக்கரவண்டி - மோட்டார் சைக்கிள் மல்லாகத்தில் விபத்து

குடும்பஸ்தரின் கால் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளிலில் பயணித்த குடும்பத்தலைவர் படுகாயமடைந்தார். அவரின் வலது கால் சிதைவுண்டதால் முழங்காலுக்கு கீழ்பகுதி அகற்றப்பட்டது.

விபத்தையடுத்து முச்சக்கர வண்டிச் சாரதி நிறுத்தாமல் தப்பித்துவிட்டார் என்று தெரி 16

## 500 மில்லியன் ஏலம் நடந்ததால்

மகிந்த பெரும்பான்மை பெறவில்லை - ஜனாதிபதி

(கொழும்பு)

500 மில்லியன் ரூபாய் வரை குதிரைப்பேரம் நடந்ததாலேயே மகிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமற்போனது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி 15

இலங்கையில் மாறிவரும் சூழலுக்கேற்ப

# பதில் நடவடிக்கைக்கு தயாராக உள்ளோம்

பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் தரீக் அகமட் தெரிவிப்பு



(லண்டன்) இலங்கையில் மாறிவரும் சூழலுக்கேற்ப பதில் நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவ்வாறான நடவடிக்கையை எடுப்பதற்காக சிவில் சமூகத்தவர்கள் மற்றும் சர்வதேச சமூகத்துடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றோம் என பிரித்தானியாவின் மனித உரிமைகளுக்கான இராஜாங்க அமைச்சர் தரீக் அகமட் தெரிவித்துள்ளார். (15-ம் பக்கம் பார்க்க...)

அரசியல் குழப்பநிலைக்கு

## நீதிமன்றத்தின் தீர்ப்பு நிரந்தர தீர்வு இல்லை!

ஜே.வி.பியின் பொதுச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

நீதிமன்றத்தின் தீர்ப்பு எத்தகையதாக அமைந்தாலும் அது அரசியல் குழப்பநிலைக்கான நிரந்தர தீர்வாக அமையும் என நாங்கள் கருதவில்லை என மக்கள் 16

## நீதிமன்ற தீர்ப்புக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை

ஜனாதிபதி மைத்திரி தெரிவித்ததாக சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர்

(கொழும்பு)

நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அனைத்து உறுப்பினர்களும் அதனை ஏற்று அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரி 16

## சந்திரிகா மீது அச்சப்படும் ஜனாதிபதி!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது சமகால ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் அச்சத்தில் உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட பிரதிநிதிகள் மாநாட்டிற்கு 15

மகாராஜா பொதிகள் சேவை
Parcel.Lk
சிக்கனப் பொதிகள் சேவை
DHL
GTV Express SRI LANKA
aramex
1Kgக்கான கட்டணம்
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்
நோர்வே சுவிட்சர்லாந்து 900/-
அமெரிக்கா கனடா 1000/-
ஜேர்மனி 650/-
இங்கிலாந்து 600/-
போர்த்துக்கல் ஸ்பெயின் சுவீடன் பெல்ஜியம் நெதர்லாந்து பிரான்ஸ் இத்தாலி போலந்து ஆஸ்திரியா டென்மார்க் பின்லாந்து 750/-

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- |
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338 021 4925024 | 021 4930099 | 024 4930200 076 6908961 | 021 4930330 |

அரசியலை விட்டு பின்வாங்கமாட்டேன்

## பதவிகளைப் பெறுவது எமது எதிர்பார்ப்பு இல்லை - மகிந்த

(கொழும்பு)

அரசியலை விட்டு ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்களின் பலம் தனக்கு இருக்கும் வரையில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்க்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பன்னிப்பிட்டியவில் நடைபெற்ற மத நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர்களுக்கு 16



## திருகோணமலை மாவட்டத்தில்

# இராணுவத்தினரின் வசமிருந்த 10 ஏக்கர் காணி இன்று விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளில் 10 ஏக்கர் காணி இன்று ஞாயிற்றுக் கிழமை விடுவிக்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் அறிவித்தலுக்கு அமைய வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக இந்த காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் பெரும்பான்மையான காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி செயலணியில் உறுதியளித்ததுடன், அது குறித்து அதிகாரிகளுக்கும் கட்டளையிட்டிருந்தார்.

அதற்கமைய, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர் வசமுள்ள 10 ஏக்கர் காணி இன்றையதினம் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி இதுவரையில் இராணுவத்தினரின் வசமிருந்த 70 ஆயிரம் ஏக்கர் காணிகள் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தனியாருக்குச் சொந்தமான இன்னும், ஆயிரத்து ஐந்நூறு ஏக்கர் காணிகளே இராணுவத்தினர் வசமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த காணிகளும் படிப்படியாக அதன் உரிமையாளர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (ம-3)

**Group Classes**

தரம் 6-O/L வரை Maths, SCIENCE, ICT பாடசாலை ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 444 3859 (7834)

**வேலையாட்கள் தேவை**

K.K.S வீதி மாவிட்டபுரத்தில் இயங்கி வரும் KMV ராதா கிருஷ்ணன் மருந்து கடைக்கு வேலையாட்கள் தேவை. (இருபாலாரும்)

தொடர்புக்கு : 076 913 2049, 021 224 3676

(7836)

**ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்**

**ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்**

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - . யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4645)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119

## வவு.செட்டிகுளம் பகுதியில்

# தடைசெய்யப்பட்ட களை நாசினியுடன் இருவர் கைது

(வவுனியா)

தடைசெய்யப்பட்ட களைநாசினியை கடத்திசெல்லமுற்பட்ட இருவரை செட்டிகுளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோவின் வழிகாட்டலில், வன்னிமாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவின் மேற்பார்வையில் பொலிஸ் அத்தியட்சகர் தென்னகோனின் நெறிப்படுத்தலில் செட்டிகுளம் பொலிஸ் நிலைய குற்ற பிரிவின் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் தலைமையில் குறித்த கைதுநடவடிக்கை இடம்பெற்றது.

குறித்த சம்பவம்தொடர்பாக மேலும் தெரியவருகையில், நேற்று காலை மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசுவாகனத்தை செட்டிகுளம் நகரப்பகுதியில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனைகளை மேற்கொண்ட போது தடைசெய்யபட்ட களை நாசினியை யூரியா பையில் கடத்தி செல்வது தெரியவந்தது.

குறித்த சொகுசுவானில் இருந்து 600 கிராம் அளவில் சிறுபைகளாக பொதிசெய்யபட்ட 6 ஆயிரம் கிலோ நிறையுடைய தடைசெய்யபட்ட கிளைபோசெட் மருந்துகளை பொலிஸார் கைப்பற்றினர். அதன் மதிப்பு சுமார் 39 இலட்சம் என போலிஸார் தெரிவித்தனர். வானில் பயணித்தவர்களை கைதுசெய்த பொலிஸார், பயணித்த வாகனத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துசென்றனர்.

கைதுசெய்யபட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,281,250)

## தென்மராட்சிப் பகுதியில்

# மோ.சைக்கிள் நாயுடன் மோதி விபத்து ; ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மிருசுவில் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியள வில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.


பேருந்தில் வந்த தனது சகோதரனை ஏற்றுவதற்காக மோட்டார் சைக்கிளில் மகளுடன் சென்ற போது வீதிக்கு குறுக்கே திடீரென வந்த நாயுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன் போது மகள் சிறு உரசல் காயங்களுடன் தப்பித்துள்ளார். 34 வயதான உசன் மிருசுவிலைச் சேர்ந்த கிருஸ்ணதாஸ் அன்ரனி கால் முறிந்த நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். (ம-30)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் (சாமி)



யாழ்.புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டையில் வசித்து வந்தவரும் தற்போது கிளிநொச்சி உதயநகரை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 06.12.2018 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் வாணி (பிரான்ஸ்), வேணி (உதயநகர்), காலஞ்சென்ற சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜலட்சுமி, சொர்ணலட்சுமி, காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, வில்வரட்னம் மற்றும் இராஜரட்னம், சிவஞானம், இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தகுமார் (பிரான்ஸ்), கதீசன் (உதயநகர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லேனா, லெனிதா, லெனிஷன், லேதிகா, வெனுஜன் (பிரான்ஸ்), வர்மிகா, மதுர்ஷன், பிருத்திகா (உதயநகர்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2018) அவரது இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.63, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி. – குடும்பத்தினர்

(C-4652)

# மைத்திரியை ஓரங்கட்ட முயற்சி

# சு.கவின் தலைவராகிறார் மகிந்த

# சூடு பிடிக்கும் தெற்கு அரசியல்

(கொழும்பு)

பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன ஒன்றிணைந்து புதிய கூட்டமைப்பை உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக தெற்கு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடைபெற்ற போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஆலோசகர்களுக்கு அழைப்பு விடுக்கப் படவில்லை. அவர்கள் வரவில்லை என கட்சியின்




பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்திருந்தார்.

மேலும், மகிந்த ராஜபக்ஷ தலைமையிலேயே புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் ஸ்ரீல.சு.க. வின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே புதிய கூட்டணிக்கு தலைமை வகிப்பார் எனவும் அவருடைய தலைமையிலேயே தேர்தலில் போட்டியிடுவோம் என சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெற்றோல் குண்டுத்தாக்குதல் ஹயஸ், ஆட்டோ தீக்கிரை!

### கோப்பாயில் நள்ளிரவுவேளை சம்பவம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தி, கல்வியியற்கல்லூரி ஒழுங்கையிலுள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஹயஸ் வாகனம் ஒன்றும், ஆட்டோ ஒன்றும் தீக்கிரையாகியுள்ளன.

இனந்தெரியாத கும்பல் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நடத்திய பெற்றோல் குண்டுத்தாக்குதலில், ஹயஸ் வாகனமும் ஆட்டோவும், முற்றுமுழுதாக தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை இந்தச் சம்பவத்தில்காயமுற்ற 53 வயதான செல்லத்துரை செல்வரஞ்சன் என்பவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் யாழ்.நகரத்தை அண்டிய பிரதேசத்திலும் இதே பாணியில் பெற்றோல் குண்டு வீசப்பட்ட நிலையில் 2 ஆட்டோக்கள் உள்ளிட்ட பொருட்கள் தீக்கிரையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-101)

## அனர்த்தங்களால் அதிக பாதிப்பு இலங்கைக்கு இரண்டாமிடம்

(கொழும்பு)

உலகில் காலநிலை மாற்றங்களால், அதிகம் பாதிப்புக்களை எதிர்கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. கடந்த 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சர்வதேச ரீதியாக இடம்பெற்ற காலநிலை அனர்த்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

போலந்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் உலக காலநிலை மாநாட்டின் போது பாதிப்பு மிகுந்த காலநிலை கொண்ட நாடுகளில் இது வரை காலமும் ஏற்பட்ட அனர்த்தங்கள் விகிதாசார அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டன.

அதில் மிகவும் அபாயகரமான காலநிலை அனர்த்தங்கள் மிகுந்த நாடாக கரிபியன் பிராந்தியத்தின் புவேர் டோரிகோ (Puerto Rico) நாடு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு அடுத்தபடியாக டொமினிகா குடியரசு மூன்றாவது அபாயகரமான நாடாக உள்ளது. அதற்கு அடுத்தபடியாக மியன்மார், நேபாளம் உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருடத்தில் மண்சரிவுகள், வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் இலங்கையில் சுமார் 200 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், புள்ளிவிபரங்களின் படி கடந்த 20 வருடங்களில் உலகளாவிய ரீதியாக இடம்பெற்ற காலநிலை அனர்த்தங்களின் காரணமாக சுமார் 5 இலட்சத்து 26ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## தொண்டா - ரவி இரகசிய சந்திப்பு



(கொழும்பு)

அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சந்திப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில் சுமார் ஒரு மணித்தியாலங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வரும் விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்திருக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், குறித்த சந்திப்பு தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை. தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் ஆதரவை, ஐக்கிய தேசிய கட்சிக்கு வழங்குமாறு ரவி இதன்போது கோரியிருக்கலாமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## சாதகமான தீர்ப்பே வரும்

### நளிந்த நம்பிக்கை



(கொழும்பு)

நாடாளுமன்ற கலைப்பு தொடர்பில் விடுக்கப்பட்ட வர்த்தமானி மீதான அடிப்படை உரிமைகள் மனுக்களைப் பற்றிய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சாதகமான முறையிலேயே கிடைக்கும் என நம்புவதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சதித்திட்டம் தோற்கடிக்கப்பட வேண்டும். அத்தோடு கடந்த மாதத்திற்கு முன்னர் நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயரை இதன் மூலம் மீண்டும் நிறுவ முடியும். கடந்த ஆறு வாரங்களில் ஜனாதிபதி மற்றும் மற்றொரு குழுவால் தொடங்கப்பட்ட சதித்திட்டம் தீர்க்கப்பட வேண்டும்.

ஏற்கனவே அவர்கள் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். எனவே நாட்டின் ஜனநாயகத்திற்கு மிகச் சிறந்த தீர்வை நீதித்துறையும் வழங்கும் என தாம் நம்புவதாக நளிந்த தெரிவித்தார். (இ-7)

## பொற்குடத்தில் போட்டியிட மைத்திரி-பசில் புதிய திட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஆகிய கட்சிகள் இணைந்து மெகா கூட்டணி ஒன்றை அமைத்து பொது சின்னத்தின் கீழ் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடவுள்ளன.

இதற்கான இணக்கப்பாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருவருக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இதற்கான இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கள மக்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்களுள் ஒன்றான பொற்குடம் அல்லது பொற்பானை சின்னமே பொதுச்சின்னமாக இருக்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெற்றிலைபோலவே இதுவும் மங்களகரமான விடயமாக பார்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாணசபைத் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாலோ கூட்டணி அமைத்து போட்டியிடுவதே சுதந்திரக் கட்சியின் கொள்கையாக இருக்கின்றது.

இதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு சவால் கொடுக்கும் வகையில் இந்தத் திட்டம் இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)



## “யானையே எமது எதிரி” சு.க.செயலாளர் பியதாஸ

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியே தமது பொது எதிரி என்று, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம், நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# அடிலெய்டில் இந்தியா 'ஆதிக்கம்'

## ஆஸி., பந்துவீச்சாளர்கள் திணறல்



ஹோலியை ஆட்டமிழக்கச் செய்த மகிழ்ச்சியில் ஆஸியின் நேதன் லயன்

அடிலெய்ட் டெஸ்டில் இந்திய அணியின் கை ஓங்கியுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் அடி லெய்டில் நடக்கிறது.

இந்திய அணி முதல் இன்னிங்சில் 250 ஓட்டங்கள் எடுத்தது. நேற்று முன்தினம் இரண்டாவது நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 7 விக்கெட்டுக் களை இழந்து 191 ஓட்டங்களை எடுத்திருந் தது.

**மழை குறுக்கீடு**

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் மழையால் 45 நிமிடம் தாமதமாக தொடங்கி யது. ஸ்டார்க் (15) பும்ரா வேகத்தில் வீழ்ந் தார். 3.4 ஓவருக்குப் பின் மீண்டும் மழை வர, போட்டி (ஆஸி., 204/8 ஓட்.) தடைப் பட்டது. மறுபடியும் போட்டி ஆரம்பித்ததும் ஷமி மிரட்டினார்.

நேற்றைய இவரது முதல் ஓவரின் 3ஆவது பந்தில் இந்திய அணிக்கு 'தலை வலியாக' இருந்த ஹெட் (72) சரிந்தார். 4ஆவது பந்தில் ஹேசல்வுட் 'டக்' அவுட்டாக, அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 235 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் பும்ரா, அஷ்வின் தலா 3, இஷா ந்த், ஷமி தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின் 15 ஓட்டங்கள் முன்னிலையுடன் இந் திய அணி இரண்டாவது இன் னிங்சை ஆரம் பித்தது. நிதான ஆரம்பம் கொடுத்த ராகுல், முரளி விஜய் ஜோடி முதல் 8 ஓவர் களில் 8 ஓட்டங் களை (4 உதிரி) மட்டும் எடுத்தது.

அதன்பின் சுதாகரித்துக் கொண்ட ராகுல், கம் மின்ஸ் ஓவரில் சிக்சர், பவுண்டரி என விளாச, அடுத்த 7 ஓவர்களில் 43 ஓட்டங்கள் எடுத்தது இந்தியா. முதல் விக்கெட்டுக்காக 63 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் முரளி விஜய் (18) ஆட்டமிழந்தார் ராகுல் (44) அரைச்சத வாய்ப்பை இழந்து திரும்பினார்.

அணித் தலைவர் ஹோலி, புஜாரா இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத் தினர். இருவரும் இணைந்து 11ஆவது முறையாக 50 ஓட்டங்களுக்கு மேல் 'பார்ட்னர்ஷிப்பில்' சேர்க்க செய்வத றியாது விழித்தார் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பெய்ன். மூன்றா வதுவிக்கெட்டுக்காக71ஓட்டங்களைச் சேர்த்த போது லயன் சுழலில் ஹோலி (34) வீழ்ந்தார்.

இந்நிலையில் நேற்றைய மூன்றா வது நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த போது, இந்திய அணி இரண்டாவது இன் னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்கள் எடுத்து, 166 ஓட்டங்களால் முன் னிலை பெற்றிருந்தது. புஜாரா (40), ரகானே (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**6**

டெஸ்ட் அரங்கில் ஹோலியை அதிகபட்சம் 6வது முறையாக அவுட்டாக்கினார் அவுஸ்தி ரேலியாவின் லயன். இங்கிலாந்தின் அண் டர்சன், பிரோட் தலா 5 முறை அவுட் செய்த னர்.



லோகேஷ் ராகுல்

**சேஸ் முடியுமா?**

அடிலெய்ட் மைதானத்தில் அவுஸ்திரேலிய 200 ஓட்டங் களுக்கு (315/6, எதிர் இங்கிலாந்து, 1902) மேல் சேஸ் செய்து ஒரு முறை வெற்றி பெற்றது. இதனால் சிறப்பாக விளையாடி குறைந்தது 300 ஓட்டங்கள் இலக்கு வைத்தால் இந்திய அணி வெற்றிக்கு முயற்சிக்கலாம்.

◆ 2000க்குப் பின் இங்கு இந்திய அணி மட்டும் 200க்கும் அதிகமான ஓட்டங் களை (233/6) 'சேஸ்' செய்து வென்றது. மற்ற அணிகள் ஒருமுறை கூட 'சேஸ்' செய்தது இல்லை

**மின்னொளியில்...**

அடிலெய்டில் நேற்று விட்டு விட்டு மழை பெய்தது. வானம் மேகமூட்டமாக இருந்தது. இதனால் போட்டி மின்னொளியில் நடந்தது.

**பெய்ன் கோபம்**

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங் சின் கடைசி நேரத்தில் லேசான மழைத் தூறல் இருந்தது. பின் இந்திய அணி துடுப் பாட்டம் செய்ய வந்த போது மழை அதிகம் இருப்பதாக கூறி, நடுவர்கள் உணவு இடை வேளை அறிவித்தனர். இதனால் அவுஸ்தி ரேலிய அணித் தலைவர் பெய்ன் கோபத்து டன் நடுவர்களுடன் விவாதித்தார்.

**ஹோலி ஜாலி**

மூன்றாவது நாளான நேற்று அவ்வப் போது மழை பெய்தது. இந்திய அணித் தலைவர் ஹோலி உற்சாகமாக காணப்பட் டார். களத்தடுப்பு செய்த போது ஏதோ பாடலை முணுமுணுத்துக் கொண்டே நடனம் ஆடினார்.

**'பாரத் ஆர்மி'**

இந்திய கிரிக்கெட் அணிக்கு உற்சாகம் தரும் வகையில் 'பாரத் ஆர்மி' என்ற பெயரில் ரசிகர்கள் படை அவுஸ்திரேலியாவில் இறங்கி யுள்ளது. நேற்று காலை அடிலெய்ட் மைதா னத்தின் உச்சிக்கு ('ரூப் டாப்') சென்ற இவர் கள், பயிற்சிக்கு சென்ற ஹோலி உள்ளிட்ட இந்திய வீரர்களைப் பார்த்து,' வி ஆர் பாரத் ஆர்மி...' என்று பாடினர். இதைப் பார்த்த இந்திய வீரர்கள் மகிழ்ந்தனர்.

**மழை வருமா?**

அடிலெய்டில் இன்று காலையில் மட்டும் வானம் மேகமூட்டமாக இருக்கும். மழை வர அதிகபட்சம் 13 சதவீதம் தான் வாய்ப் புள்ளது. கடைசி மற்றும் ஐந்தாவது நாளான நாளை மழை வராது.

**ரசிகர்கள் கோஷம்**

நேற்று இந்தியத் தலைவர் ஹோலி துடுப்பாட்டம் செய்ய வந்தபோது, 'கேலரியில்' இருந்த சில அவுஸ்திரேலிய ரசிகர்கள் கூச்சலிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த செயலுக்கு அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன் ரிங், தற்போதைய வீரர் டிராவிஸ் ஹெட் கண்டனம் தெரிவித் துள்ளனர். இந்திய அணியின் பும்ரா கூறுகையில்," ஹோலிக்கு சில ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதை நாங்கள் கண்டு கொள்வதில்லை. இம்மாதிரி விடயத்தை கட்டுப்படுத்தும் அதிகாரமும் எங்களிடம் இல்லை," என்றார்.

# சாலா ஹட்ரிக்



மொஹமட் சாலா

பிரிமியர் லீக் கால்பந்து லீக் போட்டியில் லிவர்பூல் அணி 4-0 என்ற கோல் கணக்கில் பார்ன்மவுத் அணியை தோற்கடித்தது.

இங்கிலாந்தில் உள்ளூர் கிளப் கால்பந்து அணிகள் பங்கேற்கும் பிரிமியர் லீக் தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் லிவர்பூல், பார்ன்மவுத் அணிகள் மோதின. அசத்லாக ஆடிய லிவர்பூல் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. லிவர்பூல் அணியின் மொஹமட் சாலா 'ஹட்ரிக்' கோல் (25, 48, 77வது நிமிடம்) அடித்தார்.

இதுவரை விளையாடிய 16 போட்டிகளில், 13 வெற்றி, 3 'சமனிலை' என, 42 புள்ளிகளுடன் லிவர்பூல் அணி முதலிடத்துக்கு முன்னேறியது. மன்செஸ்டர் சிட்டி (41 புள்ளி) அணி 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

# மொஹமட் அமிர் வாய்ப்பு

தென்னாரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணி யில் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் அமிர் இடம் பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்கா செல்லவுள்ள பாகிஸ் தான் அணி, மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள், மூன்று சர்வதேச 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் வரும் 26ல் செஞ்சூரிய னில் ஆரம்பமாகிறது. அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகள் கேப்ட வுன் (ஜன 3-7), ஜொகனஸ்பர்க் (ஜன. 11-15) நகரங்களில் நடக்க வுள்ளன.



இத்தொடருக்கான 16 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. இதில்வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் அமிர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடந்த செப்ரெம்பர் மாதம் யு.ஏ.இ., யில் நடந்த ஆசிய கிண்ணத் தொடரில் சொதப்பிய இவருக்கு அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் கிடைக்கவில்லை. பின் உள்ளூர் போட்டியில் திறமையை நிரூபித்து வாய்ப்பு பெற்றுள்ளார்.

இதேபோல சுழற்பந்துவீச்சாளர் ஷடாப் கான், ஆரம்ப வீரர்களான பகார் ஜமான் ஷான் மசூத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அணித் தலைவராக சர்பராஸ் அகமட் நிய மிக்கப்பட்டுள்ளார்.

**அணி விபரம்:** சர்பராஸ் அகமட் (அணித் தலைவர்), இமாம் உல் ஹக், பகார் ஜமான், ஷான் மசூத், அசார் அலி, ஹரிஸ் சொகைல், அசாத் ஷபிக், பாபர் அசம், மொஹமட் ரிஸ் வான், யாசிர் ஷா, ஷடாப் கான், மொஹமட் அபாஸ், ஹசன் அலி, மொஹமட் அமிர், பஹீம் அஷ்ரப், ஷஹீன் ஷா அப்ரிடி.

# சிறுபான்மை கட்சிகளின் ஆதரவின்றி ஆட்சியில்லை

## நீதிமன்றத் தீர்ப்புக்கு அனைவரும் மதிப்பளித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்



### ரோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்து

(கொழும்பு)

சிறுபான்மை கட்சிகளின் ஆதரவின்றி எந்தவொரு பெரும்பான்மை கட்சிகளாலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாதென பவ்ரல் அமைப்பின் நிறை வேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது பொதுத் தேர்தலை விகிதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நடத்தினாலும் கூட சிறுபான்மை கட்சிகளின் ஆதரவின்றி எந்தவொரு பெரும்பான்மை கட்சியாலும் தேர்தலில் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது.

அந்தவகையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் சட்டம் மற்றும் சம்பிரதாயங்களை ஆராய்ந்து நீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்புக்கு அனைவரும் மதிப்பளித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் நாட்டு மக்களை கருத்திற்கொண்டு அதனடிப்படையில் செயற்பாடுகளை அனைத்து அரசியல்வாதிகளும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்" என ரோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார். (இ-7)

### பருத்தித்துறை பிரதேச சபையில் நிலவும்

## ஆளணிப் பற்றாக்குறையைப் போக்க திணைக்கள உதவிகளை வழங்குவேன்

### உள்ளூராட்சி ஆணையாளர் உறுதி

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளணிப் பற்றாக்குறை சம்பந்தமாக கவனம் எடுத்து இந்த பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு திணைக்களம் சார்ந்த உதவிகளை நிச்சயமாக வழங்குவேன் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேசசபை மண்டபத்தில் தவிசாளர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப் பிரதேச சபையானது பரந்தளவு பிரதேசத்தை நிர்வகிக்கும் ஓர் பிரதேச சபையாக க்ாணப்படுகிறது.

பிரதேச சபையினாலே எமது வேலைத்திட்டங்களை முதன்மைப்படுத்தி முன்னெடுத்து செல்வதனூடாக எமது சமுதாயத்தின் வளர்ச்சியை முன்னெடுக்க முடியும்.

இப் பிரதேசசபையின் தவிசாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களின் பணி என்பது அளப்பரியது.

வசதியான இடத்தில் சேவை செய்வதை விட கஷ்டப்பிரதேச அல்லது தேவையுள்ள மக்களுக்கு சேவை செய்வதுதான் மனத் திருப்தி தரும். அந்த தேவைகளுக்காக நீங்கள் உழைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

அந்தத் வகையில் தவிசாளர் அரியகுமார் மற்றும் அவரோடு தோள் நின்று உழைத்துக் கொண்டு இருக்கும் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

கல்வியைப் பொறுத்தவரை இங்கு வெளியிடத்து ஆசிரியர்களே அதிகம் உள்ளனர். அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எமது சமுதாயத்திற்கு கல்விதான் ஆதாரமாக, முது கெலும்பாக உள்ளது. கல்விக்கு எமது பிரதேசசபைகளும் வாசிப்பு மாதத்தின் ஊடாக ஊக்குவிப்பது சந்தோசமான விடயம்.

நாங்கள் தற்போது வாசிப்பு பழக்கம் இல்லாமல் இருக்கின்றோம். அதன் தாக்கம் பிற்காலத்திலே நிச்சயமாக ஏற்படும்.

முன்னோர்கள் தங்களது வளர்ச்சிக்கு ஏதாவது ஒரு நூல் நிலையம் இருந்ததை கூறுவார்கள்.

முன்னர் நூலகத்திற்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டது. தற்போது அந்த எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. வாசிப்பின் முக்கியத்துவத்தை இந்த சபையின் ஊடாக முன்னெடுப்பது பாராட்டத்தக்கது.

பருத்தித்துறை பிரதேசத்தை பொறுத்தவரை இயற்கை வளங்களை விட மனித வளம் பலமாக இருக்க வேண்டும். இருக்கும் என நான் எண்ணுகிறேன்.

இந்த மாணவர்கள் நல்ல நிலைக்கு வர வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நேற்று நாவற்குழி அப்பன் கிராமத்தில் "சொந்த மண், சொந்த மரங்கள்" குழுவினரால் 100 மரக்கன்றுகள் நடப்பட்டன.

## இராசி பலன்

**09.12.2018**

கார்த்திகை 23, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

துதியை பிற்பகல் 3.50 மணிவரை

மூலம் முற்பகல் 8.45 மணிவரை

சுபநேரம் 9.18-10.48 மணிவரை

இராகுகாலம் 4-48-6.18 மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை: செவ், ராகு, கேது, சனி, சந், சூரி, குரு. புத, சுக்

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்:** மனக்குழப்பம் அகல கண்ணனை வழிட வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்:** உடல்நலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்தாசைகள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள் , மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.


**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, தொழிலில் அதிகம் பாடுபடுவீர்கள்.


**மகரம்:** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** பொது வழியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வாக்குறுதியை காப்பாற்றி மகிழ்வீர்கள், எதிபார்ப்புகள் நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு.

# பலாலியில் சோளத்தை தாக்கும் படைப்புழுவின் படையெடுப்பு





(யாழ்ப்பாணம்)

சோளத்தை தாக்கும் படைப்புழுவின் படையெடுப்பு யாழ் மாவட்டத்தின் பலாலி பகுதியில் தற்பொழுது அவதானிக்கப்பட்டுள்ளது. **Spodopterdfrugiperda** என்ற விஞ்ஞான பெயருடன் அழைக்கப்படும் அந்து வகை பூச்சியாகும். இவ் அந்நிய படைப் புழுவானது இலங்கையில் கண்டுபிடிக்கப்படாத ஆக்கிரமிப்பு தடுப்பு காப்பு பீடையாகும்.

இப் படைப்புழுவின் பிரதான விருந்து வழங்கி தாவரமாக சோளம் காணப்பட்டபோதும், இறுங்கு, நெல் போன்ற தானியப் பயிர்கள் பயறு, கௌபீ, நிலக்கடலை, மரக்கறி பயிர்கள் மற்றும் பழப்பயிர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பயிர்வகைகளை தாக்கி அழிக்கக்கூடியது.

மேலும் களைகளையும் தாக்கி அழிக்கக்கூடியது. இப் படைப்புழு விரைவாக பல்கிப் பெருகி பாரிய பொருளாதார சேதத்தை விளைவிக்கக் கூடியதொரு பீடையாகும்.

**இப் படைப்புழுக்களை எவ்வாறு இனங்காண்பது**

இளம் குடம்பிகள் வெளிர் பச்சை நிறமாக காணப்பட்டு பின்பு மஞ்சள்,செம்மஞ்சள் கபில நிறமாக மாற்றமடையும். தலைகடும் நிறமாவதுடன் தலையில் Y என்ற ஆங்கில எழுத்தின் வடிவம் போன்ற தலைகீழ் வடிவத்தை அவதானிக்க முடியும். உடலின் ஒவ்வொரு துண்டத்திலும் நான்கு புள்ளிகள் காணப்படுவதோடு இறுதி துண்டத்திற்கு முன் துண்டத்தில் இப் புள்ளிகள் சதுர வடிவத்தில் அமைந்திருக்கும். குடம்பிகள் 3 - 4 சென்ரி மீற்றர் நீளமானவை.

இதன் கூட்டுப்புழுவானது மண்ணில் காணப்படும், இவ் அந்துகள் காற்றின் உதவியுடன் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் பறக்கக்கூடியவல்லமையை கொண்டுள்ளன.

**தாக்கம்**

இப்புழுக்கள் பாரிய அளவில் இலைகளை உண்ணுவதால் பயிகளில் கிழிந்தும் முறிந்தும் சிதைந்த நிலையிலும் இலைகளை அவதானிக்கலாம். இலைக் குருத்தையும் பாதிப்பதுடன் அப்பகுதியில் ஈரமான மரத்தூசு போன்று கழிவுகள் காணப்படும்.

இதன் வாழ்க்கை வட்டம் 34 நாட்கள் தொடக்கம் 60 நாட்கள் வரை காணப்படும். சாதகமான நிலைமை காணப்படும் போது குறைந்த நாட்களில் தனது இனத்தினை பெருக்கமடைய செய்யும்.

**ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறை**

இப் படைப்புழுவை கட்டுப்படுத்த நிலை பேறான ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறை அவசியமானது.

- தொற்றலடைந்த பயிர்களின் மீதிகளை எரித்து அழித்துவிட வேண்டும்.
- இரசாயன பசளைகளை சிபார்சுக்கமைய பயன்படுத்தல் வேண்டும். நைதரசன் பசளை பாவனையை குறைத்தல்.
- தோட்டத்தை சுற்றியுள்ள களைகளை கட்டுப்படுத்தல் வேண்டும்.
- தோட்டத்தை தொடர்ச்சியாக அவதானித்து முட்டைகள், குடம்பிகளை அழித்தல்.
- மணல்,சாம்பல் போன்றவற்றை இலையின் குருத்தினுள் இடல் வேண்டும்.
- பயிர் சுழற்சி.
- வேப்பம் விதை பிரித் தெடுப்பை விசிறல்

தாக்கத்தை கண்டவுடன் உடனடியாக செயற்படும் முதலாம் தொகுதி பீடைநாசினிகளில் ஒன்றை விசிறவும்.

தாக்கத்தை மேலும் கட்டுப்படுத்துவதற்காக ஏழு நாட்களின் பின் 2ஆம் அல்லது 3ஆம் தொகுதி பீடைநாசினிகளில் ஒன்றை விசிறவும்.

இப் படைப் புழுவின் தாக்கத்தை கண்டவுடன் கட்டுப்படுத்துவதன் மூலம் பீடையின் பரம்பலை தடுப்பதற்கு விவசாயிகள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை உங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியர் அல்லது பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அறியத்தரவும்.

தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் - 0212222175 என யாழ்.பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிறிரங்கன் அறிவித்துள்ளார். (இ-4)

| -- | பீடைநாசினியின் பெயர் | விற்பனைப்பெயர் | கலவையின் அளவு 10 லீற்றர் நீருடன் |
|---|---|---|---|
| முதலாம் தொகுதி | ஸ்பினொடரம் 25% WG | ரேடியன்ட் | 03 கிராம் |
| | ஸ்பினோசாட் 25G/1SC | சக்சஸ் | 10 மில்லிலீற்றர் |
| | எமமெக்டின் பென்சோவட் 5%SG | புரோக்லேம் | 04 கிராம் |
| | எடொபென்பொக்ஸ் 100g/1 Ec | றிபோன் | 15 மில்லிலீற்றர் |
| இரண்டாம் தொகுதி | பலுபென்டியாமைட் 24%WG | பெல்ட | 04 கிராம் |
| | பலுபெனடியாமைட் 20%WG | டகும் | 05 கிராம் |
| | க்லோரேன்டரலிபோரோல் 200G/L3c | கொரெஜன் | 1.0 மில்லிலீற்றர் |
| மூன்றாம் தொகுதி | டெபுபெனொசயிட் 200g/lSc | மிமிக் | 15 மில்லிலீற்றர் |
| | குரோமொபெனொசயிட் 50g/1Sc | போடெக்ஸ் | 20 மில்லிலீற்றர் |
| | நொவெலியுரோன் 100g/1Ec | ரிமோன் | 10 மில்லிலீற்றர் |
| | பிஸ்டிரிப்லுரோன் 100g/1Ec | ஹனரோ | 15 மில்லிலீற்றர் |
| | லுபேநியுரோன் 50g/1Ec | நுரோ | 10 மில்லிலீற்றர் |

## கோண்டாவில் ஐயப்ப தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரி மலை சபரீச ஐயப்ப தேவஸ்தான மகர சங்கிராந்தி மகா விளக்குமண்டலவிரதமஹோற்சவ பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

இத் தேர்த்திருவிழாவின் நேரடி வர்ணனையை மதுர கவி காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்துவார். (இ

## “மஹா கணபதி ஹோமம்”

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று வரும் விநாயக சஷ்டி (பிள்ளையார் கதை) நிகழ்வின் “மகா கணபதி ஹோமம்” இன்று 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (இ-5)

## 6 உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

## ஒருவருக்கு ஐயாயிரம் அபராதம் ஒரு உணவகத்துக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரப் பரிசோதகர்களால் உரும்பிராய் பிரதேசத்திலுள்ள உணவகங்கள் நேற்று முன்தினம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு 6 உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் ஒரு உணவகத்துக்கு சீல் வைக்கப்பட்டது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையின் வழிகாட்டலுக்கமைய உரும்பிராய் பொதுச் சுகாதார பரிசோதகர் ந.நிறூபன் தலைமையிலான குழுவினர்கள் உணவகங்கள் மீது பரிசோதனையை மேற்கொண்டனர்.

மனிதநுகர்வுக்குக்கேடான முறையற்ற சுட்டுத் துண்டுடைய உணவுகள் கைப்பற்றப்பட்டு உணவக உரிமையாளர்களுக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

6 உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒருவர் நீதிமன்றுக்கு சமூகம் தரவில்லை எனவும் ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏனைய நான்கு பேரும் ஐம்பதாயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான தண்டனை தீர்ப்புக்காக ஜனவரி மாதம் 9 ஆம் திகதி மற்றும் 16 ஆம் திகதி திகதியிடப்பட்டதாக கோப்பாய் சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர். (இ-9)

## குரும்பை கட்டி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை குரும்பை கட்டி முன்பள்ளியின் கலை விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் ப.செல்வவிநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் கலந்து கொள்வார். (இ-19)

## கிராம அபிவிருத்திச் சங்க புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்க புதிய கட்டடத் திறப்புவிழா இன்று 9 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மாவிட்டபுரம் அரசடி வீதியில் (மாரி அம்மன் கோவில் அருகாமை) மாவிட்டபுரம் கி.அ.சங்கத் தலைவர் எ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்து கொள்வார். (இ-5)

## மாவட்ட சாரணர் சங்கத்தின் ‘யாழ் சாரணர்’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் “யாழ் சாரணர்” நூல் வெளியீடு இன்று 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.கோண்டாவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்தியாசாலையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சாரணர் சங்க செயற்குழுத்தலைவரும் வட மாகாண ஆளுநரின் செயலாளருமான இ.இளங்கோவன் கலந்து கொள்வார். (இ-5)



யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் யுனிசெப் அமைப்பினூடாக சொண்ட் நிறுவனத்தால் சிறுவர்களது சம்பவ, முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சிப்பட்டறை ஒன்றை நேற்று முன்தினம் நடத்திய போது வைத்தியர் விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட சுகாதார உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

## கலை இலக்கியப் பெருவிழாவில் நாளை இளைய,மூத்த கலைஞர்களின் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் 6 ஆம் நாள் நிகழ்வான “இளைய, மூத்த கலைஞர்களின் சங்கமம்” நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித் துறை சுப்பர்மட பொது நோக்கு மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகசமூக சேவை உத்தியோகத்தர் ப.சர்மிலன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக கொழும்பு விவாகப் பதிவாளர் கலாபூஷணம், கவிஞர் வதிரி சி.ரவீந்திரன், கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் அண்ணாவியார் பா.வேதநாயகம், கலாபூஷணம் மா. ஜெயானந்தம் ஆச்சாரி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# மிருக வேட்டைக்கு சென்று வீடு திரும்பிய இளைஞர் பலி

(மினிப்பே)

வயல் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த சட்டவிரோத மின் இணைப்பில் சிக்குண்டு நபரொருவர் உயிரிழந்துள்ளார்..

மினிப்பே - ஹசலக - உடவத்தை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மின் இணைப்பில் சிக்கி காயமடைந்த மேலும் இருவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரம் தாக்கி ஸ்தலத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் இரவு மிருக வேட்டைக்குச் சென்று திரும்பிய போதே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

பமுனுபுர பட்டமுல்ல பகுதியை சேர்ந்த 21 வயது இளைஞனே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.(இ-7)


## சூரியன் திருமண சேவை

**மணமகள் தேவை**

பிறந்த திகதி:-9-1-1979 நட்சத்திரம்:-கார்த்திகை

சூரியன்-செவ்:- 11ல் வேலை:- விரிவுரையாளர்

**தொடர்பு:- சூரியன் திருமண சேவை,**
**561-K.K.S. வீதி,**
**மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.**

(7802)


# மோசடியில் ஈடுபட்ட ஆசிரியைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட ஆசிரியை சம்பந்தமாக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சில தரப்பினரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் குறித்த ஆசிரியை சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர குறித்த ஆசிரியை சம்பந்தமாக பரீட்சைகள் திணைக்களத்தாலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடைய மாணவன் சம்பந்தமாக பரீட்சைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் கைத்தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் மாணவன் ஒருவனுக்கு விடைகளை வழங்கிய பெண் ஆசிரியை ஒருவரும் மாணவனும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாராளுமன்றத் தேர்தலை நடத்தக் கோரி காத்தான்குடியில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!



(கொழும்பு)

நாடு இன்றிருக்கும் சூழ்நிலையில் உடனடியாக பாராளுமன்றத் தேர்தலை நடத்தி ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பதற்காக காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் மீரா ஜும்ஆ பள்ளிவாசலின் ஜும்மா தொழுகையை தொடர்ந்து பள்ளிவாசலின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காத்தான்குடி . ஜனநாயகத்துக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிகளவிலானோர் கலந்து கொண்டிருந்ததுடன், உடனடியாக பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியவாறான பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (இ-7)

## வேலணை பிரதேச சபை

# 2019ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2019 தொடக்கம் 31.12.2019 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 10.12.2018 முதல் 21.12.2018 மதியம் 2.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 24.12.2018 பி.ப. 1.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி:-24.12.2018 பி.ப. 2.30 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும்கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | | 2000 | 5000 | 24,750.00 |
| 2 | வேலணை அம்பிகைநகர் மீன் சந்தை | | 2000 | 5000 | 12,800.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | | 2000 | 5000 | 6500.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 4 | வேலணை துறையூர் மீன் சந்தை (புதிய கட்டடம்) | | 2000 | 10,000 | 198,000.00 |
| 5 | கடை இல-2 கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | 1000 | 2000. | 5000 | 28,440.00 |
| 6 | கடை இல-4 கருவாட்டு கடை | 1000 | 2000 | 5000 | 31,284.00 |
| 7 | கடை இல-5 கருவாட்டு கடை | 1000 | 2000 | 5000 | 31,284.00 |
| 8 | கடை இல-6 கோழிக்கடை | 1000 | 2000 | 5000 | 30,345.00 |
| | வேலணை பொதுச்சந்தை(6ம் வட்டாரம்) | | | | |
| 9 | மரக்கறி, மீன் | | 2000 | 5000 | 30,050.00 |
| 10 | சிற்றுண்டிச்சாலை | 750 | 2000 | 10,000 | 24,840.00 |
| | புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத் தொகுதியும் | | | | |
| 11 | கோழிக்கடை | 500 | 2000 | 5000 | 61,555.00 |
| 12 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600 | 2000 | 5000 | 14,058.00 |
| 13 | கடை இல-6 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 14 | கடை இல-7 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 15 | கடை இல-2 (உப அலுவலகத்திற்கு அருகாமை) | 800 | 2000 | 9600 | 96,000.00 |
| 16 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | | 2000 | 5000 | 13,500.00 |

பொதுவான நிபந்தனைகள்:- சந்தை, கோழிக்கடை

1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2) கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
3) கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர் பிரதேச சபை வேலணை எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 24.12.2018ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
4) பொதுச் சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவு உள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.
5) கடைகள், இறைச்சிக்கடை, வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.
6) தெரிவு செய்யப்படும் இறைச்சிக் கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 2/3 பகுதியையும் ஏனைய கேள்விகாரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 28.12.2018ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
7) பராமரிப்பு வேலைகள், குத்தகைதாரர்களாலேயே சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
8) தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கோள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியாது.
9) கேள்விப் படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உடன்படிக்கைகளை இரத்துச்செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.
10) மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும், கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

நிபந்தனைகள்-கடைத்தொகுதி

1. ஒருவர் ஒருகடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
2. கேள்வியில் சித்தி பெற்றவர்கள் குறித்த கேள்வித் தொகையினை Key Money ஒரேதடவையில் செலுத்துதல் வேண்டும்.
3. மூன்றுமாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப் பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசெம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசெம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
5. கேள்விச் சித்திகாரராகத் தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.
6. சித்திகாரர், குத்தகைதாரர், வேலணை பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக் கிணங்க நடந்து கொள்ள வேண்டும்.
7. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
8. பராமரிப்பு வேலை, கழிவகற்றல் என்பவற்றை தாங்களே மேற்கொள்ளல் வேண்டும்.

(C4640)

**திரு. ந.கருணாகரகுருமூர்த்தி**
**தவிசாளர்**
**பிரதேச சபை வேலணை.**

**திகதி:- 2018.12.08**

# கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். பிரதேச கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலாசார விழா எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். குருநகர் கலாசார மண்டபத்தில் யாழ். பிரதேச செயலர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த கலாசார விழாவில் "யாழ்பாடி" நூல் வெளியீடு, இளங்கலைஞர் கௌரவிப்பு, யாழ். ரத்னா விருது வழங்கலுடன் நாட்டுக் கூத்து, நாடகம், நடனம் இஸ்லாமிய கஸீதாவும் இடம்பெற வுள்ளன. (இ


**கட்டட இடிபாடுகள் விற்பனைக்குண்டு**
**தொடர்புகளுக்கு:-071 103 4969**
**கொக்குவில்**
(7825)

**"சொர்க்கம் திருமணசேவை" அமெரிக்காவில்**

(USA) வசிக்கும் 29 வயதுடைய செவ்வாய்க் குற்றம் உள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளைத் தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 36 வயதுடைய ஐயர் குலத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 37 வயதுடைய உயர்குல றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றோம்.

**தொடர்புகளுக்கு:- TP&Viber**
**0014166661855,0016475043336**
(C4647)


# ‘மக்கள் நிதியை செலவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை’

## ஹர்ஷ டி சில்வா எதிர்ப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்ட பின்னரே நிதி பயன்பாடு குறித்து பாராளுமன்றத்தில் தீர்மானிக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளாார்.

மூன்றாவது வாரமாகவும் விகாரமா தேவி பூங்காவில் தொடரும் சத்தியாக்கிரக போராட்டத்தில் நேற்று கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு' தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஜனவரி மாதம் முதல் நிதியைப் பிரயோகிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லாவிட்டாலும் , பொதுத்தேர்தலுக்கான நிதியினை ஜனாதிபதியால் ஒதுக்கீடு செய்யமுடியும் .எவ்வாறாயினும் , பெரும்பான்மை விருப்புடைய புதிய பிரதமர் மற்றும் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டதன் பின்னரே நிதிப்பயன்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் தீர்மானிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# தீர்ப்பு குறித்து அச்சமில்லை

## சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்பு குறித்து எனக்கு எதிர்வு கூற முடியாது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் சஜித் பிரேமதாஸ, நீதிமன்றத் தீர்ப்பு குறித்து எமக்கு அச்சமில்லை. எவ்வகையான தீர்ப்பானாலும் அதனை ஏற்றுக்கொண்டு தொடர்ந்தும் மக்களுக்கு பணியாற்ற நாம் தயார் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றக் கலைப்புக்கெதிரான வழக்கு தொடர்பில் நேற்று முன்தினம் ஆஜராகியிருந்த வேளை நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்க்ண்டவாறு கூறினார்.

சிலர் தமக்கு எதிராக தீர்ப்பு வந்துவிடுமோ என்ற அச்சத்தினால் குளறுபடிகளில்ஈடுபடுவதைக் காணமுடிகின்றது. இவ்வாறான கலகக்காரர்கள் ஐ.தே.கவில் இல்லை.

மேலும் நீதிமன்ற வளாகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதை அவதானித்தேன். இப் பாதுகாப்பு இன்று மட்டுமல்ல 365 நாட்களும் பாராளுமன்றம்,நீதிமன்றம் ஏன் நாட்டு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டிய ஒன்று. வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்ப்புக்காக நாட்டு மக்களுடன் நானும் காத்திருக்கின்றேன் எனவும் சஜித் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# ‘சஜித்துக்கு தகுதி இல்லையாம்’

## சானக எம்.பி.கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு பிரதமர் அல்ல கிராமிய நலன் புரி உறுப்பினராவதற்கு கூட தகுதி கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜன்நாயகம் பற்றி தற்போது பேசுகின்ற பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவின் ஊடாகவே பாரிய மோசடிகள் இடம் பெற்றுள்ளள.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை விளம்பரப்படுத்துவதற்க்காகவே பத்து மாத காலத்திற்குள மாத்திரம் 3000 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

மக்களின் வரிப்பணத்தினை தனது அமைச்சின் பணிகளின் விளம்பரத்திற்காக பயன்படுத்தும் எவ்வித அதிகாரங்களும் இவருக்குக் கிடையாது என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

# 24 இலட்சத்து 48 ஆயிரம் பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சென்னையிலிருந்து கடத்திவரப்பட்ட தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

36 வயதுடைய கல்கமுவை குருநாகலைச் சேர்ந்த ஆணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரைக் கைதுசெய்த வேளையில் அவரது பயணப் பொதியிலிருந்து 233.25




கிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்டுகள் மூன்று மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் 24 இலட்சத்து 48 ஆயிரத்து 600 ரூபாய் பெறுமதியுடையது என மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# காடுகளாக மாறுகின்றன தேயிலைத் தோட்டங்கள்



(ஹற்றன்)

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமது சம்பள உயர்வு கோரி பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை தொடரும் இந்நிலையில் மஸ்கெலியா பிளான்டேசனுக்குச் சொந்தமான தோட்டங்கள் காடாகி வருகின்றன.

தொழிலாளர்கள் பணிக்கு செல்லாமையால் தேயிலை செடியின் மேல் கொடிகள் மற்றும் புல் வளர்ந்துள்ளது.

அத்துடன் பாம்பு போன்ற விலங்குகள் தோட்டங்களில் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அதனால் உடன் இதற்கு தீர்வொன்றை காண்பதற்கு தோட்ட முகாமைத்துவம் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)




❖1940-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய, மற்றும் இந்தியப் படைகள் இத்தாலியப் படையினரை எகிப்தில் தாக்கினர்.

❖1946-இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைக்கப்பட்டது.

❖1986-இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி உள்ளிட்ட 10 தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1868-ஃபிரிட்ஸ் ஹேபர், நோபல் பரிசு பெற்ற போலந்து-செருமானிய வேதியியலாளர் (இ. 1934)

❖1870-ஜடா இசுகட்டர், இந்திய மருத்துவர், மதப் பரப்புனர் (இ. 1960)

❖1881-ரிச்சர்ட் லயனல் ஸ்பிட்டெல், இலங்கை வைத்தியர், எழுத்தாளர் (இ. 1969)

❖1906-கிரேசு ஹாப்பர், அமெரிக்க கணினியியலாளர் கோபால் நிரலாக்க மொழியை உருவாக்கியவர் (இ. 1992)

❖1913-ஓமாயி வியாரவாலா, இந்தியப் புகைப்படக் கலைஞர் (இ. 2012)

❖1917-கே.பி.ஜானகி அம்மாள், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (இ. 1992)

❖1919-வெ.தட்சிணாமூர்த்தி, இந்திய திரைப்பட இசையமைப்பாளர் (இ. 2013)

❖1919-எ.கி.நாயனார், இந்திய இடதுசாரி அரசியல்வாதி (இ. 2004)

❖1927-பி.எஸ்.மணிசுந்தரம், இந்தியக் கல்வியாளர், கணனி அறிவியலாளர் (இ. 2013)

❖1930-சுப.சதாசிவம், தமிழக எழுத்தாளர்

❖1934-சூடி டென்ச், ஆங்கிலேய நடிகை

❖1936-கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, இலங்கை கத்தோலிக்க ஆயர்

❖1946-சோனியா காந்தி, இத்தாலிய-இந்திய அரசியல்வாதி

❖1981-தியா மிர்சா, இந்திய நடிகை

**இறப்புகள்**

❖1989-மதுரை சோமு, தமிழகக் கர்நாடக இசைப் பாடகர் (பி. 1919)

❖1997-சிவராம காரந்த், கன்னட எழுத்தாளர் (பி. 1902)

❖2006-சு.வில்வரத்தினம் ஈழத்துக் கவிஞர் (பி. 1950)

சிறப்பு நாள்

❖விடுதலை நாள் (தன்சானியா, பிரித்தானியாவிடம் இருந்து 1961)

❖பன்னாட்டு ஊழலுக்கு எதிரான நாள்




| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 360 | 400 |
| தக்காளி | 220 | 300 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 160 | 120 | 160 | 120 |
| கரட் | 220 | 160 | 210 | 300 |
| பூசணி | 50 | 50 | 35 | 80 |
| புடோல் | 120 | 140 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | ,120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 110 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 380 | 250 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 180 | 200 | 250 | 120 |
| லீக்ஸ் | 120 | 180 | 140 | 240 |
| பீற்றூட் | - | 160 | - | 200 |
| கறிமிளகாய் | 240 | 340 | 200 | 280 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 120 | 150 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | - | 100 | 90 | 100 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 40 | 60 |
| தேசிக்காய் | 440 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 250 | - | 200 |
| வெங்காயப்பூ | - | - | - | - |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 120 | 80 |



யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் ஆலய குருமனை கட்டுமானப் பணி நேற்றுக்காலை யாழ்.ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஆரம்பிக்கப்பட்டது. (படங்கள்:- குருநகர் செய்தியாளர்)

# "டொலர்களுக்கு சமாதானத்தை அழிக்காதே" மட்டக்களப்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்!



(வவுணதீவு)

மட்டக்களப்பு - வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமையை கண்டித்து மட்டக்களப்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"டொலர்களுக்கு சமாதானத்தினை அழிக்காதே", "வடகிழக்கின் அமைதியில் கை வைக்காதே", "சமாதானத்திற்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டத்தினை நடைமுறைப்படுத்து", "சமாதானத்தினை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒன்றுகூடுங்கள்" போன்ற வாசகங்களை தாங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது பொலிஸாரின் படுகொலைக்கு எதிராக பல்வேறு கோசங்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களினால் எழுப்பப்பட்டது.

கொலையாளிகள் தங்களது தவறை உணர்ந்து சரணடைந்து இயல்பு நிலையினை ஏற்படுத்த முன்வர வேண்டும் என்றும், இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடைபெறா வண்ணம் உரிய தரப்பினர் செயற்படவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (இ-7)

# நவீன சந்தைத் தொகுதியில் பூட்டப்பட்ட நிலையில் கடைகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் வாடகையைச் செலுத்தாத 14 கடைகளுக்கு சிவப்பு அறிக்கை வழங்கப்பட்டு அதன் பின்பும் நிலுவையைச் செலுத்தாத கடைகள் நகரசபையினரால் கைப்பற்றப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வின் போதே இவ் விடயம் தொடர்பாக உறுப்பினர்களுடன் கலந்துரையாடி சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் அதிக கடைகள் பூட்டப்பட்டுக் காணப்படுவது, நகருக்கு அழகல்ல என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் அதிக கடைகள் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இது நகருக்கு அழகல்ல. யாழ்.மாநகரில் எந்தவொரு கடையும் பூட்டப்பட்ட நிலையில் காணப்படமாட்டாது. கடை பெற முடியாதவர்களும், அதிக வாடகை கொடுத்து கடை நடத்துபவர்களும் எமது நகரில் உள்ளனர். கடையை வழங்கும் போது நாம் ஒப்பந்தத்தில் கடையை மூடி வைத்து களஞ்சியமாக பயன்படுத்தக் கொடுக்கவில்லை. இது தொடர்பாக கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி விரைவில் முடிவெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# வெளிநாட்டு துப்பாக்கி வைத்திருந்த இருவரை தேடி பொலிஸ் வலைவீச்சு



(உடுகம)

உடுகம - கொத்தல்லாவ வீதியில் இரவு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியும் அதில் பயணித்தோர் நிறுத்தாது தப்பிச்சென்று மோட்டார் சைக்கிளை கைவிட்டு சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் பிரதான மின் விளக்கு ஒளிராமையின் காரணமாகவே பொலிஸார் மேற்படி மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர்களை சமிக்ஞை காட்டி நிறுத்த முற்பட்டுள்ளனர்.

ஆயினும், அதில் பயணித்தோர் தப்பிச் சென்று மோட்டார் சைக்கிளை கைவிட்டுச் சென்றுள்ளனர். அதனையடுத்து, மோட்டார் சைக்கிளைச் சோதனையிட்ட போது வெளிநாட்டு தயாரிப்பு துப்பாக்கி உட்பட துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மேலும் இச்சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள், வெளிநாட்டுத் தயாரிப்பு துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பன பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

தப்பிச்சென்ற சந்தேக நபர்களை தேடும் நடவடிக்கைகளை உடுகம பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சன் ராமநாயக்கவை பெப்ரவரி 26 ஆம் திகதி ஆஜராகுமாறு உத்தரவு



(கொழும்பு)

ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உச்சநீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் புதிய சட்டமொன்றை உருவாக்க சட்டமாஅதிபர் எதிர்பார்த்திருப்பதாக மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சஞ்சே ராஜரட்ணம் நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் ரஞ்சன் ராமநாயக்க எம்.பியால் உச்ச நீதிமன்றம் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசியலமைப்பின் 105 ஆவது சரத்துக்கு முரணாக அமைந்துள்ளதால் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சஞ்சே ராஜரட்ணம் தெரிவித்தார்.

நீதிபதி ஈவாவனசுந்தர மற்றும் நீதிபதி எல்.டி.பி தெஹிதெனிய ஆகியோர் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தனது மனுதாரருக்கு இன்னும் அழைப்பாணை கிடைக்கவில்லையென்றும் உச்ச நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து உச்ச நீதிமன்றம் அவரை மீண்டும் பெப்ரவரி 26 ஆம் திகதி ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்தது.

உச்ச நீதிமன்றத்தில் முன்னெடுத்துச் செல்லப்படும் விசாரணை தொடர்பாக நீதித்துறையை அவமதிக்கும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. ஊடகமொன்றில் தரக்குறைவான கருத்தை முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாகவே உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

இதேவேளை நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. மீது தாக்கல் செய்யப்பட்ட இன்னுமொரு வழக்கு நாளை 10 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஒளிவிழா பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் கலந்து கொண்டார்.

# ரஷ்யாவிலிருந்து இரண்டு தரமற்ற புற்றுநோய் மருந்துகள் இறக்குமதி

## -நிதி நட்டத்தை விடவும் மரணங்கள் மதிப்பிட முடியாதவை-



ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற புற்றுநோய் மருந்துகளால் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டுக்கு 3.8 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் சங்க தலைவர் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

மேற்படி இரண்டு மருந்துகளும் உலகின் எந்த பரிசோதனைக்கூடங்களிலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லையென்றும் இதனால் நாட்டுக்கு ஏற்பட்ட நிதி தொடர்பான நட்டத்தையும் விட மரணங்களை மதிப்பிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறு மரணங்களை ஏற்படுத்திய நபர்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாரஹேன்பிட்டி அபயராமயவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பில் தகவல் அறிந்த உடனேயே முன்னாள் சுகாதார அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் அறிவித்ததாகவும் அதனையடுத்து அவர் அமைச்சின் செயலாளரை அழைத்து டென்டர் முறைமை அல்லாமல் இனிமேல் எந்தவொரு மருந்தையும் இறக்குமதிசெய்யக்கூடாது என பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

மேற்படி மருந்து மாபியாவை இலகுவாக கையாள்வதற்கு வசதியாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ரூமி முஹம்மட் என்பவரை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக நியமித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு மேலாக நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 23 மருந்துகளில் 20 மருந்துகளை உற்பத்தி செய்வதை முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தடை செய்திருந்தார்.

அவர் தமக்கு தேவையானவர்களின் நலன் கருதி தனியார் நிறுவனங்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுத்து அவர்களுக்கூடாக வருமானங்களை பெற்று வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

புற்றுநோயாளர்களுக்காக வழங்கப்படும் மருந்தான ட்ரஸ்டு சுமெப் ஊசி மருந்து மூலமே இந்த மருந்து மாபியா முதலில் ஆரம்பித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அதிவேகத்தில் பயணித்த இ.போ.ச. பேருந்து கொள்கலன் பாரவூர்தியுடன் மோதி விபத்து



(குருநாகல்)

குருநாகல்- தம்புள்ளை வீதியில் கலவெல-கனாதன பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச.பேருந்தொன்றும் வெங்காயத்தை ஏற்றிச் சென்ற கொள்கலன் பாரவூர்தியொன்றும் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் பேருந்தின் சாரதியும் இரண்டு பயணிகளும் காயமடைந்துள்ளனர். பேருந்தின் அதிக வேகம் மற்றும் சீரற்ற காலநிலையால் வீதியில் வழுக்கிச் சென்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் இரண்டு வாகனங்களின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## ‘தேவாரகானாமிர்தம்’ இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெய்வத்தமிழ்ச் சுடர் "கலாபூஷணம்" சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் குரலில் பாடப்பெற்ற "தேவாரகானாமிர்தம்" வீடியோ,ஓடியோ இறுவெட்டு வெளியீடு இன்று 9 ஆம் திகதி காலை 9.15 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் இடம்பெறும். இவ் இறுவெட்டை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வெளியிட்டு வைப்பார். (இ)





காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தின் பரிசளிப்பும் கலை நிகழ்வும் அண்மையில் நல்லூர், துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆர்.ரி.ஜெயசீலன் தம்பதியினர் கலந்து கொண்டனர்.





தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவா தியோகேந்திரனின் 67 ஆவது பிறந்த தினமாகிய 02.12.2018 அன்று அவரால் நற்பணிக்காக பல உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் போது உதவி பெற்ற பயனாளிகளையும் வழங்கப்பட்ட உதவித் திட்டங்களில் ஒருபகுதியையும் படங்களில் காணலாம்.

# 1978 அரசியலமைப்பில் இன்னுமே திருத்தம் செய்யப்படாத விடயம்

பிரித்தானியரிடமிருந்து 1948 இல் சுதந்திரம் கிடைத்ததையடுத்து இலங்கையில் மூன்று அரசியலமைப்புகள் இருந்துள்ளன. அவை சோல்பரி அரசியலமைப்பு (1946), முதலாவது குடியரசுஅரசியலமைப்பு (1972), இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு (1978) இந்த மூன்று அரசியலமைப்புகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன.

சோல்பரி அரசியலமைப்பு "வெஸ்ட் மினிஸ்டர்" முறையிலான அரசாங்கத்தைப் பின்பற்றியது. அதன்படி பிரிட்டனின் ஆறாவது ஜோர்ஜ் மன்னர் நாட்டின் தலைவராவார். இந்த அரசியலமைப்பை வரைந்தவர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ்.

சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக அவர் 29 (2) என்ற பிரிவை அரசியலமைப்பில் சேர்ந்திருந்தார்.

இது அயர்லாந்தின் அரசியலமைப்பில் இருந்து எடுக்கப்பட்டு சோல்பரி அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

1972 இல் உருவாக்கப்பட்ட முதலாவது குடியரசு அரசியலமைப்புஇலங்கையை முடியாட்சியில் இருந்து குடியாட்சிக்கு மாற்றியது. பிரிட்டிஷ் மகாராணி தொடர்ந்து நாட்டின் தலைமையாக இந்த அரசியலமைப்பில் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக இந்த அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் என்ற ஒரு ஜனாதிபதி நாட்டின் தலைவராக இருந்தார்.

அடிப்படை உரிமைகள் மற்றும் அரச கொள்கையின் பொதுக் கட்டளை தத்துவங்களும் இதில் சேர்க்கப்பட்டன. பௌத்தத்துக்கு முன்னணி இடம் இந்த அரசியலமைப்பில் வடிக்கப்பட்டது.

இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு 1978 இல் கொண்டுவரப்பட்டது. இது இலங்கையை நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய ஜனாதிபதியின் கீழ் கொண்டு வந்தது. இது வெஸ்ட் மினிஸ்டர் முறையை விட பெரிதும் மாறுபட்டது.

'ஜனாதிபதியின் கீழான அரசாங்க முறை' என்று இது அழைக்கப்பட்டது. எனினும் இது தொடர்பாக செய்யப்பட்ட 19வது திருத்த சட்டத்தின்படி அரசியலமைப்பு பேரவையின் அறிவுரை மற்றும் சிபாரிசின்படி ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்ற வகையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் இந்த அரசியலமைப்பின்படி குறைக்கப்பட்டன.

இதனால் சர்வஜன வாக்கெடுப்பு இன்றி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 17 ஆவது திருத்தச் சட்டம் செயற்பட வழிவகுக்கப்பட்டது.

19ஆவது திருத்தச் சட்டம் ஜனாதிபதி முறையை பாராளுமன்ற முறையிலான அரசாங்கமாக மாற்றவில்லை. எனினும் 18ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த சில முன்னேற்பாடுகள் நீக்கப்பட்டு தகவல் உரிமை அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டது. இது 17ஆம் திருத்தச் சட்டத்தின் சில முன்னேற்பாடுகளை விஸ்தரித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்டபூர்வமானதா என்பதைப் பார்ப்போம். இந்த விடயத்தை ஆராயு முன்னர் அரசியலமைப்பு சட்டம் பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

அரசியலமைப்பு சட்டம் என்பது சட்டம் மற்றும் அரசியலின் கலவையாகும்.

1978 அரசியலமைப்பில் ஒரு சிக்கல் நிலை இருந்ததை அமரர் என். எம். பெரேரா சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதியும் பிரதமரும் இருவேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பின் ஒரு பாரதூரமான அல்லது இக்கட்டான நிலை ஏற்படலாம் என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் 19ஆவது திருத்தச் சட்டத்திலும் அது திருத்தப்படவில்லை. எனினும் 19ஆவது திருத்தச் சட்டத்தின் வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான அரசாங்கத்தின் சில அம்சங்கள் இடம் பெற்றிருப்பதை மறுப்பதற்கில்லை.

லக்சிறிமெண்டிஸ்

# அதிகாரத்தை தக்கவைக்க மைத்திரி - மகிந்த சூழ்ச்சி

## அகிலவிராஜ் காரியவசம் காட்டம்



(கொழும்பு)

"சட்டவிரோதமாக இடம்பெற்ற பிரதமர் நியமனத்தைத் தக்கவைப்பதற்கான மைத்திரி - மகிந்த தரப்பினரின் சூழ்ச்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்துள்ளமையால், தமது முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகவுள்ள 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் குறைகூற ஆரம்பித்துள்ளனர்" என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைக்கு 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தமே காரணம் எனவும் அதன் உள்ளடக்கங்கள் தெளிவானதாக அமையவில்லை எனவும் எனவே 19 ஆவது அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மைத்திரி - மகிந்த தரப்பினர் பரவலாகக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்விடயம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று வினவிய போதே அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னர் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அதுவரை காலமும் நாட்டின் ஜனாதிபதிக்குக் காணப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தில் மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியதுடன், பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் அமைந்திருந்தது.

அதற்கு அன்று ஆதரவளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ஆதரவு அணியினர் தற்போது 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மீது குற்றம் சுமத்துகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்திருத்தப் பெறுபேறுகள் அடுத்தவாரம் வெளியாகும்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளமையால் எதிர்வரும் வாரங்களில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையின் பெறுபேறுகளைக் கல்வி அமைச்சு மற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று இலட்சத்து 55 ஆயிரத்து 326 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சாவகச்சேரி சந்தையால் சபையில் சலசலப்பு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கான டென்டர் (உரிமம்) கோரக் கூடாது என்று யாருடனாவது டீல் இருக்கா? என சபையில் வைத்து செயலாளரை நோக்கி சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஜெயக்காந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். சாவகச்சேரி நகர சபை யின் அமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சாவகச்சேரி பொதுச்சந்தையானது நட்டத்தில் இயங்கி வருவதாகவும் ஆகவே அதனை வருகின்ற ஜனவரி மாதத்தில் இருந்து தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி வருமானம் ஈட்டும் வழியைப் பார்க்க வேண்டும் எனவும் நகரசபை உறுப்பினர் ஜெயக்காந்தன் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது பெரும்பான்மை உறுப்பினர்கள் தை மாதம் ஒப்பந்தகாரரிடம் சந்தையை வழங்க மறுப்புத் தெரிவித்திருந்தனர். இதற்கு சபையின் தீர்மானம் எதுவோ எமது நடவடிக்கையும் அதுவாக இருக்கும் என செயலாளர் தெரிவித்த போது நகரசபை உறுப்பினர் ஜெயக்காந்தன் "ரெண்டர் (உரிமம்) கோரக் கூடாது என்று உங்களுக்கு எவருடனாவது டீல் இருக்கா?" எனக்கேள்வி எழுப்பினார்

உடனடியாக குறுக்கிட்ட உப தவிசாளர் பாலமயூரன் "உங்களுக்கு ஒப்பந்தகாரர் எவருடனாவது டீல் இருக்கா? அதனால் தான் தனியாருக்கு கொடுக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்புகிறீர்களா?" எனப் பதிலடி கொடுத்துள்ளார்.

சாவகச்சேரி பொதுச்சந்தையை நகரசபையினரே நடத்துவதா? அல்லது தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதா? என்ற விவாதம் சபையில் சுமார் மூன்று மணி நேரம் இடம்பெற்றது.

இறுதியில் எதிர்வரும் பங்குனி மாதம் வரையும் நகரசபையே சந்தையை நடத்தும் எனவும் மூன்று மாத காலத்தில் வருகின்ற இலாப,நட்டத்தைப் பார்த்து சித்திரை மாதம் ஒரு முடிவுக்கு வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-30)

# பதவி ஆசையை மறைக்க மகிந்த முயற்சி செய்கிறார்

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

புதிய சமஷ்டி முறை அரசியலமைப்பு வருவதை தடுக்கவே, நான் பிரதமர் பதவியை ஏற்று ஆட்சியை கைப்பற்றினேன் என்று மகிந்த இன்று நடிகர் வடிவேலு போன்று நகைச்சுவை செய்கிறார்.

இது ஒரு தந்திரமான போலித்தனமும், கேலித்தனமும் நிறைந்த கட்டுக்கதை என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

"வாசுதேவ நாணயக்கார முதல் முறை மைத்திரியிடம் உரையாடி விட்டு, என்னிடம் வந்து பிரதமர் பதவியை ஏற்கச் சொன்னார்.

நான் வேண்டாம் என்றேன். இரண்டாம் முறையும் வந்தார். அப்போது அதை ஏற்றுக்கொண்டேன். எங்கள் மீதான வழக்குகளை தடுக்கவே நான் பதவியைக் கைப்பற்றினேன் என இன்று கூறுகிறார்கள்.

அது உண்மை இல்லை. இரண்டாம் முறை மைத்திரியிடம் உரையாடி விட்டு வாசுதேவ நாணயக்கார என்னிடம் வந்து பிரதமர் பதவியை ஏற்கச்சொன்ன போது அதை நான் ஏற்றுக் கொண்டதன் காரணம், ரணில் அரசாங்கம், ஒரு புதிய சமஷ்டி பிரிவினை அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவர இருந்தது. அதை தடுக்கவே நான் பிரதமர் பதவியை ஏற்று ஆட்சியை கைப்பற்றினேன்" என்று மகிந்த இன்று நடிகர் வடிவேலு மாதிரி நகைச்சுவை செய்கிறார்.

இத்தகைய ஒரு காரணத்தைக் கூறி, தன் பதவி ஆசையை மறைக்க மகிந்த ராஜபக்ஷ முயற்சி செய்கிறார். பதவி அதிகாரத்தை பெற்று தங்கள் குடும்ப அங்கத்தவர் மீதான வழக்குகளை தடுக்க முயற்சி செய்வதை, இன்று மறைக்க வெட்கமில்லாமல், இனவாதத்தையும் தூண்டி விடும் கருத்தை கூறுகிறார்.

உண்மையில் இங்கே ஒரு புது அரசியலமைப்போ, ஒரு வரைபோ கூட கிடையாது. ஆக, வழிகாட்டல் குழுவிலுள்ள மகிந்த பிரதிநிதிகளான தினேஷ் குணவர்த்தன, பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் கருத்துக்களையும் எங்கள் கருத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு இடைக்கால அறிக்கை மட்டுமே உண்டு.

வழிகாட்டல் குழு உறுப்பினர் என்ற முறையில் நான் கூறுவேன். சமஷ்டியை விடுத்து, முதலில் புது அரசியலமைப்பே ரொம்ப தூரத்தில் இருக்கின்றது. மேலும் மூன்று வருடங்கள் பேச்சில் போய்விட்டன. அப்படியே அது வந்தாலும் அது சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பெற வேண்டும்.

அடுத்தது, நாட்டில் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி அதில் வெற்றி பெறவும் வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் சென்று வாக்கெடுப்பு நடத்தி, அதன்மூலம் வரும் எந்த ஒரு தீர்வையே நாம் ஏற்போம். அதுவே நிரந்தரமானது என எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனும் கூறியுள்ளார்.

ஆகவே, மகிந்த கூறுவது போல் சமஷ்டி முறை பிரிவினை அரசியலமைப்பு ஒருவேளை வந்தாலும்கூட அதை தடுக்க மகிந்த ராஜபக்ஷவுக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன.

இந்நிலையில், "இதோ, சமஷ்டி வருகிறது, அதோ பிரிவினை வருகிறது" எனக் கூறி, ஆட்சியை பிடிக்கும் தன் அதிகார ஆசையை மறைக்க ஒரு தந்திரம் நிறைந்த கதையை மகிந்த இப்போது அவிழ்த்து விட்டுள்ளார். அதன்மூலம் சிங்கள மக்களையும் தூண்டி விடுகிறார் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்த எம்.பியின் அநாவசிய செலவுகளை யார் ஈடுசெய்வது

### சரத் பொன்சேகா கேள்வி



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 113 பெரும்பான்மையைக் கூட நிரூபிக்க முடியாதவர்கள் 150 பெரும்பான்மை ஆதரவுடன் அரசியல் அமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதாக குறிப்பிடுவது வேடிக்கையாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக கொழும்பு விகாரமாதேவிப்பூங்காவில் தொடரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை அவரது அரசியல் சூழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

18 ஆம் திருத்தத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்தி அதனூடாக தான் தொடர்ந்து ஆட்சியதிகாரத்தில் இருக்க ஒரு தரப்பினர் ஜனாதிபதியை பகடைக்காயாக பயன்படுத்துகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ தற்போது சாதாரண பாராளுமன்ற உறுப்பினராகவே திகழ்கின்றார். அவர் விஜயராம மாவத்தையிலிருந்து பாராளுமன்றத்திற்கு வருவதற்கு ஹெலிகொப்டர் வழங்கப்பட்டுள்ளது.


இதற்கான செலவுகளை யார் ஈடுசெய்வது? இங்கு பொதுமக்களின் பணம் அநாவசியமான முறையில் செலவு செய்யப்படும் நிலை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரணைமடுக்குளத்தின் 5 வான்கதவுகள் திறப்பு

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் ஐந்து வான் கதவுகள் நேற்று முற்பகல் 11 மணியளவில் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.சுதாகரனின் கண்காணிப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



குளத்திற்கான நீர் வரவு அதிகரித்துள்ளமையால் நீர் மட்டம் 36.5 அடியாக உயர்ந்துள்ள நிலையில் நேற்றையதினம் 14 வான்கதவுகளில் ஐந்து கதவுகள் 150 மில்லி மீற்றர் அளவில் திறக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றமையால் முன்னெச்சரிக்கையாக ஐந்து வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

அத்துடன் குளத்தின் மேல் பகுதியிலிருந்து வரும் அதிகளவான நீரை வெளியேற்றவும், எதிர்வரும் நாட்களில் கிடைக்க இருக்கும் மழை வீழ்ச்சியினால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை தடுக்கும் நோக்குடனும் இவ்வாறு கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் நேற்று வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையால் தாழ்நிலப்பகுதியில் எவ்வித பாரியளவிலான பாதிப்புக்களும் ஏற்படாது எனவும், தாம் தொடர்ந்தும் கண்காணிப்பில் உள்ளதாகவும் இதன்போது அவர் தெரிவித்தார். (2-315-312)

# மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட 260 மனித எச்சங்கள் நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன

(மன்னார்)

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியானது 113 ஆவது நாளாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.



தற்போது மனிதப் புதைகுழியானது மேலும் ஆழப்படுத்தப்பட்டும் அகலப்படுத்தப்பட்டும் மேலும் மனித எச்சங்கள் காணப்படுகின்றனவா என ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தொடர்ச்சியாக மனித எச்சங்கள் மற்றும் தடயப் பொருட்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

இதுவரை மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து 266 முழு மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் 260 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மையில் மீட்கப்பட்ட இரும்புக் கம்பியால் கால்கள் பிணைக்கப்பட்ட மனித எச்சம் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு தற்போது நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (2-285)

# தாய்-சேய் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பு

(குருமன்காடு)

முன்னாள் மீள்குடியேற்ற புனர்வாழ்வு பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தானினால் வவுனியா பாவற்குளம் யுனிற் 2 கிராமத்தில் தாய்-சேய் பராமரிப்பு நிலையத்திற்கு நேற்றைய தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட நிதியில் இருந்து இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த தாய்-சேய் பராமரிப்பு நிலையத்தின் மூலம் இக்கிராமத்தின் நீண்ட நாள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)




# வவுணதீவு சூட்டுச் சம்பவத்தை கண்டித்து ஈச்சங்குள மக்கள் நேற்று கவனயீர்ப்பு

(குருமன்காடு)

மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து கிராம மக்களின் ஏற்பாட்டில் வவுனியா ஈச்சங்குளத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.





போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் அதிகாரிகளின் கொலையைக் கண்டிக்கின்றோம், தேசிய நல்லிணக்கத்தை 30 வருட யுத்தத்தினால் நாம் துயரப்பட்டது போதும், ஒன்றுபட்டு எழுந்திடுவோம், பிரதேச அபிவிருத்திக்காக கைகொடுப்போம், சமாதானத்தை சீர்குலைக்கும் நபர்களை உடனடியாக கைது செய் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவு/ ஈச்சங்குளம் தவசியாகுளம் அ.த.க. பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமாகிய போராட்டமானது அமைதியான முறையில் ஈச்சங்குளம் 611 ஆவது இராணுவத் தலைமையகம் வரை சென்றடைந்தது.

அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, 611 ஆவது பிரிவின் இராணுவ தளபதி ஆகியவர்களிடம் கையளித்தனர். (2-250)

# வியாபார நிலையங்களுக்கு துருப்பிடித்த எண்ணெயை விநியோகித்த விநியோகஸ்தருக்கு தண்டப்பணம் அறவீடு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் துருப்பிடித்த கொள்கலனில் சமையல் எண்ணெய்விநியோகம்மற்றும் உணவுப் பொருட்களுக்கு சுற்றுத்துண்டு ஒழுங்கு விதிகளுக்கு முரணாக பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் என்பன வாகனத்தில் எடுத்துச் சென்று வியாபார நிலையங்களுக்கு விநியோகித்து வந்த விநியோகஸ்தருக்கு வவுனியா நீதிமன்றம் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக ஓமந்தை பொது சுகாதாரப் பரிசோதகர் க.சிவரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் பிரபல்யமான சமையல் எண்ணெய் விநியோகஸ்தர் ஒருவர் தனக்குச் சொந்தமான பார ஊர்த்தி ஒன்றில் துருப்பிடித்த நிலையிலிருந்த கொள்கலன் மற்றும் இயந்திர ஓயில் எஞ்சின் பரல் என்பனவற்றில் சமையலுக்குப் பயன்படுத்தும் எண்ணெயை களஞ்சியப்படுத்தி விநியோகம் மேற்கொண்டு வந்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி ஓமந்தைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் பார ஊர்தியை வழிமறித்து பரிசோதனைக்குட்படுத்தியபோது வாகனங்களுக்கு இயந்திரத்திற்கு பயன்படுத்தப்படும் இஞ்சின் ஒயில் அடைக்கப் பயன்படுத்தப்படும் 210 லீற்றர் பரல் மற்றும் துருப்பிடித்த 800 லீற்றர் கொள்கலனில் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் களஞ்சியப்படுத்தி விற்பனைக்கு எடுத்து வரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அவற்றை கைப்பற்றியதுடன் மேலும் பாரஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருட்களுக்கு சுற்றுத்துண்டு ஒழுங்கு விதிகளுக்கு முரணாக பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டு பொருட்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து குறித்த விநியோகஸ்தர் மற்றும் உற்பத்தியாளருக்கு எதிராக வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் 3 வழங்குகள் ஓமந்தை பொது சகாதாரப் பரிசோதகரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழங்குகள் நேற்று முன்தினம் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிராளி குற்றத்தை ஏற்றுக்கொண்டதற்கு இணங்க 3 வழக்குகளுக்கும் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா நீதிமன்றத்தினால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்து விடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-281)

# காண்பியக்கலை கண்காட்சி-5 கிளியில் இன்றும் நாளையும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இன்றும் நாளையும் காண்பியக் கலை காட்சி-5 "வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்" எனும் தொனிப்பொருளில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஓவியர்களின் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இலங்கையின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஓவியர்கள் சிலர் இணைந்து வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்கள் என்ற ஒரு குழுவை 2017 பெப்ரவரி மாதத்திலிருந்து செயற்படுத்தி வருகின்றனர். இக்குழுவின் ஊடாக முல்லைத்தீவிலும், கொக்கட்டிச்சோலையிலும், மட்டக்களப்பிலும் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இதன் நோக்கம் பெண்களுக்கும், அனைவருக்கும் வன்முறைகளற்ற மகிழ்வான வாழ்வு அத்தோடு ஓவியத்தில் ஈடுபாடுள்ள மாணவர்களுக்கும் இளந்தலைமுறையினருக்கும் சமூக மாற்றத்திற்கான ஓவியங்கள் பற்றிய முன்னுதாரணங்களை வெளிப்படுத்தலும் ஓவியத்துறையில் ஊக்குவித்தலும் ஆகும் என இக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஜனாதிபதியின் கிராம சக்தி தொடர்பான செயலமர்வு



(குருமன்காடு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கிராம சக்தி தொடர்பான செயலமர்வு வவுனியா உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சபாலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வறுமையை ஒழித்தல் பாரிய இலக்கை அடையும் முகமாக கிராம சக்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி மக்களின் பொருளாதார விருத்திக்கான பல்வேறு உதவித் திட்டங்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தல் செயலமர்வு கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட தலைவர்கள் ஆகியோருக்கு இடம் பெற்றது.

இதில் மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (2-250)

உண்மையை புதைக்க முடியாது.
ஏனெனில் உண்மை தெய்வீகமானது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜனாதிபதித் தேர்தலை உடனே நடத்த முடியாது

## மைத்திரி நிராகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பல்வேறு தரப்புகள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு செவ்வி அளித்துள்ள அவர், அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தான் செயற்படப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

நாட்டின் அரசியலமைப் பின்படி, பதவியேற்ற நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனாதிபதி புதிய ஆணை கோரி, ஜனாதிபதி தேர்தலுக்கு அறிவிப்பை வெளியிட முடியும் என்ற நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்துவது பற்றி நான்தான் முடிவு செய்ய வேண்டும். அதனை செய்யும் திட்டம் என்னிடம் கிடையாது. ஏனையவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட நான் தயார் இல்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாவது, பதவிக் காலத்துக்குப் போட்டியிடும் திட்டம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி, அது பற்றி இப்போது முடிவு செய்ய முடியாது.

"அதுபற்றி இப்போது முடிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

கடந்த ஒரு மாதமாக நீங்கள் பார்த்தால் மணித்தியால அடிப்படையில் அரசியல் நடக்கிறது. ஊடகப் பணியாளர்களான நீங்கள், பல செய்திகளை வைத்திருக்கிறீர்கள். கடந்த ஐந்து வாரங்களில் இது நடந்தது.

ஒரு ஆண்டு காலத்திற்குள் என்ன நடக்கும் என்று இப்போது யார் சொல்ல முடியும? இப்போது எதையும் நாங்கள் கூற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெளிநாட்டுக்கு வேலைக்குச் சென்ற 222 இலங்கையர்கள் மரணம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்பிற்காக சென்ற 222 இலங்கைப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மாதவ தேசப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவிலேயே அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும், சவூதி அரேபியாவில் மாத்திரம் 70 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், "குவைத் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளிலும் இலங்கை பணியாளர்களும் உயிரிழந்துள்ளனர்.

கொலை, வாகன விபத்து, திடீர்மரணம், தற்கொலை போன்றவைகளால் இலங்கை பணியாளர்கள் உயிரிழக்கின்றனர்.

இந்த விடயத்தை கருத்தில் கொண்டு, இழப்பீடு பெற்றுக் கொடுப்பதற்கு அந்தந்த நாடுகளின் முகவர்களைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்யப்பட்ட பணியாளர்களுக்காக 5 இலட்சம் ரூபாய் வரையில் இழப்பீடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, விபத்துக்கள் மற்றும் சித்திரவதைக்குள்ளாகி மேலும் சில இலங்கை பணியாளர்கள் அங்கவீனமடைந்துள்ளனர்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கிறேண்டர் வெட்டியதில் இளைஞன் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் நேற்று மாலை இளைஞன் ஒருவன் காலில் சுவர் வெட்டும் கருவி தவறுதலாக வெட்டியதில் படுகாயமடைந்துள்ளார்.

கரவெட்டி கரணவாய் பகுதியைச் சேர்ந்த 31 வயதான இ.ரஜீவன் என்பவரே காலில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-30)

## வெற்றியை அடைந்திட...

- கடின உழைப்பால் முன்னேறுங்கள்.
- பொறாமை குணத்தை விட்டுவிடுங்கள்.
- போட்டி போட்டு வெல்ல வேண்டுமே தவிர பழிவாங்கும் நோக்குடன் போராடாதீர்கள்.
- வெற்றியை எளிதாய் அடைய அதன் இலக்குகளையே யோசித்துக்கொண்ட இருங்கள்.
- வெற்றியை அடைந்த பிறகும் அமைதியாகவே இருங்கள்.
- வெற்றியை தக்க வைத்துக்கொள்ள முயற்சியை ஒரு போதும் விட்டுவிடாதீர்கள்.
- வெற்றி எனும் வேர்கள் உறுதியாக இருந்தால் தான் சாதனை எனும் கனிகளும் சுவையானதாக இருக்கும்.

# மனித உரிமைகள் பிரகடனத்தின் 70ஆவது வருட நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 70 ஆவது வருட நிறைவையொட்டி ''அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் எங்கள் வாழ்வில் புதிய உலகத்தை உருவாக்கியது.

இதில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பிரதிபலிப்புக்கள் எனும் தொனிப்பொருளில் நாளை மறுதினம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.15 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை யாழ்ப்பாணம், 286, பிரதான வீதி, கலைத்தூது கலையரங்கத்தில் நடைபெறும். (இ-5)

# இரணைமடு அரசியலும் செத்தார் எலும்பும்

இரணைமடு அரசியல் என்றதும் இஃதென்ன புதுக்கதை என்று நீங்கள் நினைப்பீர்கள். இஃதொன்றும் புதுக்கதையல்ல.

நாட்டின் அரசியலில் இப்போது இரண்டு பிரிவுகள் உண்டு. அதில் ஒன்று ஜனாதிபதி மைத்திரி – மகிந்த தரப்பு. மற்றையது ரணில் – கூட்டமைப்பு.

இந்த இரண்டு தரப்பையும் இரு துருவங்கள் என்று கூறிக் கொள்வதைவிட, இரணைமடு என்று சொல்லிக்கொள்வதுதான் பொருத்துடையது.

இதை நாம் கூறும்போது; தென்பகுதி அரசியல் இரண்டாகப் பிரிந்து நிற்பதைப் பார்த்து இரணைமடு என்று கூறலாம் அதில் இன்னொரு பொருத்தப்பாடும் உண்டு.

மடு என்றால் தாழ்ந்த பகுதி அல்லது பள்ளம் என்ற பொருள் தருவதாகும். அந்த வகையில் இலங்கையில் ஒட்டுமொத்த எதிர்காலத்தையும் பள்ளத்தில் வீழ்த்தியவர்கள் இரண்டணிகளாக நிற்பதால் அதனை இரணைமடு என்று கூறிக்கொள்வது சரியானது.

ஆனால் எங்கள் மண்ணில் நீர்வளம் தரவல்ல இரணைமடுக்குளத்தை எங்ஙனம் இரணைமடு என்று கூறமுடியும் என நீங்கள் கேட்டால்,

இரணைமடுவில் இருந்து வடபுலத்து மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதில் தடைகளும் எதிர்ப்புக்களும் இருப்பதால் இரணைமடுக் குளமும் இரணைமடுதான்.

அதாவது யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்கு நீர் வழங்காததால் அது பெரும் பாதிப்பாகும்.

அதேநேரம் குளத்தில் தேங்குகின்ற நீரைத் தேக்கி வைக்க முடியாமல் அந்த நீரை வெளியே திறந்து விடுவதன் மூலம் அந்நீர் வீணாகிப் போவதால் அதுவும் இழப்பு என்பதால் இந்த இரண்டும் சேர்ந்து இரணைமடுவாயிற்று என்பது நம் பொருள் விளக்கம்.

சரி, செத்தார் எலும்பு என்பது என்ன என்று நீங்கள் வினவினால், தயவுசெய்து நத்தார் படை ஞானன் பசு... என்ற தேவாரத்துக்கு வாருங்கள்.

அந்த தேவாரத் திருப்பதிகத்தில் ... செத்தார் எலும்பும் அணிவான் திருக்கேதீச்சரத்தானே என்ற வரி ஈற்றில் வருவது காணுதற்குரியது.

இராமேஸ்வரத்தில் நின்றபடி மன்னாரில் உள்ள திருக்கேதீச்சர நாதனைப் பாடித் துதித்த சுந்தரமூர்த்தி நாயனார் எதற்காக செத்தார் எலும்பும் அணிவான் திருக்கேதீச்சரத்தானே என்று பாடினார் என்ற கேள்வி வரும்.

இதன்போதுதான் மன்னாரில் இப்படியெல்லாம் நடக்கும் – மனிதர்களைக் கொன்று புதைத்து விட்டால், செய்த கொலைகள்; இன அழிப்புகள் தெரியாமல் மறைந்து போகும் என்று சிலர் நினைப்பர்.

ஆனால் உண்மை அதுவல்ல. நீங்கள் மனிதர்களைக் கொன்று புதைத்தாலும் அங்கே (மன்னாரில்) வீற்றிருக்கும் திருக்கேதீச்சரத்தான் அந்த எலும்புக்கூடுகளை வெளியே எடுப்பிப்பான்.

உரிய தீர்வு தராவிட்டால் அந்த எலும்புகளை தானே அணிந்து கொண்டு ஊழித் தாண்டவம் ஆடுவான்.

அவ்வாறு ஆடும்போது அரசு கவிழும், பிரதமர் மந்திரி பதவிகள் இல்லாமல் போகும். ஆட்சி இருக்கிறதா? இல்லையா? என்ற சந்தேகம் எழும். நாடு ஸ்திரமற்றுப் போகும் என்பதை உணர்த்தவே அந்தப் பாடல்.

ஆக, செத்தார் எலும்பையும் காட்டித்தர வல்லவன் திருக்கேதீச்சரத்தான் என்பது அப்பாடல் வழி ஏற்புடையதாகும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- பகைமை சண்டைகளை எழுப்பிவிடும். தனக்கு இழைத்த தீங்கு அனைத்தையும் அன்பு மன்னித்து மறக்கும்.
- ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக. ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்.
- தொலைவில் இருக்கும் உடன்பிறந்தாரை விட அண்மையில் இருக்கும் நண்பரே மேல்.
- எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றோர். துன்பநாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்.
- உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்துப்போனால் அவர்களுக்கு உதவு.
- முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்குங்கள்.
- உங்களுக்குள் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி எல்லாருக்கும் எப்பொழுதும் நன்மை செய்யவே நாடுங்கள்.
- விருந்துக்கு அழைக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையுங்கள்.
- சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள். படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள்.

# ஓமானை வீழ்த்தியது இலங்கை அணி



இலங்கையில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கிண்ண போட்டியில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது.

பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை - ஓமான் அணிகள் மோதிய நிலையில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் அவிஸ்கா பெர்னாண்டோ, அஷிதா பொயகோடா, கமிண்டு மெண்டீஸ், ஷம்மு அஷன் ஆகிய நால்வரும் அரைச்சதம் அடித்து அசத்தினார்கள்.

இதன் காரணமாக இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 324 ஓட்டங்கள் குவித்தது.

அந்த அணியின் ஷம்மு அஷன் இறுதி வரை அவுட்டாகாமல் 57 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 325 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கிய ஓமன் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 215 ஓட்டங்களே எடுத்தது.

இதன்மூலம் 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது. இலங்கை அணி சார்பில் ஷேஹ்ன் மதுஷங்கா மற்றும் ஷம்மு அஷன் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினார்கள். (க)

# விக்கெட் கீப்பர் பிடியெடுப்பு டோனியின் சாதனையை சமன் செய்த பண்ட்



அதிக கேட்ச் பிடித்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற டோனியின் சாதனையை, இளம் வீரர் ரிஷப் பண்ட் சமன் செய்துள்ளார். அடிலெய்டு மைதானத்தில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலியா எதிரான டெஸ்டின் முதல் இன்னிங்சில் இந்திய அணி 250 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. ஆட்ட நேர முடிவில் அந்த அணி 88 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்நிலையில், நேற்று 3ஆம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த அவுஸ்திரேலியாவின் எஞ்சிய விக்கெட்டுகளை ஷமியும், பும்ராவும் கைப்பற்றினர்.

இதனால் அவுஸ்திரேலியா 235 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆகியுள்ளது.

பும்ரா வீசிய பந்தில் ஸ்டார்க் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்டிடம் கட்ச் கொடுத்து வெளியேறினார். அதேபோல் ஹெட் மற்றும் ஹேசல்வுட் ஆகியோரது கட்ச்களையும் பண்ட் பிடித்தார். இதன்மூலம் ஒரே இன்னிங்சில் அதிக கட்ச்(6) பிடித்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற டோனியின் சாதனையை சமன் செய்துள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் டோனி 6 கட்ச் பிடித்து அசத்தியிருந்தார். (க)



**கன்பொல்லை மக்கள் ஒன்றியம் கரவெட்டி மேற்கில் உள்ள கால்பந்தாட்ட வீரர்களுக்கு காலணிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. காலணிகளை கன்பொல்லை மக்கள் ஒன்றியத்தின் நிர்வாகத்தினர் கரவெட்டி மேற்கு கிராம சேவையாளர் ஊடாக வழங்கி வைத்தார்கள். (படம்:-கரணவாய் செய்தியாளர்)**

# ஆயுள் காலத்தடை கொடுமையானது ஸ்ரீசாந்த்



ஐ.பி.எல் போட்டியின் போது 'ஸ்பாட் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக இந்திய வேகப்பந்து வீரர் ஸ்ரீசாந்துக்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு இந்த நடவடிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் எடுத்தது.

ஸ்பாட்பிக்சிங் சூதாட்ட வழக்கில் ஸ்ரீசாந்த் உள்ளிட்டோரை விடுவித்து டில்லி உயர் நீதிமன்று கடந்த 2015ஆம் ஆண்டு உத்தரவிட்டது. இதை தொடர்ந்து தன் மீதான ஆயுட்கால தடையை நீக்க கோரி அவர் பி.சி.சி.ஐ.யிடம் முறையிட்டார். ஆனால் இதை கிரிக்கெட் வாரியம் நிராகரித்தது.

இதை தொடர்ந்து ஸ்ரீசாந்த் கேரளா உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். அவர் மீதான தடையை நீக்கி தனி நீதிபதி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் உத்தரவிட்டார். கிரிக்கெட் வாரியம் இதை எதிர்த்து கேரள உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தது. தனி நீதிபதி உத்தரவுக்கு தடை விதித்து கேரள உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது. இதை தொடர்ந்து ஸ்ரீசாந்த் மீதான ஆயுட் கால தடை நீடித்து வந்தது.

கேரளா உயர் நீதிமன்றின் உத்தரவை எதிர்த்தும், இங்கிலாந்து அணியில் தன்னை விளையாட அனுமதிக்க கோரியும் ஸ்ரீசாந்த் உச்சநீதிமன்றில் மேன்முறையீடு செய்தார்.

உச்சநீதிமன்றின் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது ஸ்ரீசாந்தின் சட்டத்தரணி சல்மான் குர்ஷித் ஆஜராகி கூறியதாவது.

இங்கிலாந்தில் உள்ள கிளப் போட்டிகளில் விளையாட ஸ்ரீசாந்துக்கு அழைப்பு வந்துள்ளது. அவருக்கு தற்போது 35 வயதாகிறது.

ஆயுள் கால தடையை நீக்காவிட்டால் அவரால் விளையாட முடியாது. அவருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் கால தடை மிகவும் கடுமையானது. சூதாட்ட வழக்கில் இருந்து அவரை டில்லி உயர் நீதிமன்று விடுவித்து இருந்தது. இதனால் அவரை இங்கிலாந்து கிளப்பில் விளையாட அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர் வாதாடினார்.

கிரிக்கெட் வாரிய சட்டத்தரணி கூறும் போது ஸ்ரீசாந்துக்கு எதிராக குற்றத்தை சுட்டிக்காட்டும் ஆதாரம் இருந்ததால் அவருக்கு கிரிக்கெட் வாரியம் ஆயுள்கால தடை விதித்தது என்றார். (க)



**அம்பிகைநகர் சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அம்பிகை நகர் ஸ்ரீமதி மகேஸ்வரி விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 2018 அண்மையில் இடம் பெற்றது. மேற்படி நிகழ்வில் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தார். குறித்த நிகழ்வில் மேற்படி விளையாட்டுக் கழகத்தினால் உதைபந்துகள் பெற்றுத் தருமாறு முதல்வருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.**


**அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட முதல்வர் தனது சொந்த நிதியிலிருந்து குறிப்பிட்ட விளையாட்டுக் கழகத்திற்கு ஒரு தொகுதி உதைபந்துகளை மாநகர முதல்வர் செயலகத்தில் வைத்து கடந்த 6 ஆம் திகதி கையளித்தார்.**

# உலகக் கோப்பை ஹொக்கி ஆஸி. அணி அபார வெற்றி

14ஆவது உலகக்கோப்பை ஆண்கள் ஹொக்கி போட்டி ஒடிசா மாநில தலைநகர் புவனேஸ்வரத்தில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பி பிரிவில் இடம் பெற்றுள்ள அவுஸ்திரேலிய மற்றும் சீனா அணிகள் மோதின.

தொடக்கத்தில் இருந்தே அவுஸ்திரேலிய வீரர்கள் அதிரடியாக ஆடினர். இதனால் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் கோலாக்கினர். அவர்களது துல்லியமான ஆட்டத்துக்கு சீன வீரர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை.

இறுதியில், அவுஸ்திரேலிய அணி சீனாவை 11- 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. 3 கோல்கள் அடித்த பிளாக் கோவர்ஸ் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்த போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா அணி புள்ளிப்பட்டியலில் பி பிரிவில் முதலிடம் பிடித்துள்ளது.




பி பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில், இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து 4-2 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வீழ்த்தியது. இதையடுத்து, புள்ளிப பட்டியலில் கடைசி இடம் பிடித்த அயர்லாந்து அணி போட்டியை விட்டு வெளியேறியது. (க)

நாவலப்பிட்டிப் பகுதியில்

# ஆற்றில் மூழ்கி 3 பேர் பலி

(கொழும்பு)

நாவலப்பிட்டி மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேசங்களில் ஆற்றில் மூழ்கி 3 பேர் உயிரிழந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தில் மாவக் ஓயாவில் மூழ்கியதில் 21 வயதுடைய இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர நாவலப்பிட்டிய பிரதேசத்தில் மகாவலி கங்கையில் மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (ம-3)

## பதில் நடவடிக்...

இலங்கையில் அரசியல் நிலவரத்தை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், தற்போதைய சூழ்நிலையால் மனித உரிமை ஆர்வலர்களிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாகவும், தரீக் அகமட் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை நிலைவரம் முக்கியமானதாக உள்ள 30 நாடுகள் குறித்த இடைக்கால அறிக்கையொன்றை வெளியிட்ட பின்னரே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி சட்டத்தின் ஆட்சி மனித உரிமைகள் ஆகியவற்றை பாதுகாத்து ஊக்குவிக்கவேண்டியதன் அவசியத்தை அனைத்து தரப்பினருக்கும் தெரிவித்துள்ளோம் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மாறிவரும் சூழலிற்கு ஏற்ப பதில் நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவ்வாறான நடவடிக்கையை எடுப்பதற்காக சிவில்சமூகத்தவர்கள் மற்றும் சர்வதேச சமூகத்துடன் நெருங்கிய தொடர்பில் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## சந்திரிகா மீது...

சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய சந்திரிகா அழைக்கப்படவில்லை என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரம் சந்திரிகாவிடம் உள்ளமையினால் கடும் அச்சத்தில் இருந்த ஜனாதிபதி அதற்கமைய இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும் இது தொடர்பில் சந்திரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மனிடம் கடிதம் ஒன்றை அனுப்பி தகவல் வினவியுள்ளார்.

இந்த மாநாடு தொடர்பில் பெரியதாக தகவல் வெளியிட வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கம்பஹா மாவட்ட செயலாளர் லசந்த அழகியவண்ண ஆலோசனை வழங்கியதாக ரோஹன லக்ஷ்மன் குறிப்பிட்டுள்ளார். (ம)

# புதிய அரசை அமைக்க ஜனாதிபதி அனுமதிக்க வேண்டும்

## அகிலவிராஜ் கோரிக்கை



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தை அமைத்து நாட்டின் தலைவிதியை மாற்றுவதற்கு ஜனாதிபதி அனுமதிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் கருத்து வெளியிடும் போது ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், நாட்டில் தற்போது நிலவும் அரசியல் முட்டுக்கட்டை நிலையை முடிவிற்கு கொண்டு வராவிட்டால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதன் மூலம் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காணலாம். நாடு முன்னோக்கி நகரமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள பாரிய இழப்பினை மக்களே செலுத்த வேண்டியிருக்கும்.

இதன் காரணமாக ஐக்கிய தேசிய கட்சி புதிய அரசாங்கத்தை அமைத்து நாட்டின் தலைவிதியை மாற்றுவதற்கு ஜனாதிபதி அனுமதிக்கவேண்டும். இலங்கையின் அரசமைப்பையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி தொடரும்.

இலங்கையின் சுயாதீன நீதித்துறை, நீதியான தீர்ப்பை வழங்கும். 2015இல் நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டவுடன் நீதித்துறையின் சுதந்திரம் மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

ஏனைய சுயாதீன ஆணைக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன. கடந்த மூன்று வருடங்களில் ஐக்கிய தேசிய கட்சியோ அல்லது அதன் தலைவரோ நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மஹாசங்கத்...

தேரர் தெரிவித்தார்.

மன்னம்பிட்டிய பாலத்திற்கு அருகில் ஸ்ரீ வாலுகானதீ பௌத்த மத்தியநிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை திறந்துவைக்கும் புண்ணிய நிகழ்வு ஜனாதிபதியின் பங்குபற்று தலுடன் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விசேட உரை நிகழ்த்தும்போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன இன்று தேசிய ரீதியாக பாரியபணியொன்றை நிறைவேற்றி வருவதனைப் போன்றே சாசனத்தின் மேம்பாட்டிற்காகவும் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையிலான சேவையை வழங்கி வருவதாகவும் சங்கைக்குரிய தேரர் மேலும் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் ஸ்ரீ வாலுகானதீ பௌத்த மத்திய நிலையத்திற்கு சென்ற ஜனாதிபதி சமயக் கிரியைகளில் ஈடுபட்டு ஆசீர் வாதங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் புத்தர் சிலையை திறந்துவைக்கும் புண்ணிய நிகழ்விலும் கலந்து கொண்டார்.

புத்தர் சிலைக்கு முதலாவது பூஜையையும் ஜனாதிபதி செய்தார். பொலநறுவை பௌத்த சங்கத்தினதும் மேலும் சில நன்கொடையாளர்களினதும் பங்களிப்பில் இந்த புதிய புத்தர் சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு பங்களித்தவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் அன்பளிப்புகள் ஜனாதிபதியினால் வழங்கிவைக்கப்பட்டன.

பொலநறுவை இசிபதன விகாராதிபதி சங்கைக்குரிய உடகம தம்மானந்த நாயக தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசீர்வதித்தனர்.

மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பிரதேசத்தை சேர்ந்த மக்கள் பெருமளவில் இப்புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## 500 மில்லியன்...

ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பேரம் பேசுதலில் ஏற்பட்ட விலை அதிகரிப்பாலேயே மகிந்தவால் பெரும்பான்மையை பெறமுடியாமற்போனது.

மனு கோரல் (டெண்டர்) போன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏலமிடப்பட்டனர்.

சில உறுப்பினர்கள் 500 மில்லியன் ரூபாய் கோரியதாக எனக்கு தகவல் கிடைத்தது. மகிந்தவுக்கு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியாமற்போனதற்கு அதிகளவான விலைகளே முக்கிய காரணமாக இருந்திருக்கும் என நான் நினைக்கின்றேன்.

அதேவேளை, ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களையும் பயன்படுத்தினார். என்னை பிரதேச சபை உறுப்பினராகக் கூட கண்டுகொள்ளவில்லை.

எனது முடிவு சரியென நீதிமன்றம் தீர்ப்பளித்தால் பிரச்சினை முடிந்துவிடும். அவ்வாறு இல்லாவிட்டால் பெரும்பான்மை உள்ள தரப்புக்கு ஆட்சியமைக்க அனுமதி வழங்கவேண்டும். அதை செய்வேன். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவை நான் பிரதமராக நியமிக்கமாட்டேன் என தெரிவித்துள்ளார். (ம)

வடக்கின் பல பாகத்திலும்

# அடுத்த சில நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு தென் கிழக்கே வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றமுத்த தாழ்வுநிலை குறைந்தளவு விருத்தியடைந்துள்ளதால் அடுத்து வரும் நாள்களில் நாட்டின் பல பாகங்களில் கன மழை பொழியும் என்று வானிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன், தாழ்வு மண்டலம் விரிவடைந்தால் சூறாவளியாக மாறவும் வாய்ப்புள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கைக்கு தென்கிழக்கே வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் விரிவடைந்து இந்தியா நோக்கி நகரும் என எதிர்பார்ப்பதால் அடுத்துவரும் நாள்களில் வடக்கு மாகாணம் உள்பட நாட்டின் பல பாகங்களில் கன மழைக்கு வாய்ப்பு உள்ளது.

குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் விரிவடைந்து அடுத்த



வாரத்தில் சூறாவளியாக மாறவும் வாய்ப்பு உண்டு. இதனால் இலங்கை, தமிழகம் மற்றும் கேரளாவில் பலத்த காற்றுடன் கன மழை பொழியும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3)

# 25 ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்க ஜனாதிபதி தீர்மானம்



(கொழும்பு)

புதிதாக 25 ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

சட்டத்தரணிகளாக இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய சட்டத்தரணிகளில் தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கு அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஜனாதிபதி புதிய நியமனங்களை வழங்க உள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய ஆவணமொன்றை அண்மையில் இது தொடர்பில் பரிந்துரை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளது.

மேலும் எதிர்வரும்ஜனவரி மாதம் புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமிக்கப்பட உள்ளனர். (ம-3)

## பாராளுமன்...

அல்லவெனவும், பிரதமர், அரசாங்கம் இல்லாமல் பாராளுமன்றத்தில் பிரேரணைகள் நிறைவேற்ற முடியாது எனவும் மகிந்த குழு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தற்பொழுது முறையான பாராளுமன்றக் கூட்டம் நடைபெறாமையினாலேயே நாம் அங்கு செல்வதில்லையென தீர்மானித்துள்ளோம். எப்போது பாராளுமன்றம் முறையாக நடைபெறுமோ அப்போது நாம் சமுகமளிப்போம்.

கணக்கிலெடுக்கப்படாத இந்தப் பாராளுமன்றத்தில் என்னதான் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டாலும் அதற்குப் பெறுமானம் இல்லையெனவும் வாசுதேவ மேலும் கூறினார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே வாசுதேவ நாணயக்கார இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத மகிந்த அரசாங்கத்துக்கு, சபையில் எந்தவொரு பிரேரணையும் முன்வைக்க முடியாத ஒரு நிலைமை காணப்படுகின்றது என்பதுவே உண்மையாகும்.

அதனாலேயே மகிந்த ராஜபக்ஷ குழுவினர் பாராளு மன்றம் வருவதைப் புறக்கணித்து வருகின்றனர்.

முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க இவர்கள் முயற்சிக்கின்றனர். நாட்டு மக்களை இந்த அரசியல் வாதிகள் இன்னும் முட்டாள்களாகவே பார்க்கின்றனர் என்பது கவலைக்குரிய அம்சமாகுமென்றார். (ம)

சுபிரி வாசனா
திகதி 2018/12/08
சீட்டிழுப்பு இலக்கம் 1384
எழுத்து 18 வெற்றி இலக்கம் 12 19 28 65 27 31
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.08
சீட்டிழுப்பு இலக்கம் 1967
ஆங்கில எழுத்து O வெல்லப்பட்ட இலக்கங்கள் 18 41 77 80
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08-12-2018
சீட்டிழுப்பு இலக்கம் 898
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 5 9 5 6 6 2
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2018/12/08
சீட்டிழுப்பு இலக்கம் 142
ஆங்கில எழுத்து L வெல்லப்பட்ட இலக்கங்கள் 23 48 60 65
தேசிய லொத்தர் சபை

## முச்சக்கரவண்டி...

விக்கப்பட்டது. மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான குணபாலசிங்கம் கமலசீலன் (வயது-32) என்பவரே படுகாயமடைந்தார்.

அவரை அந்தப் பகுதியில் நின்றவர்கள் உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்தனர். வலது கால் சிதைவடைந்தமையால் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குடும்பத்தலைவருக்கு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் நேற்று மாலை அவரது வலது காலின் முழங்காலுக்கு கீழ் பகுதி சத்திரச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## நீதிமன்றத்தின் தீர்...

விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அக் கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நீதிமன்ற உத்தரவுகளுக்கு மதிப்பளிப்பவர்களாயின் நீதிமன்றத் தீர்ப்பு இப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும். எனினும் அவர்கள் அவ்வாறு மதிப்பளிப்பவர்கள் அல்ல என்பதாலேயே இதனைக் கூறுகின்றோம்.

இப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதொன்றேயாகும். அரசியல் சிக்கல் நிலை உருவாகுவதற்குக் காரணமாக அமைந்திருந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். அதுவே சிக்கல் நிலைக்கு நிரந்தர தீர்வாகும் என்றார். (ம)

## நீதிமன்ற தீர்ப்புக்...

பால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்து ஒரே கூட்டணியாக செயற்பட்டாலும் அதன் தலைமைத்துவத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே வகிப்பார். மகிந்த ராஜபக்ஷ அனைத்து விடயங்களிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படுவார் எனவும் அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ இதனைத் தெரிவித்தார். (ம)

## பதவிகளை பெறு...

மகிந்த கருத்து வெளியிட்டார்.

தற்போதைய அரசியல் மிகவும் குழப்பமான நிலையில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதே மக்களின் எண்ணமாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலில் பதவிகள் இருக்கும், இல்லாமல் போகும். பதவிக்காக அரசியல் செய்யவில்லை. பதவி இல்லை என்றாலும் அரசியல் செய்வோம்.

பொது மக்கள் என்னுடன் இருக்கும் வரை நான் அரசியலில் தொடர்ந்து இருப்பேன் என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.(ம)

## தலைநகர் கொழு...

ஐக்கிய தேசியக் கட்சி தயார்படுத்தல்களை மேற்கொண்டு வருவதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் இருந்து ஓர் இலட்சம் பேரைக் கொண்டு வந்து, கொழும்பில் குவித்து தொடர்ந்து மூன்று நாள்களுக்கு பேரணி நடத்தப்படவுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க மறுத்து வரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கே, ஐக்கிய தேசியக் கட்சி இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

. ஜனாதிபதியின் வதிவிடம், செயலகம் என்பனவற்றை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 12ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் போது, ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகத் தெரிவு செய்யும், தீர்மானத்தை முன்வைத்து வாக்கெடுப்பு நடத்துவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது. (ம)


### பெண் உதவியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு பகுதி நேரமாக பணியாற்ற பெண் உதவியாளர் தேவை. தொடர்புகளுக்கு:
0773754490, 0772202769 (C-4651)

### கணித பாட பிரத்தியேக வகுப்புக்கள்

தனியாகவோ or குழுவாகவோ பல வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் தரம் 06 முதல் O/L வரையான ஆங்கில மொழி, தமிழ் மொழி மூல வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
இடம் : கோண்டாவில் (டிப்போ அருகில்)
தொ.பே.இல. : 077 577 6999
வீடு வந்தும் கற்பிக்கப்படும் (7812)

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் உள்ள வீடு ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. வேலை நேரம் காலை 8.00 - மாலை 3.00, சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். 0773611282 (7832)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-4571)

### காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் (கோவில் முன்பாக) 2.6 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு (7804)
0116477406845 (WhatsAPP)

### STUDY in EUROPE

செங்கன் நாடுகளில் கல்விகற்க
100% VISA உத்தரவாதம்
நூற்றுக்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்து சாதனை....

### STUDY in CANADA

மேல் மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS (ACADEMIC) வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (C-4626)
நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க.
WEC COLLEGE
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் (ஆரியகுளம், யாழ்ப்பாணம்) 0779265447, 0217200989
கிளை அலுவலகம்: இல:377 சங்கத்தானை சாவகச்சேரி

### பணிப்பெண் தேவை

வீட்டுவேலைக்கு 18 - 30 வயதிற்கிடைப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களைச் சேர்ந்த பணிப் பெண் தேவை. 071 221 5415, தொடர்புகளுக்கு: 077 736 4077 (6261)

### வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை (C-4590)

### கணித, ஆங்கில வகுப்புக்கள்

Group & Personal Classes
தரம் 06 முதல் O/L வரை
ஆரம்பம் : 11.12.2018
(செவ்வாய்க்கிழமை)
இடம்: மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ. பாடசாலை அருகாமை)
Mr.J.R.Abraham
Tel: 076 886 5300 (7830)

### வவுனியாவில் வாகனம் விற்பனைக்கு

ISUZU ELF 350, 14 1/2 அடி,
Power Steering, 41-XXXX,
Rs.1,275,000/=
தொடர்புகளுக்கு: 077 532 5968 (7820)

### FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 /0762 669 614
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள். (C-4586)

### நிரந்தர வேலைவாய்ப்பு

இலங்கையில் இயங்கி வரும் எமது Everest கம்பனியில் புதிய கிளைகளுக்காக O/L, A/L படித்த 18 - 40 வயதுக்கு உட்பட்ட புதிய நபர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.
3 மாத பயிற்சியின் போது 15,000/= மாத வருமானமும் பயிற்சியின் பின் 40,000/=க்கு மேலதிகமான வருமானம் பெற்றுக்கொள்ள முடியும்.
● தங்குமிட வசதி தரப்படும்
● வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு
● EPF, ETF, MEDICAL
● ஆங்கிலம், சிங்களம் கற்பதற்கான வசதி
0769393965, 0770064030 (7835)

### British College of Higher Studies

BCHS
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| வெளிநாடு செல்பவர்க்கான பயிற்சிகள் **IELTS (Academic & General)** Student visa, migration visa **IELTS Life skills –** Sponsor visa, Settlement visa | IELTS Exam Online Registration எம்மிடமே |
| Certificate courses (அனைத்து வயதினருக்கும்) **Diploma in English** **Spoken English** **Diploma in Sinhala** **Spoken Sinhala** | **All age Groups** வயதிற்கேற்ப தனி பிரிவுகள் |
| Special English classes for A/L 2019 batch students பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கு ஆங்கிலத்தின் முக்கியத்துவம் கருதி A/L 2019 மாணவர்களுக்கென புதிய வகுப்புகள் குறைந்த காலத்தில் சிறந்த பயிற்சி. 100% தேர்ச்சி. | A/L 2019 முதல் 20 பேருக்கு மட்டுமே |
| O/L பரீட்சை எழுதும் மாணவர்களே உங்களின் விடுமுறை காலத்தை பயனுள்ளதாக்குங்கள் உங்களுக்காகவே புதிய பிரிவுகள் **Diploma in English** ஜனவரி முதல் பதிவுகள் ஆரம்பமாகி விட்டன. | O/L 2018 முதல் 40 பேருக்கு மட்டுமே |

B.C.H.S
No.15, Sirambiyady Lane, Jaffna.
லங்கா சதொச மேல்மாடி. 0212224550 (C-4634)

### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

பதவி வெற்றிடங்கள்
01.கணக்குப்பதிவாளர் - (பெண்கள்)
● வயதெல்லை (22 - 40)
● நேர்முகத்தேர்வு நேரம் - முற்பகல் 11.00
02.வெளிக்கள உத்தியோகத்தர் (விற்பனை முகாமையாளர்) -(ஆண்கள்)
● வயதெல்லை (24 - 50)
● நேர்முகத் தேர்வு நேரம் - பிற்பகல் 12.30
கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரம் (வர்த்தகப்பிரிவு) சித்தி
நேர்முகத்தேர்வு : 13.12.2018 வியாழக்கிழமை
183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. - நிர்வாகசபை (C-4635)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 195

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2049 | 09.12.2018 | தொலைபேசி : 021 222 3378






## செத்தார் எலும்பையும் காட்டித்தருவான் திருக்கேதீச்சரத்தானே




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## பொதுத்தேர்தல் நடந்தால் யாருக்குத் தோல்வி ஏற்படும்?

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

நாட்டு நடப்பு எப்படி இருக்குதாம். விதானையார் விசுவலிங்கத்தைப் பார்த்து சாத்திரியார் சதாசிவம் கேட்டார்.

**விதானையார்:** நீதிமன்றத்தின்ர தீர்ப்புத் தான் எல்லாவற்றுக்கும் முடிவு கட்டப்போகுது.

**கங்காணி:** நீதிமன்றத்தின்ர தீர்ப்பு ஜனாதிபதி மைத்திரியின்ர அறிவிப்புக்குச் சாதகமாக வந்தால், பொதுத்தேர்தலை நோக்கி நாடு நகரும். இல்லை பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

நான்கரை ஆண்டுகளுக்கு முன் பாராளுமன்றத்தைக் கலைத்தமை அரசியலமைப்புக்கு முரணான செயல் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் ஜனாதிபதி மைத்திரி இரண்டு பிரச்சினைக்கு முகங்கொடுப்பார்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டு ஒண்டு. பிரதமராக யாரை நியமிப்பது என்பது இரண்டாவது.

**சாத்திரியார்:** ஒரு நாட்டின் ஜனாதிபதி அரசியலமைப்புக்கு முரணாக பாராளுமன்றத்தைக் கலைத்தார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தால் ஜனாதிபதி மைத்திரி பதவி விலகவேண்டும் என்ற கோசம் எதிர்த்தரப்பால் முன்னெடுக்கப்படும். அதற்குப் பிறகு ஜனாதிபதியின்ர நிலைப்பாடும் மாறவேண்டி வரலாம்.

**பண்டிதர்:** நாங்கள் என்ன கதைத்தாலும் தேர்தல் திணைக்களம் எதற்கும் ரெடியாக தேர்தல் பணிகளை ஆரம்பித்து வருகுது. என்னைப் பொறுத்தவரை பொதுத் தேர்தல் நடக்கக்கூடிய வாய்ப்புத்தான் இருக்குது.

**வாத்தியார்:** பொதுத் தேர்தல் நடந்தால் மைத்திரி, மகிந்த, ரணில் ஆகிய முத்தரப்பினருக்கும் வெற்றி. ஆனால்...

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள். அப்ப யாருக்குத் தோல்வி.

**வாத்தியார்:** எங்கட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான்.

**கங்காணி:** வாத்தியார் குழப்புறார்.

**வாத்தியார்:** நான் ஒண்டும் குழப்பல்ல. உண்மையைச் சொல்லுறன்.

**மூப்பர்:** உண்மையைச் சொல்லுறதா இருந்தால் அதைத் தெளிவாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:** பொதுத் தேர்தல் வந்தால் முதலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு மகிழ்ச்சி. அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தலுக்குத் தயார் எண்டு சொல்லிப்போட்டார். அவரைப் பொறுத்த வரையில ஜனாதிபதி மைத்திரி இனி தன்னைப் பிரதமராக்கமாட்டார் என்பது ரணிலுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரியும்.

அப்ப நீதிமன்றம் பாராளுமன்றக் கலைப்பை இரத்துச் செய்தால், அடுத்த பிரதமர் யார் என்ற குழப்பம் ஏற்படுமல்லோ.

**விதானையார்:** அடுத்த பிரதமராக சஜித் பிரேமதாஸவை நியமிக்க வேண்டியதுதானே!

**வாத்தியார்:** தனக்கு இல்லாத பிரதமர் பதவியில் தன்ர கட்சிக்காரரர் எவரும் இருக்கக்கூடாது என்பதுதான் ரணில் விக்கிரமசிங்கவின்ர நிலைப்பாடு.

**பண்டிதர்:** ஜனநாயகத்தின் பாதுகாவலர் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இது பற்றி ரணிலுக்கு ஆலோசனை கூறக்கூடாதோ.

**கங்காணி:** அவையளுக்கும் ரணில் பிரதமராக இருந்தால் தானே நல்லது.

**மூப்பர்:** இந்தக் கதையை விட்டிட்டு வாத்தியார் சொன்ன கூட்டமைப்புக்குத் தோல்வி என்ற விடயத்தைப் பார்ப்பம். நீங்கள் சொல்லுங்க வாத்தியார்.

**வாத்தியார்:** பொதுத் தேர்தல் வந்தால், தான் வெல்ல முடியும் எண்டு மகிந்த நம்புகிறார். கடந்த நாட்களில பாராளுமன்றத்தில மகிந்த தரப்பு நடந்து கொண்ட முறையால மக்கள் மத்தியில மகிந்தவின்ர செல்வாக்குச் சரிந்து போயிற்றுது எண்டு ரணில் தரப்பு நம்புது.

அதேநேரம் தாங்களும் அரசியலில் ஒரு கூட்டை அமைத்துப்போட்டம். ஆகையால பொதுத் தேர்தல் வந்தால் தங்களுக்கு ஆட்சியமைக்கிற அதிகாரம் கிடைக்கும் என்பது ரணில் தரப்பின் நம்பிக்கை.

**சாத்திரியார்:** இது எப்படி கூட்டமைப்புக்குத் தோல்வியாக அமையும்.

**வாத்தியார்:** பாராளுமன்றக் கலைப்புக்கு எதிராக நீதிமன்றத்திற்குச் சென்று ஜனநாயகத்தை நிலை நாட்டினது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர கெட்டித்தனம் எண்டு சொல்லிக் கொண்டு தமிழ் மக்களுக்குத் தாங்கள் செய்த பிழைகளுக்குப் பரிகாரமாக ஜனநாயகத்தைக் காப்பாற்றினவர்கள் எண்டு தமிழ் மக்களிட்டச் சொல்வதன் மூலம் கூட்டமைப்பின்ர செல்வாக்கைத் தக்க வைக்கலாம் என்பது அவையளின்ர பிளான்.

அதோட அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையும் இருக்குதல்லோ.

**சாத்திரியார்:** வாத்தியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஜனநாயகத்தைக் காப்பாற்றினோம், அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை கொண்டு வந்தோம் எண்டு தமிழ் மக்களிட்டச் சொல்லி தேர்தலில வெற்றி பெறலாம் எண்டு இருக்கிற போது, பாராளுமன்றக் கலைப்புச் சரி என்று நீதிமன்றம் தீர்த்தால் எல்லாம் அம்போ எண்டல்லோ போய்விடும்.

**வாத்தியார்:** இந்தா சாத்திரியார் சரியாப் பிடிச்சிட்டார். பாராளுமன்றக் கலைப்புச் சரி எண்டு நீதிமன்றம் தீர்த்தால், அடுத்த கட்டம் பொதுத் தேர்தல். பொதுத்தேர்தல் வந்தால் எங்கட சனங்கள் எங்க அரசியல் தீர்வு, எங்க நீங்கள் காப்பாற்றின ஜனநாயகம் எண்டல்லோ கேட்கும். அதுதான் தேர்தல் வந்தால் கூட்டமைப்புக்குத்தான் தோல்வி எண்டு சொன்னனான்.

இவ்வாறு வாத்தியார் சொல்ல அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் அடிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# 1978 அரசியலமைப்பில் இன்னுமே திருத்தம் செய்யப்படாத விடயம்

பிரித்தானியரிடமிருந்து 1948 இல் சுதந்திரம் கிடைத்ததையடுத்து இலங்கையில் மூன்று அரசியலமைப்புகள் இருந்துள்ளன. அவை சோல்பரி அரசியலமைப்பு (1946). முதலாவது குடியரசு அரசியலமைப்பு (1972). இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு (1978).

இந்த மூன்று அரசியலமைப்புகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன.

சோல்பரி அரசியலமைப்பு "வெஸ்ட் மினிஸ்டர்" முறையிலான அரசாங்கத்தைப் பின்பற்றியது. அதன்படி பிரிட்டனின் ஆறாவது ஜோர்ஜ்மன்னர்நாட்டின்தலைவராவார். இந்த அரசியலமைப்பை வரைந்தவர் சேர் ஐவர் ஜெனிங்ஸ்.



சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக அவர் 29(2) என்ற பிரிவை அரசியலமைப்பில் சேர்ந் திருந்தார். இது அயர் லாந்தின் அரசியலமைப்பில் இருந்து எடுக் கப்பட்டு சோல்பரி அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

1972 இல் உருவாக்கப்பட்ட முதலாவது குடியரசு அரசியலமைப்பு இலங்கையை முடியாட்சியில் இருந்து குடியாட்சிக்கு மாற்றியது. பிரிட்டிஷ் மகாராணி தொடர்ந்து நாட்டின் தலைமையாக இந்த அரசிய லமைப்பில் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக இந்த அரசியலமைப்பில் நிறை வேற்று அதிகாரம் என்ற ஒரு ஜனாதிபதி நாட்டின் தலைவராக இருந்தார்.

அடிப்படை உரிமைகள் மற்றும் அரச கொள்கையின் பொதுக் கட்டளை தத்து வங்களும் இதில் சேர்க்கப்பட்டன. பௌத்தத்துக்கு முன்னணி இடம் இந்த அரசியல மைப்பில் வடிக்கப்பட்டது.

இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு 1978 இல் கொண்டுவரப்பட்டது. இது இலங்கையை நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய ஜனாதிபதியின் கீழ் கொண்டு வந்தது. இது வெஸ்ட் மினிஸ்டர் முறையை விட பெரிதும் மாறுபட்டது.

'ஜனாதிபதியின் கீழான அரசாங்க முறை' என்று இது அழைக்கப்பட்டது. எனினும் இது தொடர்பாக செய்யப்பட்ட 19ஆவது திருத்த சட்டத்தின்படி அரசியலமைப்பு பேரவையின் அறிவுரை மற்றும் சிபாரிசின்படி ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்ற வகையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் இந்த அரசியலமைப்பின்படி குறைக்கப்பட்டன.

இதனால் சர்வஜன வாக்கெடுப்பு இன்றி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 17 ஆவது திருத்தச் சட்டம் செயற்பட வழிவகுக்கப்பட்டது.

19ஆவது திருத்தச் சட்டம் ஜனாதிபதி முறையை பாராளுமன்ற முறையிலான அரசாங்கமாக மாற்றவில்லை. எனினும் 18ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த சில முன்னேற்பாடுகள் நீக்கப்பட்டு தகவல் உரிமை அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டது. இது 17ஆம் திருத்தச் சட்டத்தின் சில முன்னேற்பாடுகளை விஸ்தரித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்ட பூர்வமானதா என்பதைப் பார்ப்போம். இந்த விடயத்தை ஆராயுமுன்னர் அரசியலமைப்பு சட்டம் பற்றி கொஞ்சம்பார்ப்போம்.

அரசியலமைப்பு சட்டம் என்பது சட்டம் மற்றும் அரசியலின் கலவையாகும்.1978 அரசியலமைப்பில் ஒரு சிக்கல் நிலை இருந்ததை அமரர் என்.எம். பெரேரா சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதியும் பிரதமரும் இரு வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பின் ஒரு பாரதூரமான அல்லது இக்கட்டான நிலை ஏற்படலாம் என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் 19ஆவது திருத்தச் சட்டத்திலும் அது திருத்தப்படவில்லை. எனினும் 19ஆவது திருத்தச் சட்டத்தின் வெஸ்ட் மினிஸ்டர் முறையிலான அரசாங்கத்தின் சில அம்சங்கள் இடம் பெற்றிருப்பதை மறுப்பதற்கில்லை.

**லக்சிறி மெண்டிஸ்**

# ஒரு நல்ல மனிதர்; சிறந்த தந்தை

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான காலம் சென்ற ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ்ஷின் இறுதிச் சடங்கு கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது. அரசு மரியாதையுடன் வோஷிங்டனில் நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ்ஷின் இறுதிச் சடங்கில், அவரது மகனும் முன்னாள் ஜனாதிபதியுமான ஜோர்ஜ் புஷ் அஞ்சலி செலுத்தினார்



புதன்கிழமையன்று நடைபெற்ற இறுதிச் சடங்கில் உரையாற்றிய புஷ் ஜூனியர், தனது தந்தையை "ஒரு நல்ல மனிதர், சிறந்த தந்தை" என்று விபரித்தார்.

இந்த நிகழ்வில் தற்போதைய ஜனாதிபதியும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளும் கலந்து கொண்டனர்.



அமெரிக்காவின் 41வது ஜனாதிபதியாக 1989 முதல் 1993 வரை பணியாற்றிய ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ், தனது 94வது வயதில் கடந்த வெள்ளியன்று காலமானார். அவரது சொந்த மாகாணமான டெக்ஸாசில், அவரது மனைவி பார்பராவிற்கு அருகில் அவரது உடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி மரியாதை சடங்கில் உரையாற்றிய மகன் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், "பொது சேவை என்பது சிறந்தது மற்றும் அவசியமானது" என தனது தந்தை தனக்கு சொல்லிக் கொடுத்ததாக குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "தோல்வி நம் வாழ்க்கையின் ஒரு பகுதி என்று என் தந்தை ஒப்புக் கொண்டார். ஆனால், தோல்வியால் எதையும் வரையறுக்கக் கூடாது என எங்களுக்கு கற்றுக் கொடுத்தார். பின்னடைவுகள் நம்மை எப்படி பலமாக்கும் என்பதை அவர் எங்களுக்கு உணர்த்தினார்" என்று குறிப்பிட்டார்.

பேசும்போது உணர்ச்சிவசப்பட்ட அவர், :உங்களை எவ்வளவு நேசிக்கிறோம், புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதை எங்களின் கண்ணீர் வழியாக உணரலாம். என் தந்தை ஒரு தலை சிறந்த மனிதர். மகனுக்கும் மகளுக்கும் சிறந்த தந்தையாக விளங்கினார்" என்றார்.

தேசிய கதீட்ரலில் நடந்த மேற்படி இறுதிச் சடங்கில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முன்னாள் ஜனாதிபதிகள் பராக் ஒபாமா, பில் கிளின்டன், ஜிம்மி கார்ட்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேல்ஸ் இளவரசர், ஜெர்மன் சேன்சலர் ஏங்கலா மெர்கல், ஜோர்டான் அரசர் அப்துல்லா ஐஐ உள்ளிட்ட உலகத் தலைவர்களும் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

புதன்கிழமையன்று நாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு - பல அரசு நிறுவனங்களும், அமெரிக்க பங்கு பரிவர்த்தனைகளும் மூடப்பட்டன.




# தன்னலமற்ற சேவை



முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார். இதுவரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டு காலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும்பாறைகளையும்கொண்டு வரச் செய்தார். சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தது. மன்னன் நாள்தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தான்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியாகக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின. மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப்பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக் கல்லும் இருந்தது. இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப் பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான்.

நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆம். அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது.

இதைக் கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது.

"இவ்வளவு பாடுபட்டுப் பெரும் பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன். முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப்படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே!" என்று வேதனையடைந்தான்.

காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர் பூராவும் சுற்றித் திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன்: "அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையது தானா?" என்று கேட்டான்.

கிழவி கண்களை நன்கு துடைத்துக் கொண்டு சலவைக்கல்லைப் பார்த்தாள்.

பிறகு. "ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான்... தவறுதலாகப் பொறிக்கப் பட்டுவிட்டது போல் இருக்கிறது!"

"இல்லை அம்மா. என் பெயர் தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்துவிட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என்றான் அரசன்.

"நான் இந்தப்பக்கம் வந்தது கூட இல்லை... அப்படியிருக்கும் போது இதில் என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

"தாயே. இந்தக் கோயில் பணியில் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்கமாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்!" என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி.

"மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை. ஆனால். ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத்தான் வரும். அந்தச் சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன். மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களைக் கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவு தான் நான் செய்தது" என்றாள் கிழவி.

"தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே. தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார்.

தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும். வாழ்க தங்கள் புகழ்!" என்று கூறிய மன்னன். அந்தக் கிழவிக்கு நிறைய பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.


## பொன்மொழிகள்



**"வாழ்க்கையில் வெற்றியடைய மிக முக்கிய மந்திரம். உனது இரகசியங்களை ஒருபோதும் எவருடனும் பகிராதே"**

**பொருள்:** மனித குலம் தோன்றிய நாள் முதலே அவர்களால் செய்ய இயலாத ஒன்று. இரகசியத்தை பாதுகாப்பது. எவர் ஒருவரிடம் நீ உன் இரகசியத்தை பகிர்ந்து கொள்கிறாயோ அவரிடம் நீ உன் சுதந்திரத்தை இழப்பாய் என்று சாணக்கியர் கூறுவது மறுக்க முடியாத உண்மை. இந்த அனுபவம் நம்மில் பலருக்கும் இருக்கும். எனவே எந்தவொரு இரகசியத்தையும் எவருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடாது.

ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில்
உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.








**மகிந்தவுக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் இனி என்னநிலை?**

**2019 இல் ஆவது தமிழர்களுக்கு தீர்வு கிடைக்குமா வியாசரே?**

**மன்னார் மனித எலும்புக் கூடுகள் பற்றி?**

ஜுபா — கரவெட்டி

**அடக் கடவுளே தமிழர்களுக்கு கூட்டமைப்பு செய்யும் ஓட்டுமாட்டுக்கு ஒரு அளவே இல்லையா?**

உஸ்ஸ் சத்தமா பேசாதீர்கள் 2019 இற்குள் தீர்வு என்று ஐயா அறிவித்து விட்டாரே. ஆக்கப் பொறுத்த உங்களுக்கு ஆறப் பொறுக்க முடியலையோ. ஓ… இன்னும் ஆக்கவே இல்லையே. அதெப்படி ஆறும்.

சுதன் — குப்பிளான்

**மகிந்தவுக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் இனி என்னநிலை?**

எம்.பி. ஆக இருந்து பிரதமராகி, பின் ஜனாதிபதியாகி, அதன்பின்பு எம்.பி ஆகி, பின் பிரதமராகி இப்படி அவரின் அரசியல் பயணம் முடிவது போலத் தெரியவில்லையே.

தர்ணிகா

**மன்னார் மனித எலும்புக்கூடுகள் பற்றி?**

அவை எக்காலத்துக்குரியவை என்று ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டியது நீதித்துறையின் கடமை.

இருப்பினும் அண்மையில் கால்கள் கம்பிகளால் பிணைக்கப்பட்டபடி ஒரு எலும்புக்கூடு மீடகப்பட்டது. அதுதான் என்னமோ நெஞ்சுக்குள் சிறு படபடப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிசா — பருத்தித்துறை

**பிரதமரை நீக்க உதவிய நிறைவேற்று அதிகாரம் தமிழர்களுக்கு தீர்வு தர ஏன் உதவவில்லை?**

கொடுக்க வேண்டிய அதிகாரம் சிங்களவர்களுக்காக இருந்திருந்தால் நிறைவேற்று அதிகாரம் என்றைக்கோ பாய்ந்து அவற்றைக் கொடுத்திருக்கும்.

என்ன செய்ய கொடுக்க வேண்டியது தமிழர்களுக்காகப் போய் விட்டதே. அது கிடைக்கவே கிடைக்காது.

கலை — மிருசுவில்

**வியாசரே உங்களுக்கு யாரும் அடிச்சா திருப்பி அடிக்கமாட்டீர்களோ?**

அது அடிக்கிற ஆளைப் பொறுத்துத் தம்பி. பழைய வில்லன் பொன்னம்பலம் மாதிரி குண்டா கறுப்பா புஸ்தியா இருந்தா அடிய வாங்கிக்கிட்டு பம்மிட்டு இருந்திடுவேன்.

அதே அடிக்கிறவன் நம்ம தனுஷ் மாதிரி இருந்தா சும்மா அவன் மேல பாய்ந்து பிரிச்சு மேய்ந்திடுவேன்.

நரா — இணுவில்

**ஜோக் ஒன்று சொல்லுங்களேன்.**

**மகன்:** அப்பா எங்க காதலுக்கு தடை போடாதீங்க. என் காதல் தெய்வீகமானது.

**அப்பா:** அது என்னடா தெய்வீகக் காதல்

**மகன்:** என் பெயர் பரமசிவன் என் காதலி பெயர் பார்வதி அதை வைச்சுத்தான்.

சாரங்கபாணி — யாழ்ப்பாணம்

**என்ன வியாசரே இப்பெல்லாம் சந்தைப் பக்கம் தங்களைப் பார்க்க முடியவில்லை?**

நான் செய்கிற வேலைகளில் சந்தை போகும் வேலையை மட்டும் மனைவி பொறுப்பேற்றுவிட்டாள்.

இப்போது நான் வீட்டில் சமையல் வேலையை செய்கின்றேன். (மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்)

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532, 076 636 3378 என்ற Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

## யார் பணக்காரர்…?

ஒரு பணக்கார அம்மா புடைவைக் கடைக்குப் போய் கடைக்காரரிடம் எனது மகனுக்கு திருமணம்.

ஆகவே எனது வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண்ணிற்கு கொடுக்க மிக குறைந்த விலையில் ஒரு சேலை கொடுங்கள் என்று வாங்கிச் செல்கிறார்..!

சற்று நேரத்திற்கு பிறகு அதே கடைக்கு அந்த வீட்டுப் பணிப்பெண் வருகிறார்.கடைக்காரரிடம் என் முதலாளியின் பையனுக்கு கலயாணம்.

அதனால் எனது முதலாளி அம்மா வுக்கு பரிசாக கொடுப்பதற்கு உங்க கடையில் மிக உயர்ந்த விலையுடைய சேலைகளை எடுத்துப்போடுங்கள் என்று பார்த்து மிக உயர்ந்த விலையுடைய ஒரு சேலையை வாங்கிச் செல்கிறார்..!

சயன் — யாழ்ப்பாணம்.

**இனத்துக்குத் துரோகம் செய்பவர்களை என்ன செய்யலாம்?**

விரட்டி விரட்டி வெளுக்கத் தோணுது. அதிகாரத் திமிரை, பணக்கார பவரை தூக்கிப் போட்டு மிதிக்கத் தோணுது.

கேசவன் — கிளிநொச்சி

**2.0 படம் எப்படி? நல்ல கருத்து சொல்லியிருக்காமே உண்மையா?**

செல்போன் பாவனையால் குருவிகள் அழிகின்றது. அதை தடுக்க வேண்டும் என பாடுபட்டவர் வில்லன். அவரைக் கொல்ல உருவாக்கப்பட்ட ரோபோ கதாநாயகன்.

புரிந்தவர்கள் புரிந்து கொள்ளுங்கள். புரியாதவர்கள் புரிவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இந்து — கோப்பாய்

**2019 இல் ஆவது தமிழர்களுக்கு தீர்வு கிடைக்குமா வியாசரே?**

அட நாசமாய் போனவங்களே. ஞானப்பால் உண்டவனிடம் கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்கிறீர்களே அதுவும் புனைபெயரில்.

அவருக்குத் தான் தேர்தலைக் கணித்து அறிக்கை விடும். (எதிர்வுகூறும்) ஞானம் இருக்கிறதே. இதுவரை 45 முறை சொல்லி விட்டார். ஆனால் தீர்வு தான் கிடைக்கவில்லை. (தமிழர்களுக்கு)

மதியழகன் — வதிரி


**தத்துவம் ஒன்று சொல்லுங்களேன் வியாமாமா?**


தைரியம் என்பது உங்கள் இதயம் நடுங்கக் கூடாது என்பது பொருள் அல்ல. நடுங்குவது மற்றவர்களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்வது அவ்வளவு தான்.

சதீஸ் — சுழிபுரம்

**காதலிப்பவர்கள் எப்படி இருப்பார்கள்?**

ஏதோ அடுத்த சாஜகானும் மும்தாஜ் உம் தாங்கள் தான் என்று கனவுலகத்தில் பறப்பார்கள். அடுத்தவரிடம் காதல் ஊத்திக்கும். ஆளாளுக்கு ஒவ்வொருத்தரைப் பற்றி கிழிச்சு காயவிடுவார்கள்.





## கனவில்கூட

காலங்கள் கடந்த ஓர்நாளில் கனவில் வந்து சென்றாய்
கலைந்து சென்ற நாட்களின் நினைவுகளை
தந்து சென்றாய்- அன்று பிரிந்து சென்ற காரணங்கள்
அறிந்தும் நீ கூறவில்லை அறிந்திருந்தும் மனம் ஏனோ
கேட்கவில்லை கனவிலாவது வந்து செல்லென
வரம் கேட்டேன் வருவேனென்று கூறிச்சென்றாள்
பகலில்கூட விழிமூடி காத்திருக்கின்றேன்
நினைவிலென்னை விட்டுச்சென்றதைப் போல்
கனவிலும் விட்டுச் சென்றாள் கனவென்றறிந்தும்
நிஜமென்று நம்பியதை- மனம் மறக்க மறுக்கின்றது

இணுவில் வாகீசன்

## தலை தப்பியது

நள்ளிரவு வேளையொன்று
நடந்து சென்று கொண்டிருந்தேன்
பௌர்ணமி நாளன்று
இரவைப் பகலாக்கியது நிலவு

விர் என்ற சத்தம்
எனக்கு விளங்கவில்லை எதுவும்
சர் என்று மறித்த இருவர்
சடசட என இறங்கி
சர் என்று வாளை நீட்டினர்
நிலவொளியில் வாள்
மினுமினுத்தது

ஆறடி உயரம்
அகண்ட மார்பு
அண்டசராசரங்களையெல்லாம்
தன் உடைவாளில்
அடக்கியாளும்
மன்னன் கதைபடித்த எனக்கு

நோஞ்சல் குச்சிகள் இரண்டு
வாள்கொண்டு எனை
வதம் செய்யத் துடிப்பதேன்?
என்ற கேள்வியை மிஞ்சியது
சிரிப்பு..
அடடா சிரிச்சால்
சிதைத்துவிடுவார்களே
அடக்கினேன் இருந்தும் முடியவில்லை

கண்ட கண்ட
வார்த்தைகளால் பேசினான் ஒருவன்
இவனில்லையடா- மற்றவன்
வந்த வேகத்திலும் வேகம் எடுத்தது
மோட்டார் சைக்கிள்
அடடா தலை தப்பியதே
என மூளை சிந்திப்பதற்கு முன்
ஓட்டமெடுத்தது கால்கள்

மாவை. நா. கஜேந்திரன்

## அருளவே வருவாய் அழகுறவே

சந்ததம் துன்பமே சந்திக்கும் எங்களின்
சந்ததி தழைத்து ஓங்கிடவே
நிந்தனை இல்லாது நெடுநாள் இப்புவியில்
நின்றுமே எம் தினம் நிலைக்கவே
வந்தனை செய்துமே வையத்தார் எங்களை
வாழ்த்திடும் நிலையும் வந்திடவே
வந்திடும் தைமகளே வாயார வாழ்த்தி
வரங்கள் தந்திட வேண்டுமே!

வேற்றுமை பாராட்டி வெந்திடும் எம்மினம்
வெற்றிகள் பெற்று உயர்ந்திடவே
சேற்றினில் உழன்று செந்நெல் விளையச்
செய்திடும் விவசாயி செழிக்கவே

கூற்றுவராய் எம்மைக் கொடுமை செய்வோர்
குவலயம் தன்னில் ஒழியவே
ஆற்றுப்படுத்தியே அழிவுகளை நீக்கி
அருளவே வருவாய் அழகுறவே

மண்ணில் அமைதி மலர்ந்திட வேண்டும்
மனதும் மகிழ்ந்திட வேண்டும்
எண்ணில் துயர்கள் எரிந்திடல் வேண்டும்
ஏதங்கள் அகன்றிட வேண்டும்
கண்ணில் கருணை மிளிர்ந்திட வேண்டும்
காதலும் பெருகிடல் வேண்டும்
எண்ணியதெல்லாம் இடம்பெறவேண்டும்
எளிதாய் அருள வருவாயே!

வயலூரான் செ.சுதாகரன்

கவிதைக்கலசம்

## ஓ! தென்றல் காற்றே

தெம்மாங்கு பாடும் தென்றல் காற்றே!
தென்திசை நோக்கிச் செல்வாயோ!
சும்மா கிடந்த சங்கை ஊதிய- அதி
உத்தமரை நீ பார்க்காயோ!
போனது போகட்டும் ஆனது ஆகட்டும்
பொல்லாங்கொன்றுமினி வேண்டாம்
வீணர்கள் சேர்க்கை வீண்புழி சேர்க்கும்
வீம்புகள் வேண்டாமெனச் சொல்லு
புத்தரும் சித்தரும் புகுத்திய போதனை
நித்தமும் அவர்க்கு நினைவிலுண்டு
எத்தரைவிட்டு நல்வழிப்பட்டு
சித்தம் தெளிந்து சீர்பெறலாமே!
விரைந்து போயே விழைந்து நீயே
விதம் விதமாக விதந்துரைத்தால்
நிறைந்திடுமின்பம் குறைந்திடும் துன்பம்
நிறைவுடன் அனைவரும் வாழ்ந்திடலாம்

மிருசுவில் தமிழ்தாசன்
மீசாலை கிழக்கு, மீசாலை

## என்றும் மறவோம்

மண்ணினுள் புதைக்கப்பட்டவர்கள் அல்ல
எம்மினுள் புதைக்கப்பட்டவர்கள் நீங்கள்
கற்களால் முளைத்தவர்கள் அல்ல
எம்முள் விளைந்த செந்தளிர்கள் நீங்கள்
இம்மண்ணில் மீண்டவர்கள் நாங்கள்
அதற்காக மாண்டவர்கள் நீங்கள்
எம் கண்ணீர் காக்க உம்
செந்நீர் இறைத்தவர்கள் நீங்கள்
என்றும் மறவோம் எஞ்சிய
கண்ணீரும் உங்களுக்காகவே

தமிழ்ப்பிரீயன் தனு, உரும்பிராய் தெற்கு.

## மௌனத்தின் தேடல்- 425



## கல்லறைகள்

காவிய நாயகர்களே
உங்கள் காவியம்
படைப்போம்
நாட்டுக்காக நீங்கள்
சிந்திய இரத்தத் துளிகள்
நாம் அறிவோம்
தேசத்தின் விடிவுக்காக
உழைத்த உங்களுக்கு
இரு சிறுசுகள்
விளக்கேற்றுகின்றன

பா.கலாதேவி

## இவ்வார மௌனத்தின் தேடல் -426



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## வெற்றி நிச்சயம்

தியாகத்திற்கான
வழிபாட்டு மரியாதை
வழி வழியாய்
நம்
சந்ததிக்கும்
கடத்தப்படுவதனால்
நம்மினத்து
வரலாறு
தோற்றுப் போகாது

நல்லூர் தேன்நிலா

## கலங்காது எழுமின்

காலங்கரைந்து போக
கல்லறைதான் எமது சொந்தம்
அகால சூழ்நிலையில்
அகப்பட்டு உயிர் நீத்த
உறவுகள் துயிலுமில்லத்தில்
ஆத்மா சாந்தி பெற
பிஞ்சுக் குழந்தைகள்
ஈகச்சுடரேற்றி
நெஞ்சுருகி மலர்தூவி
அஞ்சலி செய்கின்றார்
பாரம்பரிய பண்பாடு காத்து

துரை
தென்மட்டுவில்

## நினைவலைகள்

உரிமை உடைமை வேண்டும் தமக்கு
உயிர் துறந்தேனும் உரிமை காப்போம்!
ஈழம் எங்கள் உயிரினும் மேல்- என்ற
மொழிகள் மௌன மொழியாக
உறங்கிக் கொண்டிருக்கின்றன
இது கல்லறை அல்ல
பல நெஞ்சங்களின் உயிர் மூச்சு

நிரூஷினி ஆனந்தராஜா
யாழ்ப்பாணம்

## மொட்டுக்கள்

ஈழத்தாய் ஈன்ற
வீரக்குழந்தைகள்
உறங்கும்
கல்லறைகளில்
பிஞ்சுகள் இரண்டும்
தேடிப்பிடித்தது
அப்பாவை
கல்லுக்குள் அடங்கிய
அப்பனை
கட்டியணைக்க வரமின்றி
உடல் உக்கிய
மண்ணை
தொட்டுத் தொட்டுப் பார்க்கிறது
இதுகள்...
உதிர்ந்த பூக்களின் வாரிசு
மொட்டுக்கள் அஞ்சலி
செய்த அவலம்
அங்கு கண்டேன்...

சிவம் வேணுஜா
கோப்பாய் வடக்கு

## பார்வையின் அர்த்தம்

மண்ணுக்கு
மாவீரனாய்
இருந்தாய் இன்று
கல்லுக்குள்
கட்டுண்டு இருக்கிறாய்
மண்ணும் உன்னை
அறியும்
கருங்கல்லும்
உன்னைஅறியும்
இந்த மழலைகளின்
சிறு பார்வையும்
உன்னை அறியும்

இ.வேணுஜன்
வடலியடைப்பு

## கண்ணீர்

சொந்த மண்ணை மீட்டெடுக்க
சொந்தம் தனை தவிக்கவிட்டு
ஈழம் காக்க சென்றவனே
ஈன்ற எம்மை மறந்தாயோ...?
வேளை மூன்றும் முற்றம் நோக்கி
விழிவைத்து பார்த்து- நித்தம்
அன்னம் இன்றி அறிவு மங்கி
உனக்கான உழைத்தவள்
வெண்புடவை கோலம் காணவோ
வீரமரணம் எய்திட்டாய்

சி.கோகுல்ராஜ்,
அச்சுவேலி வடக்கு

## உயிரின் வலி

எங்களுக்கு உயிர் தந்தவர்
எம் விழி திறக்கும் முன்பே
தன்விழி மூடி இங்கே
துயில்கின்றார்- இன்று
உங்களின் பிள்ளைகள்
வந்துள்ளோம் ஒரு கணம்
உங்களின் விழி திறந்து
எமை ஆசிர்வதியுங்கள் அய்யா!

நயினை உதயரூபன்

## சிற்பிகள்

மனிதனை மனிதன்
மிதிக்கின்ற இக்காலமதில்
வீரமதை
வெளிக்கொணர்ந்து
தாய் மண்ணுக்காக
மரணித்த மாமனிதரை
நினைவுகூர்ந்து
ஒளியினை ஏற்றுகின்றது
வருங்கால சிற்பிகள்

அ. அன்ரனி, யாழ்ப்பாணம்

# மௌனத்தில் தொலைந்த மனச்சாட்சி

சிறுகதை



கார்த்திகை பிறந்தாலே மனச் சுமைகளும் நாம் விட்ட தவறுகளும் எம் கண்முண்னே தோன்றும்.மழையில் நாம் நனையக் கூடாது என்பதற்காக தம்மையே அறுத்து கூரைவேயச் சொன்ன மரங்களும் ஓலைகளும் அவற்றின் மகத்துவமும் கார்த்திகை கனமழையின் போதே இந்த மூடர்களுக்குப் புரியும்.அழகிய பல வீடுகள் நிறைந்த ஊரில் பனங்கூடல்களின் மத்தியில் சிறிய வீடு ஒன்றில் வாழ்ந்து வருபவள் தான் இந்த நளா.

சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்க இருள் சூழ்ந்து கொண்டது. எல்லா வீடுகளிலும் மின்விளக்குகள் ஒளியூட்டிய வண்ணம் இருந்தன. ஆனால் நளாவின் வீடுமட்டும் இருளில் மூழ்கிக் கிடந்தது. நளாவின் வீடுமட்டுமல்ல அவளது வாழ்வும் இருள் சூழ்ந்தே காணப்பட்டது. நாயின் ஊளையிடல்களும் ஆந்தையின் அலறல்களும் இவளின் காதில் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் இவளது நினைவுகள் கடந்த காலத்தை நோக்கி மெல்லத் துளிர்விட ஆரம்பித்தது.

"நளா வீடியோ" என்றால் அவளது ஊரில் மட்டுமல்ல இந்த உலகத்தில் தமிழ் பேசுகின்ற அனைவருக்கும் தெரிந்த ஒரேயொரு வீடியோ. தகவல் தொழில்நுட்பம் வளர முன்னரே அதற்கு ஈடாக மிகவும் துல்லியமாகப் படப்பிடிப்புக்களை மேற்கொண்டு பெயர் பெற்றவன் தான் நளாவின் தந்தை ராஜன். இவனது மனைவி தேவி. கணவனையே முழுமையாக நம்பும் நல் மனையாள்.இவர்கள் இருவருக்கும் ஆயிரத்து தொளாயிரத்து எண்பதில் பிறந்தவள் தான் இந்த நளா.... நளாவிற்கு ஒரேயொரு சகோதரன் தயா. இவர்களது வாழ்வில் செல்வத்திற்குக் குறையில்லாது வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் ஒரு நடுத்தரளவு வருமானக் குடும்பமாகவே நளாவின் குடும்பம் காணப்பட்டது. ராஜன் அப்போது மாநகரசபையில் அலுவலக உதவியாளனாக வேலை செய்து கொண்டிருந்தான். நளா பிறந்த பின்புதான் இவனது வாழ்வில் செல்வம் கொட்டோ கொட்டென்று கொட்டியது. நளா பிறந்த தொடக்கு கழிப்பு, பால்பருக்கு, சோறு தீத்துதல், மொட்டையடிப்பு எல்லாவற்றிற்கும் படம் எடுக்கத் தொடங்கிய ராஜன் ஆரம்பத்தில் படப்பிடிப்பினைத் தன் பகுதிநேர வேலையாகச் செய்து கொண்டிருந்தான் .நாட் செல்லச் செல்ல இவனது துல்லியமான படப்பிடிப்புக்கள் அனைவரையும் கவர்ந்து கொள்ள இவன் படப்பிடிப்பில் முதலிடத்தைத் தொட்டான். அப்படியே வீடியோ செய்தல் படக்கொப்பி வாடகைக்குக் கொடுத்தல் என்று எல்லாவற்றையும் சம காலத்தில் செய்து கைநிறையச் சம்பாதித்தான். சம்பாதிக்க சம்பாதிக்க இவனது செயற்பாடுகள் மாற்றமடையத் தொடங்கியது. இதுவரை தன் குடும்பத்தை மட்டுமே நேசித்தவன் குடியென்றால் அதன் பக்கம் போகாதவன் குடிக்கு அடிமையாகிக் கொண்டான்.குடித்தால் தான் கௌரவம் என்று எண்ணினானோஎன்னவோ... அதுமட்டுமல்லாமல் பெண்களுடன் தப்பான தொடர்புகள் ஏற்பட்டது.பெண்பாவம் பொல்லாது என்பது போல் இவன் அதனால் பட்ட பாடுகளை சொல்லி அழுவதற்கும் ஆறுதல் சொல்வதற்கும் நளாவிற்கு ஒருவரும் இல்லை. நளாவுடன் ஒருவரும் சேர்வதுமில்லை பாவம் நளா என்ன செய்வாள்... தந்தை செய்த தவறுக்காக தண்டனை அனுபவிக்கும் ஒரு கிள்ளைப்பூச்சி இவள்..

ராஜன் குறுகிய காலத்தில் எவ்வளவு பெயரும் புகழுடனும் சிகரம் தொட்டானோ அதைவிட வேகமாக பாதாளத்தில் விழுந்தான். பெண்களுடனான தகாத உறவால் இவன் எயிட்ஸ் வந்து இறந்தான்.இதனால் இவனது மனைவியும் கவலையால் இறந்து போக, மகன் வெட்கத்தால் மனமுடைந்து ஊரைவிட்டு எங்கேயோ போய் வாழ, நளா மட்டும் இன்று நரக வாழ்வில் சிக்குண்டு ஊர் மக்களின் நரம்பில்லா நாக்கால் சொல்லும் தீய வார்த்தைகளை கேட்டுக் கொண்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றாள்... இவ்வாறு அவள் மனச் சுமையை மீள வலியுறுத்தியவாறு அவளது நினைவுகள் திரும்பியது...

மண் பாத்திரத்தில் கிடந்த தண்ணீரை அள்ளி மடக்கு மடக்கு என்று குடித்துவிட்டு கிழிந்த சாறியைப் போர்வையாக போர்த்திக் கொண்டு படுத்துறங்கினாள். அவள் கனவில் மிகவும் அழகிய ஊர் ஒன்று தென்பட்டது. அங்கு மக்கள் எல்லாம் மிகவும் சந்தோசமாகவும் ஊர்த் தலைவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டும் வாழ்ந்து வந்தனர். பெண்களுடன் தப்பான சேட்டை விட்டால், தப்பானவர்களாக யாரும் வாழ்ந்தால் அந்த ஊரில் ஒரே ஒரு தண்டனை மரணம் தான் அவ்வாறுதான், இரவிலும் பயமில்லாமல் பெண்கள் நடமாடக் கூடிய ஊர். இந்த கிராமத்தில் களவு, கொலை எதுவுமில்லை. எல்லா மக்களும் மிகவும் சந்தோசமாகவும் சாதி,மத பேதமின்றி ஒரு தாய்ப் பிள்ளையாக வாழ்ந்து வந்தனர். தன்னிறைவுப் பொருளாதாரத்தில் உலகிற்கே எடுத்துக்காட்டான கட்டமைப்பில் இவ்வூர் சிறந்திருந்தது...

இவ்வாறு கனவு நல்லதாகப் போய்க் கொண்டிருந்த போது.. சேவல் மெல்லக் கூவிக் காலைப் பொழுதை வரவழைத்தது. மெல்லப் போர்வையை விலக்கிப் பார்த்து கூரையின் ஓட்டையால் ஒளிபரப்புவதைப் பார்த்து எழும்பி தனது காலைக் கடன்களை முடித்து விட்டு கடவுளுக்குப் பூவைத்துக் கும்பிட்டாள்.. "கடவுளே ஒண்டிக்கட்டையாக எவ்வளவு காலமாக வாழ்வது என்னை கூட்டிப்போ வயது முப்பத்தெட்டாகியும் திருமணம் முடிக்க முடியவில்லை".. அப்பா செய்த தவறுக்காக நான் தண்டனை அனுபவிப்பதா? ஏன் தான் இந்த மனிச வாழ்க்கை மட்டும் இப்படி ஒரு பக்கம் துன்பம் மறுபக்கம் இன்பம், உயர்ச்சி தாழ்வு என்று எல்லாம் மாறி மாறி வரும் .தைவிட மனிசரில் மட்டும் போட்டி பொறாமை, தாழ்வுச் சிக்கல், இன,மத,பேத பிரச்சினை, ஒற்றுமையின்மை எல்லாம் குடி கொண்டுள்ளது. இவ்வாறு எண்ணியவாறு தண்ணீர் எடுப்பதற்காக மாரி அம்மன் கோவில் கிணற்றடியை நோக்கிப் போனாள்.இவளைக் கண்டதும் எல்லோரும் எயிட்ஸ் ாரனின் மகள் என்று ஓட்டம் பிடிப்பார்கள்.ஆனால் இன்று ஏதோ மாற்றம் நிகழ்ந்தால் போல் இவள் முன்னே ஒரு ஆண் வந்து நின்றான்.அழகிய தோற்றமும் நேர்கொண்ட பார்வையும் கொண்டவனாக இருந்தான் .இவனை எங்கேயோ பார்த்த உணர்வு. ஆனால் யார் என்று அடையாளம் காண முடியவில்லை... அவன் தொடர்ந்தான் இஞ்ச பாருங்கோ நான் இந்த ஊர் கணக்கு வாத்தியாரின் மகன் பாலன். தொண்ணூற்றைந்தில் இடம்பெயர்ந்து போன பிறகு அப்படியே ஊரைவிட்டுப் போனவன் தான் இன்றைக்கு என் பழைய சொந்தத்தை தேடி வந்திருக்கிறன் ...பழைய சொந்தம் என்றால் என் சொந்தக்காரர் இல்லை எனக்குச் சொந்தமாக வேண்டியவள்.இந்த ஊரிலேயே அழகானவள் பெரிய பணக்காரி அவளின் அழகாலோ பணத்தாலோ நான் அவளைக் காதலிக்கவில்லை அவளின் நல்ல குணத்தாலேயே அவளைக் காதலித்தேன்.அது அவளுக்கே தெரியாது..கடந்த இருபத்து மூன்று வருடங்களாக அவளுடனோ இந்த ஊருடனோ எனக்கு தொடர்பு வைத்திருக்க முடியாத நிலை, தடுப்புக்காவலில் இருந்து பின்னர் கைதியாக்கப்பட்டு சிறைச்சாலையில் இருந்து நேற்றுத் தான் விடுதலையாகி வெளியில் வந்து நான் பதினெட்டு வயதாக இருக்கும் போது பதினைந்து வயதுப் பருவமங்கையாக இருந்த நளாவைக் காதலித்தேன் என் காதல் பற்றி அவளுக்குத் தெரியாததால் சிலசமயம் அவள் திருமணம் முடித்திருக்கக் கூடும் இல்லையேல் யுத்தம் காரணமாக வேறு எங்கும் சென்றிருக்கக்கூடும் அவளது வீட்டில யாராவது இருப்பார்கள் என்று அங்கு போனால் வீடு பூட்டியிருக்கு நளா இல்லம் என்ற பெயர்ப்பலகை மட்டும் இருக்கு. அருகில் ஒருவரும் இல்லை. தூரத்தில் உங்களைக் கண்டுவிட்டு உங்களிடம் விசாரிக்கலாம் என்று தான் வந்தேன்.உங்களுக்கு நளா பற்றி ஏதேனும் தெரியுமா?.... என்ற அவனது ஆர்வத்துடனான கேள்விக்கு நான் தான் நளா என்று சொல்லி ஓவென அழுது கட்டியணைக்கனும் போலிருந்தது. இருந்தும் அவள் மனம் தடுத்தது.ஒரு எயிட்ஸ் நோயாளியாக எனது அப்பா இறந்தார். எமது சொத்துச் சுகம் எனது அழகு அத்தனையும் பாழாகிப் போய் விட்டது என்று சொல்வதா?....என்ன செய்வது என்று தெரியாது மௌனம் காத்தாள் விடியலுக்கான அறிகுறி தென்பட்டும் வெளிச்சம் இழந்த காலைப் பொழுது போல... கண்களால் கண்ணீர் மட்டும் ஆறாய்ப் பாய்ந்தது...

அரியாலையூர்
குணரத்தினம் பிரதீபன்

# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக நலன் பற்றிய கண்ணோட்டம் 12

# மீண்டும் திரளும் குப்பை

ஒரு இளவரசனுக்கு பொழுது புலர்ந்தால் முடிசூட்டு விழா. நிகழ்விற்கு முன்னதாக அவனைப் பால் கொண்டு குளிப்பாட்ட வேண்டும் என்பது மரபு. எனவே அரண்மனை வாயிலுக்கருக்கில் பெரிய தொட்டி கட்டப்பட்டது. அதை பொழுது புலர்வதற்கு முன்பதாக ஒவ்வொரு குடிமகனும் ஒரு குடம் பால் எடுத்துவந்து நிரப்ப வேண்டும் என்பது அரச கட்டளை.

இரவோடு இரவாக ஒவ்வொருவராக குடத்தை நிறைத்து வந்து தொட்டியை நிரப்பினார்கள். "எல்லோரும் பால் கொண்டு வந்து நிரப்பும் போது நான் மட்டும் ஒரு குடம் நீரை அதனுள் ஊற்றினால் மற்றவர்களுக்குத் தெரியவா போகிறது" என ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டு நீரை ஊற்றினர்.

பொழுது புலர்ந்ததும் தொட்டியை எட்டிப் பார்த்த இராஜகுரு மயங்கிச் சரிந்தார். தொட்டி நீரால் நிரம்பி வழிந்தது.

இந்தக் கதையை 1977 ஆம் ஆண்டு தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் திருகோணமலை தொகுதியில் முதன்முதலில் போட்டியிட்டபோது முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய செயல திபருமாக விளங்கிய அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் திருமலை மின்சார நிலைய வீதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்களின் பலத்த கரகோசத்திற்கு மத்தியில் கூறினர்.

எல்லோர் வாக்கும் இரா.சம்பந்தனுக்கே என உறுதியாகிய நிலையில் யாராவது ஒருவர் தன் வாக்களிப்பால் என்ன நேர்ந்துவிடபோகிறதென்று நினைத்து அஜாக்கிரதையாக வேறு யாருக்காவது வாக்களித்தால், பாலும் நீராகும் நிலை ஏற்படலாம். எனவே



வாக்குகளை சிதறாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்பது அமரர் அமிர்தலிங்கத்தின் கருத்துப் பிரதிபலிப்பு.

இவ்வார விழிச்சுடரின் பார்வை அரசியல் பக்கமாக தாவுகிறதா என நீங்கள் ஊகித்தால் அது தவறு. ஆனாலும் இன்றைய நம் நாட்டு அரசியல் நிலை பற்றி பொதுவாகப் பலராலும் சிலேகிக்கப்படும் அடைமொழியுடன் ஒரு வகையில் இன்றைய விழிச்சுடர் கண்ணோட்டத்தின் கருப்பொருள் தொடர்புபட்டது. "கழிவு" அல்லது "குப்பை " பற்றியே எம் இவ்வாரப் பார்வை வலம் வரப் போகிறது.

"பால்" பற்றிய அமரர் அமிர்தலிங்கத்தின் கதைக்கும் "குப்பைக்கும் " என்ன தொடர்பு என்று நீங்கள் கேட்பது புரிகிறது. "சனநடமாட்டமில்லா இடத்தில் நான் மட்டும் குப்பையைக் கொட்டினால் என்ன பாதிப்பு வரப்போகிறது " என நினைத்து நாம் ஒவ்வொருவரும் இரவோடு இரவாக கொட்டும் குப்பை மறு நாள் கொழும்பின் மீதொட்டமுல்ல போலவோ. புத்தளத்தின் அருவைக்காடு போலவோ அன்றேல் நம்ம காக்கை தீவு, கல்லுண்டாய் வெளி போலவோ குப்பை மலையாக மாறி விடுகின்றது.

### யாழ்.மாவட்டமும், திண்மக் கழிவகற்றலும்.

இன்று வளர்முக நாடுகளின் நகரங்கள் எதிர் நோக்கும் முக்கிய சவாலாக திண்மக்கழிவகற்றலும் (குப்பை) கருதப்படுகின்றது.

பல்வேறு பொறிமுறைகள், தொழில் நுட்பம், விழிப்புணர்வூட்டல் ஆகியன பிரயோகிக்கப்பட்டாலும் எம் பிரதேசத்தவர்களின் பொது நலன் குறித்த அக்கறையின்மை. கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் பொறிமுறைகள் பற்றிய விழிப்புணர்வின்மை போன்றன நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளால் நாளொன்றுக்கு சுமார் 100 மெற்றிக் தொன் திண்மக்கழிவு அகற்றப்படுகின்றது. இதில் 20 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்புடைய, சுமார் 92000 மக்கள் குடியிருக்கும் யாழ். மாநகரத்தில் மட்டும் 70 மெற்றிக் தொன் (70000 கிலோகிராம்) கழிவு தினமும் அகற்றப்படுகின்றது. இதற்காக தினமும் 333970 ரூபாய் செலவிடப்படுகின்றது. அதாவது ஆண்டொன்றிற்கு சுமார் 13 கோடி ரூபாய் செலவாகிறது. யாழ். மாநகரத்திற்கு அடுத்தபடியாக. கரவெட்டி பிரதேசபை. சாவகச்சேரி நகரசபை மற்றும் வலி.தென் மேற்கு பிரதேச சபைகளில் தினமும் சராசரி 5 மெற்றிக் தொன் கழிவு அகற்றப்படுகின்றது. குறைந்த பட்சமாக வலி.மேற்கு பிரதேச சபையில் 2 மெற்றிக் தொன் கழிவு தினமும் அகற்றப்படுகிறது.

தினசரிக் கழிவுகளில் 73 சத விகிதமானவை சேதனக் கழிவுகளாகும். இவற்றில் உக்கக்கூடிய தாவரக்கழிவுகள் மற்றும் சமையலறைக் கழிவுகளடங்குகின்றன. 14 விகிதம் கடதாசிக்கழிவுகளும், 4 விகிதம் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளும், தலா ஒரு விகிதம் கண்ணாடி மற்றும் உலோகக்கழிவுகளும், மிகுதி 7 விகிதம் மருத்துவ மற்றும் ஏனைய கழிவுகளாகவும் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்ட வீடுகளில் திண்மக் கழிவு அகற்றும் பொறுப்பைப் பொறுத்தவரையில் 76 விகிதம் பெண்களும், 24 விகிதம் ஆண்களும் ஈடுபடுகின்றனர்.

யாழ்.மாநகரைப் பொறுத்தவரையில்




82 விகிதமானவர்கள் தம் வீட்டுத் திண்மக்கழிவகற்றலுக்காக மாநகர சபையிலேயே தங்கியுள்ளனர்.

39 விகிதமானோர் தினமும் மாநகர சபையின் கழிவகற்றல் சேவையைப் பெற்றுக் கொள்வதாகவும், 48 விகிதமானோர் வாரத்திலொருமுறை மாநகரசபையால் இச் சேவை கிடைப்பதாகவும் தெரிவிக்கும் அதேவேளை 13 விகிதமானோர் இச்சேவை தமக்கு கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

26 விகிதமானோர் உள்ளூராட்சிச் சபைகளின் கழிவகற்றல் பொறிமுறையில் மிகுந்த திருப்தி கொண்டுள்ளனர். 30 விகிதமானோர் கழிவுகளை தரம் பிரித்து வழங்கும் பொறிமுறைக்கு பூரண ஒத்துழைப்பு நல்குகின்றனர். ஆயினும் 41 விகிதமானோர் கழிவுகளைத் தரம் பிரிக்கும் பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. சுமார் 64 விகிதமானோர் இன்னும் தம் வீட்டுக் கழிவுகளை வீட்டுக்கு வெளியே வைப்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் யாழ். நகரில் மட்டுமே கழிவகற்றல் பொறிமுறை கடினமான சவால்களை எதிர்கொண்டுள்ளது. ஏனைய உள்ளூராட்சிசபைகளைப் பொறுத்தவரையில் குடித்தொகைப் பரம்பல் குறைவாகவும், போதிய நிலப்பரப்புமிருப்பதால் கழிவகற்றல் தொடர்பான அச்சுறுத்தல்கள் குறைவாகவேயுள்ளன.

கழிவுகள் உக்கும் தாவர மற்றும் விலங்குக் கழிவுகள், ஊறு விளைவிக்கக் கூடிய கண்ணாடி மற்றும் உலோகக் கழிவுகள், உக்காத மீள்சுழற்சிக்குட்படக் கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள், கடதாசி மற்றும் துணிக் கழிவுகள், இரசாயன மற்றும் இலத்திரனியல் கழிவுகள், மருத்துவக் கழிவுகள் என சர்வதேச ரீதியில் ஆறு வகைப்படுத்தப் படுகின்றன.

ஆயினும் பயன்பாட்டு அடிப்படையில் மீள் பயன்பாட்டிற்குரியன ( Reuse), மீள் சுழற்சிக்குரியன (Recycle), குறைக்கப்பட அல்லது அழிக்கப்பட வேண்டியன (Reduce) என 3R தலைப்பிடப்பட்டு வகுக்கப்பட்டுள்ளன.

கழிவுகளில் சுமார் 75 விகிதமானவை மீள்பயன்பாட்டுக்குரியன. குறிப்பாக சேதனக் கழிவுகள் சேதனப் பசளையாக மாற்றப்பட்டு பயன்படுத்தக்கூடியன. இம் முயற்சி சிறியளவில் தற்போது இங்கும் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

கடதாசி,பிளாஸ்ரிக்,கண்ணாடி மற்றும் உலோகப் பொருட் கள் மீள்சுழற்சிக்காக பிறநாடுகளுக்கு கணிசமாக அனுப்பப்படுவதால் நிறைவான வருமானம் ஈட்டப்படுகிறது. தன் மகளின் திருமணத்திற்கு கோடிக்கணக்கில் வாரியிறைத்து தற்போது ஊடகங்களில் பிரமாண்டமாகப் பேசப்படும் முகேஷ் அம்பானி ஆரம்பகாலத்தில் வெற்றுப் போத்தல் வியாபாரத்திலேயே ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலத்திரனியல் மற்றும் மருத்துவ கழிவுகள் ஆபத்தானவை மட்டுமன்றி பலநூற்றாண்டுகளுக்கு சூழலிற்கும் ஊறுவிளைவிக்கக்கூடியன. அவை தொடர்பான விழிப்புணர்வு இன்னும் இங்கு வளரவில்லை. எம் வீட்டிலேயே கதிர்வீச்சுக் கொண்ட பழைய கைபேசிகள். இலத்திரனியல் பொருட்களை அப்புறப்படுத்த மனமில்லாமல்



தேக்கிவைத்துள்ளோம். இவற்றை உரிய சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைப்பதே பொருத்தமானது. மத்திய சுற்றாடல் அதிகார சபை இது தொடர்பில் காலத்திற்கு காலம் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.



## அக்னி

### கழிவகற்றலும், மக்களின் மனப்பாங்கும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் பெரு வெற்றி பெற்றுள்ளது. அதற்கு காரணம் மேம்பட்ட நவீன கழிவகற்றல் கருவிகளின் பயன்பாடு, பொருத்தமான திட்ட அமுலாக்கம் ஆகியவற்றோடு மக்களின் உயரிய மனப்பாங்குமாகும். கனடா போன்ற மேற்கத்தைய நாடுகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களே அதிக வேதனம் பெறுகின்றனர். அத்துடன் பாரிய தூசி உறிஞ்சி இயந்திரங்கள் (vacuum cleaner) பயன்படுத்தப் படுகின்றன. கண்டபடி கழிவுகளை அகற்றமுடியாதவாறு சட்டம் அரண் செய்கிறது. கழிவகற்றலில் சூழல் கவனத்திற் கொள்ளப்படுகின்றது.

மலேசியாவிலிருந்து சுதந்திரம் பெற்றபோது சேரிக்குடியிருப்புக்களும், குப்பைக் கூழங்களும், இழிநிலை மனித வாழ்வுமென்றிருந்த சிங்கப்பூரை சுற்றாடல் பேணலில் முதல் நிலை நாடாக்கி, பொருளாதார வளர்ச்சியில் முதன்மையுற வைத்தது லீகுவான்யூ இன் மனப்பாங்கு மாற்றத்தை தோற்றுவிக்கும் மானிடபொறியியல் கட்டமைப்புக்கொள்கையே யாகும்(human engineering policy).

ஆனால் எம் பிரதேசங்களில் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் தோற்றுப் போனதற்கு முதன்மைக் காரணம் மக்களின் குறுகிய மனப்பாங்கேயாகும்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் அதிகளவு திண்மக்கழிவகற்றலை முகாமை செய்யும் நிறுவனமாகிய



யாழ். மாநகர சபை காலத்திற்குக் காலம் பல்வேறு உபாயங்களை மேற்கொண்டபோதும் இன்றுவரை வீதிகள் குப்பைகளால் நிரம்பியே வழிகின்றன. சுமார் 6 வருடங்களுக்கு முன் பொது இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டபோது சில தொட்டிகள் களவு போயின. மேலும் சில எரியூட்டப்பட்டன. தொட்டி களுக்குள் குப்பையை போடுவதற்கு பதிலாக வெளியே வீசியமையால் அந்த இடமே நாறிப்போனது.

கடந்த வருடத்தில் குப்பை என்பது. பூதாகரமான பிரச்சினையாக மாறியது. பாமரர் மட்டுமன்றி படித்தவர்களும் குப்பைகளை கண்டகண்ட இடத்தில் வீசியதால் உயர்மட்ட மகாநாடு கூட கூட்டப்பட்டு குப்பைப் பிரச்சினை ஆராயப்பட்டது. சில இடங்களில் CCTV கமெராக்களும் பொருத்தப்பட்டன. சிலர் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வருட ஆரம்பத்தில் மீளவும் திண்மக்கழிவகற்றல் ஒரு வரைமுறைக்குள் கொண்டுவரப்பட்டு ஓரளவு ஒழுங்கானது. ஆயினும் மக்கள் நன்மை கருதி பொது இடங்களில் தரம் பிரித்து அகற்றுவதற்கென வைக்கப்பட்ட கழிவு சேகரிப்புத் தொட்டிகளுடன் மீளவும் தூங்கிக்கிடந்த குப்பை என்ற வேதாளம் விழித்துக் கொண்டது.

தொட்டிகளுக்குப் பதிலாக வீதிகள் கழிவுகளால் நிறைந்தன. மலக் கழிவுகளும், இறந்த விலங்குகளும் கூட தொட்டிகளை அலங்கரித்தன. ஈற்றில் மாநகரசபையே குறித்த தொட்டிகளை அப்புறப்படுத்தும் நிலையேற்பட்டது.

இவையெல்லாம் மக்களின் குறுகிய மனப்பாங்காலேயே நிகழ்ந்தவை. குப்பைகளை தரம் பிரிப்பதிலும் மக்கள் ஒத்துழைப்பு போதுமானதாகவில்லை. மேலும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் மனிதர்களே என்ற சிந்தனையும் மங்கிவிட்டது.

திண்மக்கழிவகற்றலின் தோல்விக்கு மக்களின் மனப்பாங்கு கணிசமான பங்களிப்பை நல்கும் அதே வேளை உள்ளூராட்சி சபைகள் பக்கத்திலும் சில குறைபாடுகள் உண்டு.

குறிப்பாக போதுமான இயந்திரங்கள் மற்றும் வாகன வசதியின்மை என்பது பெரும் தடையாகும். அத்துடன் கழிவகற்றல் திட்டவொழுங்கில் நிரல்படுத்தப்பட்டாலும், அட்டவணைக்கும், அமுலாக்கத்திற்கும் தொடர்பிருப்பதில்லை. அத்துடன் தொழிலாளரில் பலர் 4 முதல் 5 மணித்தியாலங்கள் வரையே உத்தியோகபூர்வ கடமை புரிகின்றனர்.

அதன் பின் அவர்கள் தனிப்பட்ட வருமான ஈட்டல் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். ஒரு சில பணியாளர்கள் "சந்தோசக் கொடுப்பனவை" எதிர்பார்ப்பதும் தொழில் வினைத் திறனைப் பாதிக்கின்றது.

அகற்றப்படும் திண்மக்கழிவுகள் கொட்டப்படும் இடங்கள் தொடர்பிலும், செயன்முறை தொடர்பிலும் காரசாரமான விமர்சனங்களுமுண்டு. குறிப்பாக மருத்துவக் கழிவு, மனிதக் கழிவு என்பன தொடர்பில் மக்கள் முகம் சுழிக்கின்றனர்.

எது எவ்வாறாயினும் நகரத்தில் திண்மக்கழிவகற்றல் என்பது சீராக நீண்ட காலம் தேவையென்பதே இன்றைய நிலை சொல்லும் செய்தி.

வினைத்திறன் மிக்க பொறிமுறையொன்றை நிர்வாகம் அமுல்படுத்த வேண்டியதும் அவசியமாகும். மக்கள் நேர் மனப்பாங்குடன் கழிவகற்றலில் பங்குபெறுதலும் காலத்தின் தேவையாகும்.

இலகுவில் குப்பைகளை கண்ட கண்ட இடத்திலும் காடாத்த வசதியான சொப்பிங் பாக்மற்றும் உரப்பை பாவனை நம்மை விட்டு அகலும் போதுதான் குப்பையிலிருந்து நமக்கு நிரந்தர விடுதலை.

## இது நம்ம கதைகள்... 28

# இயேசுவும், யூதாசும்



மார்கழி மலர்ந்துவிட்டால் கிறிஸ்மஸ் கொண்டாட்டமும் களைகட்ட ஆரம்பித்துவிடும். இன்று கிறிஸ்மஸ் பற்றி கிறிஸ்தவர்கள் சிந்திப்பதற்கு முன்பே வர்த்தக நிலையங்களில் தினுசு தினுசாக பொருட்கள் நிரம்பி வழியத் தொடங்கிவிடும். இன்றைய கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் ஆன்மீகத்தை விட ஆடம்பரமே முதன்மை பெறுகின்றது என்ற விமர்சனங்களும் ஆங்காங்கே எழுவதுமுண்டு.

எது எவ்வாறாயினும் பாவ இருளில் மூழ்கியிருந்த இப்பூவுலகை மீட்க இறைவனின் திருமகன் இயேசு கிறிஸ்து மனிதனாக அவதரித்த நாளே கிறிஸ்மஸ். இது மனிதகுல விடுதலையின் அத்திபாரம். இது கொண்டாடப்பட வேண்டிய பண்டிகை தான். ஆரம்ப காலத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படும் பாரம்பரியம் காணப்படவில்லை. ஆயினும் ரோமை சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவம் வேரூன்றிய பின் கி.பி 200 ஆம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் புதுமெருகுற்றன.

கிறிஸ்மஸ் பண்டிகையின் முக்கிய அடையாளங்களான கிறிஸ்மஸ் குடில் வைத்தல் புனித.பிரான்சிஸ்கு அசிசியால் 1223 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிறிஸ்மஸ் மரம் காட்சிப்படுத்தல் 8 ஆம் நூற்றாண்டில் புனித. பொனிபஸ் அவர்களால் ஜேர்மனியில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆயினும் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மர பாரம்பரியம் 1521 இல் ஜேர்மனிய இளவரசி ஹெலினாவால் அறிமுகம் செய்யப்பட்டது.

யூதேயா நாட்டின் ஜெருசலேம் நகரை அண்மித்த பெத்தலகேம் என்னும் கிராமத்தில் இயேசு கிறிஸ்து அவதரித்தார். 33 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த அவர் இறுதி மூன்று வருடங்கள் இறையரசுக்காகத் தீவிரமாகப் பணியாற்றி ஈற்றில் உலகை மீட்கும் தன் முயற்சியில் சிலுவையில் தன்னையே ஆகுதியாக்கி மக்களினத்திற்கு வாழ்வளித்தார்.

அவரின் இவ்வுலகப் பணியில் பன்னிருவரைத் தம் சீடராகத் தேர்ந்து அவர்களையும் தன் பணியில் ஒன்றிணைத்தார். இது கிறிஸ்தவர்களின் வேதநூலாகிய திருவிவிலியம் எடுத்துரைக்கும் வரலாற்றுக் குறிப்புக்கள்.

இனி இவ்வாரக் கதை.......

அந்த நாட்டின் புகழ்பூத்த ஓவியர் அவர்.

தத்ரூபமாக சித்திரங்களை வரைவதில் அவருக்கு அவர் தான் நிகர். இயேசுவையும், அவர் சீடர்களையும் வரைய வேண்டுமென் பது அவரின் வாழ்நாள் கனவு.



பொதுவாக ஒரு ஓவியத்தை வரையமுன் வரையப்படுபவர் பற்றிய முழுவிபரங்களையும் திரட்டி, அவரின் தோற்றம், குணாம்சங்கள் பற்றி மனக் கண்ணில் உருவகித்துக் கொள்வார். அதன்படி வரையப்படுபவரின் தோற்றம், குணாம்சம் உடைய ஒருவரைத் தேர்ந்தெடுத்து.அவரை மாதிரியாக (Model) வைத்து ஓவியத்தைப் படைப்பதே அவரது பாணி. இதனால் தான் அவரின் ஓவியங்கள் தத்ரூபமாக அமைந்தன.

முதலில் இயேசுவைப் போல் தோற்றம், குணமுடைய ஒருவரைத் தேடினார். முயற்சி வீண் போகவில்லை. இயேசுவைப் போன்ற வசீகரத் தோற்றம், தெய்வீகக்களை, கருணை- அன்பு- பொறுமை - சாந்தம் ஆகிய குணங்கள் நிறைந்த, கண்களில் தீர்க்கதரிசனம் ததும்பிய பார்வையென அனைத்திலும் சட்சாத் இயேசுவாகவே இளைஞனொருவன் ஓவியரின் பார்வையில் சிக்கினான். அவனை மாதிரியாக வைத்து வரையப்பட்ட இயேசுவின் உரு உயிரோவியமானது.

அதன் பின்னர் இயேசுவின் 12 சீடர்களையும் வரையும் முயற்சியில் இறங்கினார் ஓவியர். முதலில் தலைமைச்சீடர் புனித.பேதுரு. அதன் பின் ஒவ்வொருவராக 11 சீடர்களை வரைந்தார். எல்லா சீடர்களுக்கும் அவர்களின் சாயல், சுபாவம் பொருந்திய மனித மாதிரிகள் இலகுவாகக் கிடைத்தனர். இறுதியில் இயேசுவை 30 வெள்ளிக் காசுகளுக்குக் காட்டிக் கொடுத்த யூதாஸ் உருவத்தை வரைவதே பாக்கி. ஆனால் 3 ஆண்டுகளாகத் தேடியும் கொடூர முகமும், நயவஞ்சக குணமும், பேராசையும் நிறைந்த மனத்திரையில் காட்சி தந்த மனிதன் நிஜத்தில் அகப்படவில்லை.

யூதாசைத் தேடிய பயணம் தொடர்ந்தது. ஒருநாள் ஓவியரின் கற்பனையில் உருவகித்த யூதாஸ் போன்ற தோற்றம், குணம் படைத்தவொருவன் சிக்கினான். அவனை மாதிரியாக வைத்து ஓவியத்தின் இறுதிப்பகுதியை வரையலானார் ஓவியர். அந்த மனிதனை இதற்குமுன்னும் எங்கோ சந்தித்த உணர்வு ஓவியருக்கு அடிக்கடியேற்பட்டது. " உம்மை இதற்கு முன்பு எங்காவது சந்தித்துள்ளேனா "என தன் சந்தேகத்தை அவனிடமே கேட்டார்.


சற்று சங்கடத்துடன் "ஆம்" என்றான் அவன். தன் புருவத்தை உயர்த்தி "எங்கே ?" என்று வினவினார் ஓவியர்.

"நீங்கள் மூன்று வருடங்களுக்கு முன் இயேசுவை வரைந்த போது என்னைத் தான் இயேசுவின் மாதிரியாக வைத்து வரைந்தீர்கள் " என்றான் தலையைக் கவிழ்ந்தவாறு. ஓவியர் அதிர்ந்து போனார். "அப்போது உன்னிடமிருந்த வசீகரம், தெய்வீகக்களை, நற்குணங்களெல்லாம் மறைந்து உன்னில் கொடூர முகமும், தீய குணங்களும் எவ்வாறு குடி கொண்டன" என ஓவியர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"எனக்கு சில கெட்ட நண்பர்களின் சகவாசம் கிடைத்தது. அவர்களோடு சேர்ந்து போதைக்கும், பேதைகளுக்கும் அடிமையானேன். காசு தீர்ந்ததும் களவெடுத்தேன். பொய்யும், வஞ்சகமும் என் வசமாகின. வன்முறை என் துணையாகியது. என் சாயலும், சுபாவமும் மாறின. எல்லோராலும் விரும்பப்பட்ட நான் இப்போது வெறுக்கப்படுபவனாக மாறினேன் " என்றான் கண்களில் கண்ணீர் மல்க. ஒரு அப்பழுக்கற்ற மனிதனை அவனது சுற்றமும், சூழலும் இப்படி மாசு நிறைந்தவனாக மாற்றிவிட்டதே என நினைத்து ஓவியரும் கண்கலங்கினார். ஓவியமும் நிறைவுற்றது.

**எந்தக் குழந்தையும்-நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே.**
**அவன் நல்லவனாவதும், தீயவனாவதும் சூழல் அமைப்பினிலே.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**



# ஈழத்தமிழர் பற்று நெஞ்சில் நெருப்பாக அடைகாக்கப்படுகிறது

## சீறும் சீமான்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த நாளான நவம்பர் 26 ஆம் திகதியை தமிழ் இன எழுச்சி மீட்சி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர் நாம் தமிழர் கட்சியினர். இரத்த தான முகாம், கறி விருந்து, கருத்தரங்கம் என்று தடல்புடல் விழாவுக்கு இடையே தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானிடம் சில கேள்விகளை முன்வைத் தோம்.

**“தமிழ்நாட்டில், 2009 கால கட்டத்தில் ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சியாக இருந்தது. 2018இல் அந்த எழுச்சி குறைந்துள்ளதா?”**

“தமிழ்நாட்டு கட்சித் தலைவர்களுக்கு இடையே, 'யார் தமிழினத்துக்குத் தலைவனாவது?' என்கிற போட்டியில், எங்கள் அண்ணன் பிரபாகரனை பயங்கரவாதியாகச் சித்திரித்தனர். எங்களைப் போன்ற ஈழ ஆதரவாளர்களை, 'புலிகளிடமிருந்து கோடி கோடியாகப் பணம் வாங்குகிறார்கள்' என்று கொச்சைப்படுத்தினர். இப்படிப் பரப்பப்படும் அயோக்கியத்தனமான கருத்துகளால், ஈழ எழுச்சி குறைந்திருப்பதாக ஒரு தோற்றம் ஏற்பட்டுள்ளது. உண்மையில், இலட்சக்கணக்கான தமிழ் பிள்ளைகளின் நெஞ்சில் நெருப்பாக அது அடைகாத்து வைக்கப்பட்டுள்ளது.”

**“இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ-ரணில் விக்கிரமசிங்க - மைத்திரிபால சிறிசேன என அதிகாரப் போட்டி நிலவிக் கொண்டிருக்கிறது. இந்த அரசியல் சூழல், ஈழத் தமிழர்கள் மத்தியில் எதுமாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும்?”**

“இலங்கையில் அரசியல் முடிவுகளைத் தீர்மானிப்பது புத்த பிக்குகள், பௌத்த பீடங்கள்தான். இலங்கையில் ஜனாதிபதியாக, பிரதமராக யார் வந்தாலும், ஈழத் தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகத்தான் நடத்தப்படுவார்கள். ஈழத்துக்கு இப்போதைய தேவை, பொது வாக்கெடுப்பு மட்டுமே.”

> “இலங்கையில் அரசியல் முடிவுகளைத் தீர்மானிப்பது புத்த பிக்குகள், பௌத்த பீடங்கள்தான். இலங்கையில் ஜனாதிபதியாக, பிரதமராக யார் வந்தாலும், ஈழத் தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகத் தான் நடத்தப்படுவார்கள். ஈழத்துக்கு இப்போதைய தேவை, பொது வாக்கெடுப்பு மட்டுமே”

**“கஜா புயலில்தமிழக அரசின்செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன?”**

“அமைச்சர்களை, அதிகாரிகளை ஊருக்குள் விடாமல் கோபத்தில் அடித்து விரட்டுகிறார்கள் மக்கள். இதிலிருந்தே அரசின் செயற்பாடுகளைப் புரிந்துகொள்ளலாம். 80 ஆயிரத்திற்கும் அதிகமான மின் கம்பங்கள் சாய்ந்துவிட்டன. கையிருப்பு ஏழாயிரம் கம்பங்களே இருந்திருக்கின்றன. முன் தயாரிப்பு வேண்டாமா? இவ்வளவு மரங்கள் சாயும், இவ்வளவு வீடுகள் இடியும் என்று அரசிடம் கணக்கு இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. பேரிடர் மேலாண்மை என்று ஒன்று இந்த நாட்டில் இருக்கிறதா, மீட்புப் படைகள் இருக்கின்றனவா என்பதே சந்தேகமாக இருக்கிறது.”

**“முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஹெலிகொப்டரில் டெல்டா மாவட்டங்களைப் பார்வையிட்டாரே?”**

“மேலே இருந்து பார்த்தால் எல்லாமே பச்சையாக, வெள்ளமாகத்தானே தெரியும். இறங்கிப் பார்த்தால்தானே இழப்பு புரியும். இந்த ஹெலிகொப்டரை எல்லாம் ஒருநாள் நொறுக்கிப் போட்டால்தான் சரியாக வருவார்கள்.”

**“கஜா புயல் நிவாரண உதவிகளில் மத்திய அரசு தமிழகத்தைப் புறக்கணிக்கிறதா?”**

“தமிழகத்தில் எந்தப் புயல் தாக்கினாலும், தமிழர்களை அவர்கள் கண்டு கொள்வதே இல்லை. 'தானே' புயலுக்கு நாம் கேட்டது ஐந்தாயிரம் கோடி ரூபாய். அவர்கள் சொன்னது 500 கோடி ரூபாய். அதையாவது கொடுத்தார்களா என்று தெரியவில்லை. எதற்கெடுத்தாலும் டுவிட்டரில் சுட்டி போடும் இந்தியப் பிரதமர், நம் துயரத்தைக் கண்டுகொள்ளவே இல்லை. அவர்களுக்கு தமிழர்களின் உயிர்கள் எப்போதும் தேவையற்றவை தான்.”

**“எப்போதுமே மத்திய அரசின் செயற்பாடுகளை விமர்சிப்பது தான் உங்கள் நோக்கமா?”**

“என் மாநிலத்தின் நெய்வேலி மின்சாரம், நரிமணம் பெற்றோலை எடுத்துக் கொண்டுபோவார்கள். ஆனால், காவிரியில் அவரவர் நீர் வளம் அவரவர்களுக்கே என்று சொன்னால் ஆத்திரம் வருமா, வராதா? இந்த மோசமான ஆட்சியாளர்களுக்கு மண்ணை நேசிப்பவன் பயங்கரவாதி, அதை விற்பவன் தலைவன். ஸ்டெர்லைட் ஆலைக்காகக் கவலைப்படுகிற மத்திய அரசு, எங்கள் மண்ணில் கொள்ளையடிக்கப்படும் தண்ணீருக்காகக் கவலைப்படவில்லை. எனக்கு யார் மீதும் பயமில்லை. அதனால், துணிந்து பேசுகிறேன்.”

**“அண்மையில், 'சர்கார்' படத்தில் இலவசம் குறித்த சர்ச்சை வெடித்தது. நீங்களும் உங்கள் மேடைகளில் இலவசங்களைக் கடுமையாகச் சாடுகிறீர்கள். உண்மையில், அவை மக்கள் நலத் திட்டங்கள்தானே?”**

“ஜெயலலிதாவுக்கு அப்பலோ. கருணாநிதிக்கு காவேரி மருத்துவமனை. அப்படியெனில், அரசு மருத்துவமனைகள் எதற்கு? உங்களுக்குக் கிடைக்கும் சிகிச்சை, எங்கள் ஆத்தாளுக்கும் அப்பனுக்கும் கிடைக்க வேண்டாமா? நாட்டு மக்களுக்கு உடனடித் தேவை இலவச மருத்துவமும் கல்வியும்தான்.”

**“ரஜினி, கமல், விஜய் என அரசியல் படையெடுப்புகள் தொடர்கின்றன. யாருக்கு உங்கள் ஆதரவு?”**

“நான் ஏன் அவர்களை ஆதரிக்கணும்? இவர்கள் யாரிடமும் சித்தாந்தம் இல்லை. தமிழ்நாட்டின் தேவை தற்சார்பு, தன்னிறைவு. அதை நோக்கிய ஆட்சி முறையை 'நாம் தமிழர்' மட்டுமே அமுல்படுத்தும்.”

**“ஆட்சிக்கு வருவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளதா?”**

“சில ஆண்டுகளுக்கு முன்பு இம்ரான் கான் தேர்தலில் தோல்வி அடைந்தார். அதுகுறித்து அவரிடம் கேட்ட போது, 'என் வாக்காளர்கள் இப்போதுதான் பள்ளி, கல்லூரிகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்' என்றார். இன்றைக்கு அவர் பாகிஸ்தானின் பிரதமர். என் வாக்காளர்களும் பள்ளிக்கும் கல்லூரிக்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள்.”

ஜூனியர் விகடன்

# அம்பானி வீட்டுத் திருமணம்



அம்பானி குடும்பத்தின் திருமண நிகழ்வால் ஏரிகள் நிறைந்த உதய்பூர் நகரம் ஜொலிக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் மிக அழகான நகரங்களுள் ஒன்று உதய்பூர். ராஜஸ்தானின் ஏரிகள் நிறைந்த இந்த நகரைப் பார்த் தாலே மனசு துள்ளும். ஹோட்டல்கள்கூட அரண்மனை வடிவில் கலை அழகுடன் கட்டப்பட்டிருக்கும்.

உலக மகா கோடீஸ்வரர்களில் ஒருவரான அனில் அம்பானியின் மகள் இஷாவுக்கும் ஆனந்த் பிரமாலுக்கும் வரும் 12ஆம் திகதி மும்பையில் திருமணம் நடைபெறுகிறது. முன்னதாக 8 மற்றும் 9ஆம் திகதிகளில் உதய்பூரில் இரு நாள்கள் திருமணத்துக்கு முந்தைய சடங்குகள் நடைபெறுகின்றன. இதற்காக, உதய்பூரில் பிரமாண்ட மேஇஷாவின் திருமணத்துக்காக அடிக்கப்பட்ட அழைப்பிதழின் விலையே ரூ.3 லட்சம். இவ்வளவு விலை மதிப்பில் தயாரிக்கப்பட்ட அழைப்பிதழ்களைத்தான் ராமேஸ்வரம் ராமநாத சுவாமி மற்றும் குருவாயூர், திருப்பதி கோயில்களில் வைத்துச் சிறப்பு பூஜை நடத்தினர் முகேஷ் அம்பானி. திருமணத்துக்குப் பிறகு மும்பை ஓர்லி பகுதியில் உள்ள ரூ.450 கோடி மதிப்புள்ள பங்களாவில் இஷா கணவருடன் வசிக்கப் போகின்றார். வீட்டுக்கு வரும் மருமகளுக்காக ஆனந்த் பிரமாலின் தந்தை அஜய் பிரமால் வீட்டைப் பார்த்துப் பார்த்துக் கட்டியுள்ளார்.

திருமணத்தில்பங்கேற்க உலகம்முழுவதும் இருந்து 1000 சிறப்பு விருந்தினர்கள் வருகை தருகின்றனர். இதனால், உதய்பூரில் உள்ள அனைத்து நட்சத்திர ஹோட்டல்களையும் அம்பானி குடும்பத்தினரே வாடகைக்கு எடுத்துள்ளனர். விருந்தினர்களின் பயன்பாட்டுக்காக இந்திய தயாரிப்பு கார்கள் எல்லாம் பயன்படுத்தப் போவதில்லை. ஜாகுவார், பி.எம். டபிள்யூ, மெர்ஸிடைஸ் பென்ஸ், ஆடி கார்கள் மட்டும் 1000 கார்கள் புக் செய்யப்பட்டுள்ளன. பொலிவுட் நட்சத்திரங்கள், தொழிலதிபர் கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பெரும் நிறுவனங்களின் தலைவர்கள், கிரிக்கெட் நட்சத்திரங்கள் இந்நிகழ்வில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதிக்குப் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டன், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஜான் கெர்ரி உள்ளிட்டோர் அம்பானி வீட்டு திருமணத்தில் பங்கேற்கப் போகும் வெளிநாட்டு அரசியல் பிரபலங்கள். ஏ.ஆர். ரஹ்மான் இசை நிகழ்ச்சி, பிரியங்கா சோப்ரா உள்ளிட்ட பொலிவுட் நட்சத்திரங்களின் நடனம் என உதய்பூர் களைக்கட்டப் போகிறது.


# ஐ.சி.சி. நம்பர் - 1 துடுப்பாட்ட வீரரை திரும்பிப் பார்க்காத இந்திய கிரிக்கெட் சபை




முன்னாள் நம்பர் 1 துடுப்பாட்ட வீரர், இருமுறை ஐ.பி.எல். கோப்பை, இரண்டு உலகக் கோப்பை வெற்றிகளின் நாயகன், மிகச்சிறந்த அணித் தலைவர், உதவும் கரம், டுவிட்டர் ஹீரோ, சமூக ஆர்வலர், மனித நேயமிக்கவர். இதுபோல பல சாதனைகளுக்கும், விடயங்களுக்கும் சொந்தக்காரர் கவுதம் கம்பீர். சச்சின், சேவாக், டோனி ஆகியோர் காலகட்டத்தில் கம்பீரின் சாதனைகள் மறைக்கப்பட்டுவிட்டன. அவரின் பங்களிப்புகள் அளவுக்கு அவரை நாம் கொண்டாடவில்லை என்பதே உண்மை.

2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவந்தார் கம்பீர். டெஸ்ட், ஒருநாள், இருபது-20 என மூன்று விதமான போட்டிகளிலும் முக்கிய வீரராக இருந்தார். மற்ற சிறந்த வீரர்கள் ஏதாவது ஒரு போர்மேட்டில் சரியாக ஆடமுடியாமல் இருந்தபோது, இவர் மட்டுமே மூன்று போர்மேட்டிலும் சிறப்பாக ஆடிவந்தார். 2009ஆம் ஆண்டு ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை பட்டியலில் முதலிடத் தில் இருந்தார். அதே ஆண்டு ஐ.சி.சியின் சிறந்த டெஸ்ட் வீரர் என்ற விருதை பெற்றார்.

2009இல் நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பாலோ ஒன் ஆகியபோது இந்திய அணி தோற்றுவிடும் என்று பலரும் நினைத்தனர். ஆனால், கம்பீரின் ஆட்டம் அவர்களது எண்ணத்தை தவிடு பொடியாக்கியது. 643 நிமிடங்கள், 436 பந்துகள், 137 ஓட்டங்கள். தோல்வியின்விளிம்பில்இருந்த இந்தியாவை காப்பாற்றினார். அந்தப் போட்டி சமநிலையில் முடிந்தது. கம்பீரின் மிகச்சிறந்த டெஸ்ட் இன்னிங்ஸ். டெஸ்ட் வரலாற்றில் சிறந்த இன்னிங்ஸ்களில் இதுவும் ஒன்று. டெஸ்ட் போட்டிகளில்சுனில்கவாஸ்கருக்கு பிறகு இந்திய அணியின் சிறந்த ஆரம்ப துடுப்பாட்டவீரர் கம்பீர் தான் என சேவாக் ஒருமுறை கூறியிருந்தார்.




ஆரம்ப துடுப்பாட்டவீரராக களமிறங்கிய கம்பீர், தான் சந்திக்கும் முதல் பந்திலிருந்தே தனது ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்துவார். தேவையானபோது நிதானமாகவும் ஆடுவார். எதிரணியின் பந்து வீச்சாளர்களை எளிதாக செட்டிலாக விடமாட்டார். தன்னுடன் அடுத்த முனையில் ஆடும்வீரருக்கும் நம்பிக்கையை அளிப்பார். அணியின் தேவைக்கு ஏற்ப, தன்னுடைய ஆட்ட வடிவத்தையும் மாற்றிக்கொள்வார். ஆட்டத்தின் தொடக்கத்தில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராகவும் அதிரடியை காட்ட தயங்கமாட்டார். இவருடைய இன்சைடு அவுட் ஷொட்கள் மிகவும் பிரபலம். கம்பீர்- சேவாக் ஜோடி இந்தியா வின் சிறந்த துடுப்பாட்ட இணைகளில் ஒன்றாகும்.

ஐ.பி.எல். போட்டிகளில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டனாக மிகவும் சிறப்பாக செயற்பட்டார். பெரிய அளவில் பின்னணி இல்லாத அணியை வழிநடத்தி இரு முறை கோப்பையை வென்றுள்ளார். குல்தீப் யாதவ் போன்ற இளம்வீரர்களை உருவாக்கியதில் கம்பீரின் பங்கு மிகப்பெரியது. அணியின் தேவைக்கு ஏற்ப தன்னுடைய பட்டிங் இடத்தை மாற்றிக்கொண்டார். சுயநலமின்றி, அணியின் வெற்றியை மட்டுமே கருத்தில் கொள்வார்.

இளைஞர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கி, அவர்களின் கிரிக்கெட் வாழ்வில் பெரும் பங்காற்றியுள்ளார். தன்னுடைய கிரிக்கெட் வாழ்வின் இக்கட்டான காலகட்டத்தில் கம்பீரின் உதவியே என்னை மாற்றியது என மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் வீரர் நிதிஷ் ரானா தெரிவித்திருந்தார்.

இந்திய அணிக்கு 6 ஒருநாள் போட்டிகளில் கப்டனாக இருந்துள்ளார். அந்த 6 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணியின் கப்டனாக அவரது பட்டிங் சராசரி 90. தொடர்ச்சியாக 5 டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்த வீரர், நான்கு டெஸ்ட் தொடர் களில் தொடர்ச்சியாக 300+ ஓட்டங்கள் எடுத்த ஒரே இந்திய வீரர் என்ற பெருமைகளை உடையவர் கம்பீர்.

இலங்கை அணி 2009இல் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள்போட்டியில் 316 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இந்திய அணி சேஸ் செய்து வென்றபோது கம்பீர நொட் அவுட் பட்ஸ்மேனாக 150 ஓட்டங்கள் குவித்தார். விராட் கோலி தன்னுடைய முதல்சதத்தை பதிவுசெய்தார். ஆட்டநாயகன் விருது கம்பீருக்கு வழங்கப்பட்டது. அந்த விருதை அப்போது இளம் வீரரான கோலிக்கு அளித்து பெருமைப்படுத்தினார் கம்பீர். அந்த நிகழ்வு கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த நிகழ்வாக கருதப்படுகிறது.

இந்திய அணிக்காக 58 டெஸ்ட், 147 ஒருநாள் மற்றும் 37 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 9 சதங்கள், 22 அரை சதங்கள் உட்பட 4,154ஓட்டங்கள் குவித்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் 11 சதங்கள், 34 அரை சதங்கள் உட்பட 5,238 ஓட்டங்கள் அடித்துள்ளார். இருபது-20 போட்டிகளில் 7 அரை சதங்கள் உட்பட 932 ஓட்டங்கள் சேர்த்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இருபது-20 உலகக் கோப்பை இறுதிப்போட்டியிலும், 2011இல் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை இறுதிப்போட்டியிலும் இவரது பங்களிப்பு மிகவும் அபாரமானது. இரண்டு முறையும் அவர் ஆட்ட நாயகன் விருது பெறவில்லை. ஆனால் இரு முறையும் இந்திய அணியின் ஸ்கோர்கார்டு பார்த்தால், இவரது பங்கு எத்தகையது என்பது புரியும்.


2007 இருபது-20 உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் யூசுப் பதான் 15, உத்தப்பா 8, யுவராஜ் சிங் 14, டோனி 6 என மறுமுனையில் இருந்த துடுப்பாட்ட சொற்ப ஓட்டங்களில் வெளியேறினாலும், கம்பீர் நிதானம் கலந்த அதிரடியுடன் 54 பந்துகளில் 75 ஓட்டங்கள் குவித்தார். இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 157. ஆரம்ப துடுப்பாட்டவீரராக களமிறங்கி 18 ஓவர்வரை விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கை 50 சதவீத ஓட்டங்களை எடுத்தார். மேலும், இந்த தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரரும் இவர்தான்.

2011இல் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் முதல் ஓவரில் சேவாக்கும் (0 ஓட்டங்கள்), ஏழாவது ஓவரில் சச்சினும் (18 ஓட்டங்கள்) ஆட்டமிழக்க, அணி 31 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது. பொறுப்பை எடுத்துக்கொண்ட கம்பீர் கோலியுடன் இணைந்து நிதானத்துடன் விளையாடினார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 114 ஆக இருந்தபோது கோலி ஆட்டமிழந்தார். பின்னர் டோனியுடன் ஜோடி சேர்ந்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார் கம்பீர். இந்தப் போட்டியில் முதல் ஓவரில் களமிறங்கி 42 ஓவர்வரை விளையாடி அணியின் வெற்றிக்கு வித்திட்டார். இந்த தொடரில் மொத்தம் 393 ஓட்டங்கள் குவித்தார் கம்பீர். இந்திய அணியில் சச்சினுக்கு அடுத்து அதிக ஓட்டங்கள் இந்த தொடரில் எடுத்தவர் கம்பீர்தான் என்பது கவனிக்கத்தக்கது.

கிரிக்கெட்டில் மட்டுமல்ல. சமூகம் சார்ந்த விடயங்களிலும் இந்தியாவுக்காக குரல் கொடுத்து வருகிறார். அவர் சத்தீஸ்கர் மற்றும் ஜோகிராவில் இறந்து போன சி.ஆர்.பீ.எஃப் ஜவான்களின் குழந்தைகளின் கல்விக்கு நிதியளித்தார். ஏழை மக்களின் நலனை கருத்தில் கொண்டு கவுதம் கம்பீர் (ஜி.ஜி) அறக்கட்டளை தொடங்கி, அதை வெற்றிகரமாக நடத்திவருகிறார். சமூக பிரச்சினைகளின் போது சமூக வலைத்தளங்களில் தயங்காமல் தன்னுடைய கருத்தை கூறுவார். அது ராணுவம் தொடர்பாக இருந்தாலும் சரி, டில்லியின் உள்ளூர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, டில்லி கிரிக்கெட் சம்பந்தமாக இருந்தாலும் சரி, இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு குரல் கொடுப்பதாக இருந்தாலும் சரி. தன்னுடைய மனிதாபிமானத்தையும், தேசப்பற்றையும் தவறாமல் பதிவுசெய்வார்.

2008ஆம் ஆண்டில் விளையாட்டில் இந்தியாவின் இரண்டாவது உயரிய விருதான அரஜுனா விருது பெற்றார். அண்மைக்காலமாக இவர் பா.ஜ.கவில் சேர்ந்து வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடப் போவதாக உறுதி செய்யப்படாத செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

கம்பீரின் சாதனைகளை நாம் பெரிய அளவில் கொண்டாடாத போதும், அவர் தன்னால் முடிந்த அளவு கிரிக்கெட்டிலும், சமூகம் சார்ந்த விடயங்களிலும் சிறப்பான பங்களிப்புகளை அளித்து வருகிறார். அண்மைக்காலமாக வர்ணனையாளராகவும் பங்கேற்று வருகிறார். இவர் ஓய்வு பெற்றது கிரிக்கெட் உலகிற்கு ஒரு பெரிய இழப்பாக கருதப்படுகிறது.



# வேலையை விருப்புடன் செய்வோம் வாழ்வை வெற்றி பெறச் செய்வோம்

நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அதற்கான பணிகளுக்கு கூடுதல் நேரம் ஒதுக்குங்கள். இசையமைப்பாளராக விரும்பினால், இசைக்கருவிகளோடு அதிக நேரம் செலவிடுங்கள். எழுத்தாளராக விரும்பினால் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் அதிக நேரம் ஒதுக்குங்கள். அதனை ஒரு பழக்கமாகவே மாற்றுங்கள்.

ஒரு சிலரைப் பார்த்தால் "இவர்களால் மட்டும் ஒரேநேரத்தில் அலுவலக வேலை, எழுத்து, மேடைப்பேச்சு, பயணம், உடற்பயிற்சி என்று அனைத்தையும் எப்படிச் செய்ய முடிகிறது... நம்மால் மட்டும் ஏன் முடியவில்லை?" என்ற கேள்வி நமக்குள்ளேயே எழும். உண்மைதானே, இயற்கை அவர்களுக்கு மட்டும் கூடுதல் நேரத்தை வழங்குவதில்லையே! எப்படி அவர்களுக்கு மட்டும் நேர மேலாண்மை சாத்தியமாகிறது? பார்க்கலாம்...

நேர மேலாண்மையின் அடிப்படையே திட்டமிடல்தான். மாதச் சம்பளம் வாங்குவோர் அனைவரும் சம்பளம் வந்ததுமே வீட்டுக்கடனுக்கு, வாகனக் கடனுக்கு, மளிகைக் கடைக்கு, பால், பேப்பர் என ஒவ்வொரு செலவுக்கும் பகிர்ந்துவைத்து பட்ஜெட் போட்டு செலவு செய்வார்கள். ஆனால், அதே மாதச் சம்பளம்போல்தான் நமக்குக் கிடைத்துள்ள 30 நாட்கள் என்பதை உணர மாட்டார்கள். இந்த 30 நாட்களை எப்படிச் செலவு செய்வது என்பதைத் திட்டமிட வேண்டும். 30 நாட்களுக்குள் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்றால், அதற்கென தினமும் குறிப்பிட்ட அளவு நேரத்தை ஒதுக்க வேண்டும். அப்படிப் பகிர்ந்து செய்தால் அந்தச் செயலை எந்தவிதப் பதற்றமும் இன்றி முடித்துவிடலாம். ஆனால், நாம் பெரும்பாலும் பின்பற்றுவது கிரிக்கெட் வீரர் டோனி ஸ்டைலைத்தான்! கடைசி ஓவர் வரை பரபரப்பாக ஆட்டத்தை இழுத்து, கடைசிப் பந்தில் வின்னிங் ஷோட் அடிப்பது அவர் வழக்கம். ஆனால், அனைவராலும் டோனி ஆகிவிட முடியாது. அனைவருக்கும் வின்னிங் ஷோட் கைகொடுக்காது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இனி, நேர மேலாண்மையில் முக்கியமான அம்சங்களைப் பார்க்கலாம்.

### 8 மணி நேரத் தூக்கம்:

இயற்கையும்கூட ஓய்வெடுப்பதற்காகத்தான் இரவு-பகல் வருகிறது. அனைத்து உயிர்களும் அதை முறையாகப் பின்பற்றும்போது நாம் மட்டும் விதிவிலக்காக இருப்பது எந்தவிதத்தில் சரி? இரவுத்தூக்கம் 7 - 8 மணி நேரமாவது அவசியம்.

### சமூக வலைத்தளப் பயன்பாடு:

தூக்கம் கெடுவது என்றாலே அதில் சமூக வலைத்தளங்களின் பங்கு அதிகம். தொலைக்காட்சி, இணையம், வாட்ஸ்அப் என அனைத்துக்கும் குறிப்பிட்ட கால அளவு மட்டுமே ஒதுக்கிச் செயற்படுங்கள். உங்களுக்கான நேரத்தை இவற்றின் கையில் கொடுத்துவிட வேண்டாம். இணைய பயன்பாடு என்பது நமது தேவைக்கானதாக இருக்கட்டும்.

### தேவையானதற்கு அதிக நேரம் ஒதுக்குங்கள்:

நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அதற்கான பணிகளுக்கு கூடுதல் நேரம் ஒதுக்குங்கள். இசையமைப்பாளராக விரும்பினால், இசைக் கருவிகளோடு அதிக நேரம் செலவிடுங்கள். எழுத்தாளராக விரும்பினால் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் அதிக நேரம் ஒதுக்குங்கள். அதை ஒரு பழக்கமாகவே மாற்றுங்கள்.

### கால நிர்ணயம்:

இன்றைய காலம், டெட்லைன் வைத்துச் செயற்படும் காலம். நாம் எந்த வேலையைத் தொடங்கினாலும் அதைச் செய்து முடிப்பதற்கான காலக்கெடுவைத் தீர்மானித்துவிட்டு செயற்படுங்கள். அப்போதுதான் நேர விரையத்தைத் தவிர்க்க முடியும்.

### முக்கியமான பணிக்கு முதல் மரியாதை:

ஒரு நாளில் நாம் செய்து முடிக்க பல்வேறு வேலைகள் இருக்கலாம். அவற்றில் எந்த வேலை முக்கியமோ, அதை முதலில் முடியுங்கள். அப்போதுதான் நமக்கு மனநிம்மதி கிடைக்கும். அடுத்த பணிகளை துடிப்பாகச் செய்ய மனம் ஒத்துழைக்கும்.

### "முடியாது" சொல்லப் பழகுங்கள்:

செய்து முடிப்பதற்கான கால அவகாசம் இருக்கிறதா? என்பதைக் கணக்கிடாமலேயே பல்வேறு வேலைகளைச் செய்ய ஒப்புக்கொள்வதால், பெரிய நெருக்கடிக்கு ஆளாக நேரிடும். எனவே, செய்ய இயலாத வேலைகளுக்கு "முடியாது" என்று சொல்லிப் பழக வேண்டும். நேர மேலாண்மையில் இதுவும் முக்கியம்.

### வேலையில் ஈடுபாடு:

ஒரு வேலையில் இறங்கினால் அதை முழு ஈடுபாட்டோடு செய்ய வேண்டும். நம் சிந்தனையை அதன் மீது ஒருமுகப்படுத்த வேண்டும். அப்படிச் செயற்பட்டால் வேலையைச் சரியாக முடிப்பதோடு, சரியான நேரத்துக்குள் செய்து முடிக்கலாம்.

### வார விடுமுறை ஓய்வுக்கானதே:

வார விடுமுறையை ஓய்வுக்காகப் பயன்படுத்துங்கள். அப்போதுதான் அடுத்த வாரத்தைப் புத்துணர்வுடன் தொடர முடியும். வார நாட்களை நன்முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தும்போது, வார விடுமுறையை மன அழுத்தமில்லாமல் ஓய்வுக்குச் செலவிட முடியும்.


### உடற் பயிற்சி:

நேர மேலாண்மை நன்முறையில் செயற்படுத்தப்பட்டாலே மன அழுத்தம், பணிச்சுமை குறைந்து உடல் ஆரோக்கியத்தை நன்றாகப் பேண முடியும். அதுபோக, விடியற்காலையில் உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குங்கள். உடல்நலம்தான் நம் செயற்பாடுகள் அனைத்துக்கும் அச்சாணி என்பதை மனதில்கொண்டு, உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

### விரும்பி பணிசெய்தல்:

நேரமேலாண்மையின்இறுதியான ஆலோசனை, செய்யும் வேலையை முழு விருப்பத்தோடு செய்ய வேண்டும் என்பதே. அப்படி விருப்பத்தோடு செய்யும்போது அந்த வேலை நமக்கு மகிழ்ச்சி தருவதாகவும் பொழுது போக்குப்போலவும் அமையும்.

சொல்லப்பட்ட அனைத்தையும் பழக்கத்துக்குக் கொண்டுவந்தால், நாமும் ஓர் அஷ்டாவதானிதான்.



# சாப்பாட்டுத் தத்துவம்

- தோல்வி என்பது பெருங்காயம் போல, தனியாகச் சாப்பிட்டால் கசக்கும். வெற்றி என்னும் சாம்பாரில் அதைக் கரைத்து விட்டால் மணக்கும்.
- ஒரு குக்கரைப் போல இருங்கள். பிரஷர் அதிகமாகும் போது விசிலடித்துக் கொண்டாடுங்கள்!
- இலட்சியமும் முட்டையும் ஒன்று. தவற விட்டால் உடைந்து விடும்.
- சோம்பேறித்தனம் என்பது மிளகாய்க் காம்பு போல. கிள்ளி எறிந்து விட வேண்டும்.
- வாழ்க்கை சிக்கலான இடியப்பம்தான். அதில் அன்பு என்னும் தேங்காய்ப்பாலைக் கலந்தால் சுவைக்கும்.
- பொய், நூடில்ஸ் போல் தற்காலிகமானது. உண்மை இட்லி போல நிரந்தரமானது.
- கோபத்தை உப்பைப் போல பயன்டுபடுத்துங்கள். அதிகமானால் வாழ்க்கை சுவைக்காது.
- தலைக்கனம் என்பது வெந்நீர் போன்றது. அதை அடுத்தவர் மீது கொட்டாதீர்கள். நம் மீதே சிந்திவிடும்.
- தாமதமான வெற்றி என்பது, பல் இழந்த பிறகு கிடைக்கும் நல்லி எலும்பு போல அனுபவிக்க முடியாது.
- தன்னம்பிக்கைச் சூத்திரங்கள் என்பவை சமையல் குறிப்புகள் போல. சமைப்பது உங்கள் கையில் தான்!
- வெற்றி என்பது இட்லியை போல வேகுவது தெரியாது. வெந்த பின்தான் தெரியும்.
- ஏவற்றி என்ற இட்லியை தனியே உண்ண முடியாது. நட்பு என்ற சட்னி வேண்டும்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பாசமலர்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன், ரி.ஆர்.ராமமூர்த்தி
பாடியவர் : பி.வி. ஸ்ரீநிவாஸ், பி.சுசிலா



யார் யார் யார் அவள் யாரோ
ஊர் பேர் தான் தெரியாதோ
யார் யார் யார் அவள் யாரோ
ஊர் பேர் தான் தெரியாதோ

சலவைக்கல்லே சிலையாக தங்க பாளம் கையாக
மலர்களிரண்டு விழியாக
மயங்கவைத்தாளோ...

யார் யார் யார் அவள் யாரோ..
ஊர் பேர் தான் தெரியாதோ..

முத்து மணித்திரள் ரத்தினமோ
மொய்குழை மேக சித்திரமோ
முத்து மணித்திரள் ரத்தினமோ
மொய்குழல் மேக சித்திரமோ
செக்கச்சிவந்த இதழாலே
சிந்தும் புன்னகை மந்திரமோ
செக்கச்சிவந்த இதழாலே
சிந்தும் புன்னகை மந்திரமோ

யார் யார் யார் அவள் யாரோ..
ஊர் பேர் தான் தெரியாதோ

கண்கள் மயங்கும் கண்ணானாள்
பெண்கள் மயங்கும் பெண்ணானாள்
கண்கள் மயங்கும் கண்ணானாள்
பெண்கள் மயங்கும் பெண்ணானாள்
நினைவில் மயங்கும் பொருளானாள்
நிலவில் மயங்கும் இருளானாள்
நினைவில் மயங்கும் பொருளானாள்
நினைவில் மயங்கும் இருளானாள்

யார் யார் யார் அவள் யாரோ..
ஊர் பேர் தான் தெரியாதோ

அஞ்சனம் கொண்டாள் நகை கொண்டாள்
அச்சம் நாணம் மடம் கொண்டாள்
அஞ்சனம் கொண்டாள் நகை கொண்டாள்
அச்சம் நாணம் மடம் கொண்டாள்
மஞ்சள் குங்குமம் மலர் கொண்டாள்
மனதை சேர்த்து ஏன் கொண்டாள்

யார் யார் யார் அவள் யாரோ..
ஊர் பேர் தான் தெரியாதோ
யார் யார் யார் அவள் யாரோ..
ஊர் பேர் தான் தெரியாதோ

ஆஹா ஆஹா ஆஹா...ஹா ஹாஹா...
ஓஹோ...ஓஹோ...ஓஹோ...ஹோ...ஹோ...ஹோ...

# ராதா ரவியின் பட்டம் மட்டும் போலியில்லையாம் கொடுத்தவரே போலியாம் - சின்மயி







தமிழ் சினிமாவின் பிரபல வில்லனாக இருந்தவர் எம்.ஆர். ராதா. இவரது மகனான ராதாரவியும் வில்லன், குணச்சித்திரம் என பல வேடங்களில் நடித்து அனைவரையும் தற்போது வரை அசத்திவருகிறார்.

இவர் பெயர் முன்பு டத்தோ என்ற பட்டம் இருக்கும். ஆனால் இந்த பட்டமே போலியாக வைத்திருக்கிறார் என #Metoo மூலம் பிரபலமான பாடகி சின்மயி புகார் கூறியதோடு சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பிய மெயிலையும் ஆதாரமாக கூறினார்.



ராதாரவி அதை மறுத்ததோடு தனக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படவில்லை எனவும் சுல்தானிடம் இருந்து பெற்றதாகவும் சின்மயி இவ்வாறு கூறி இருப்பது இதை தனக்கு பட்டம் அளித்தவர்களையே அவமதிக்கும் வகையில் இருக்கிறது. இதனால் சின்மயி மலேசியா செல்லவே தடை விதிக்கலாம் என கூறி இருந்தார்.

ஆனால் தற்போது வந்துள்ள தகவல்படி மலேசியாவில் சில மாகாணத்தில் சுல்தான்கள் இல்லை, அதில் ராதாரவிக்கு சுல்தானால் டத்தோ பட்டம் வழங்கப்பட்டதாக கூறப்பட்ட மலாக்கா மாகாணமும் ஒன்று. மேலும் ராதாரவி டத்தோ பட்டத்தை சுல்தானிடம் வாங்குவது போன்ற படம் வெளிவந்தது. அதை ஆராய்ந்து பார்க்கையில் அதில் இருப்பவர் போலி சுல்தான் என மலேசிய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டவராம்.

மலாக்காவின் சுல்தானாக ராஜா நூர் ஜான் ஷா என்ற தொழிலதிபர் தன்னை தானே அறிவித்து கொண்டார். மேலும் sir பட்டத்துக்கு இணையாக மதிப்புமிக்க பட்டமாக மலேசியாவில் கருதப்படும் datuk பட்டத்தை பணம் வாங்கி விற்று பல பேருக்கு பட்டமளித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

ராதாரவியும் இவரிடம் ஏமாந்து விட்டாரா என தெரியவில்லை என்று கிசுகிசுக்கப்படுகிறது.

# 1000 கோடி ரூபாய் படத்தில் நடிக்க மறுத்த நடிகை



பொலிவுட் நடிகர் அமீர்கான் 1000 கோடி ரூபாய் பட்ஜெட்டில் மஹாபாரத கதையை படமாக்கவுள்ளார்.

தற்போது முதற்கட்ட பணிகள் நடந்துவரும் நிலையில் படம் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இந்த படத்தில் திரௌபதியாக நடிக்க நடிகை தீபிகா படுகோனிடம் பேச்சு வார்த்தை நடந்ததாக கூறப்பட்டது.

ஆனால் அந்த வாய்ப்பை தீபிகா நிராகரித்துவிட்டார் என தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் அதற்கான காரணம் தெரிய வில்லை.

அமீர் கானின் கனவு படமான இதில் அமீர்கான் கிருஷ்ணர் வேடத்தில் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.

# 2.0 தற்போதைய வசூல்



2.0 உலகம் முழுவதும் வசூல் வேட்டை நடத்தி வருகின்றது. இப்படத்தின் மூலம் ரஜினி தன் திரைப்பயணத்தில் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளார் என்று தான் சொல்ல வேண்டும்.

ரஜினி மட்டுமல்ல தமிழ் சினிமாவும் தான், தமிழில் ஒரு படம் ரூபாய் 500 கோடி வசூல் செய்வது இதுவே முதன் முறையாம்.

சரி, அது இருக்கட்டும் தற்போது தமிழகத்தில் 2.0 நிலை தான் என்ன? என்று பலருக்கும் கேள்வி இருக்கும்.

3டி பொறுத்தவரை 2.0 மெகா வசூல் தான், திரையிட்ட அனைத்து இடங்களிலும் கூட்டம் அலை மோதுகின்றது, ஆனால், 2டி-க்கு கூட்டமே இல்லை.

இது ஒரு புறம் இருக்க தற்போது தமிழகம் முழுவதும் 2.0 ரூபாய் 85 கோடி வரை வசூல் செய்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எப்படியும் ரூபாய் 120 கோடி வரை தமிழகத்தில் 2.0 வசூல் செய்யும் என்பது எல்லோருடைய கணிப்பு பார்ப்போம்.

# பொங்கல் மோதலில் இருந்து தள்ளிப்போன பேட்ட



வரும் பொங்கலுக்கு ரஜினியின் பேட்ட அஜித்தின் விஸ்வாசம் படம் மோத உள்ளன. இதனால் விநியோகஸ்தர்களிடையே எந்த படத்தை வாங்குவது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனால் விநியோகஸ்தர்கள் தயாரிப்பாளர் சங்கத்தை முற்றுகையிட ஆரம்பித்தனர்.

தயாரிப்பாளர் சங்கமும் பேட்ட படத்தை தயாரிக்கும் சன்பிக்சர்ஸிடம் பொங்கல் வெளியீட்டில் இருந்து தள்ளிபோக முடியுமா என கேட்டதற்கு பேட்ட பொங்கல் வெளியீடு உறுதி என திட்டவட்டமாக கூறிவிட்டனராம். இதனால் தயாரிப்பாளர் சங்கம் பொங்கல் வெளியீட்டு படங்களை தீர்மானிப்பதில் இருந்து விலகி கொண்டது.

இந்நிலையில் பேட்ட படக்குழு தனது படத்திலிருந்து 2 பாடல்கள், டிசம்பர் 9இல் இசை வெளியீடு, சமூக வலைத்தளங்களில் விளம்பரம் என வேகமாக விளம்பரப்படுத்தி கொண்டு வந்தாலும், விஸ்வாசத்தின் தமிழக உரிமையை வாங்கிய கே.ஜே.ஆர்.ஸ்ரூடியோ எந்தவொரு ஆரப்பாட்டமுமின்றி தமிழகத்தில் உள்ள திரையரங்குகளை ஒவ்வொன்றாக ஒப்பந்தம் செய்து வருகின்றனர்.


மேலும் அத்திரையரங்குகளில் மிகப்பெரிய பனர்களை வைத்து அசத்தி வருகின்றனர்.

# 1200 வாரங்களாக திரையரங்கில் ஓடிக்கொண்டிருக்கும் படம்

இந்திய திரைப்பட வரலாற்றில், சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை மிக அதிக வசூலை வாரிக்குவித்த வெற்றிப் படங்கள் எல்லாம் வெள்ளி விழா, பொன் விழா எனக் கொண்டாட்டம் காணும்.

இப்போது இருக்கும் அதிவேக உலகில், 10 நாள் ஒரு திரைப்படம் ஓடினாலே அது வெற்றி கண்டதாக விழா எடுக்கப்படுகிறது.

காலத்தால் அழியாத காதல் காவியம் எனத் திரை ரசிகர்களால் போற்றப்படும் "தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே" என்னும் திரைப்படம், 23 ஆண்டுகளைக் கடந்து, 1200ஆவது வாரத்தைத் தொட்டிருக்கிறது.



யாஷ் ராஜ் பிலிம்ஸ் தயாரிப்பில், ஆதித்ய சோப்ரா இயக்கி, ஷாருக் கான் மற்றும் கஜோல் நடித்த இந்தத் திரைப்படம், "DDU " என ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படுகிறது.

இந்தத் திரைப்பட கதாபாத்திரங்களான ராஜ் மற்றும் சிம்ரனின் காதல் கதையை அறியாதவர்களே வட இந்தியாவில் இல்லை எனலாம். இந்நிலையில், 1200ஆவது வாரத்துக்கு நன்றி சொல்லி, படத்தின் இயக்குநர் ஆதித்ய சோப்ரா மற்றும் ஷாருக்கான், கஜோல் ஆகியோர் நன்றி .தெரிவித்துள்ளனர்.

ஷாருக்கான் தன்னுடைய பதிவில், "23 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய சிறப்புப் பயணம் இது.

இப்போதும்தொடர்ந்து கொண்டிருக்கிறது. 1200 வாரங்களாக ராஜ் மற்றும் சிம்ரனை திரையரங்கில் உயிர்ப்புடன் வைத்திருப்பது ரசிகர்களின் அன்பே. 23 ஆண்டுகளாகத் தீரா காதலை வழங்கிக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கு நன்றி" எனத் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கஜோல் அதேபோல, "இத்தனை ஆண்டுகளாக DDU-வுக்கு நீங்கள் காட்டும் அன்பிற்கு நன்றி. இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் எங்களுக்கெல்லாம் இது மிகவும் மனத்துக்கு நெருக்கமான படமாக இருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

எவர் க்ரீன் காதல் திரைப்படம் எனக் கருதப்படும் இந்தத் திரைப்படம், மும்பையில் உள்ள மராத்தா மந்திர் திரையரங்கில் இன்னமும் ஓடிக் கொண்டிருக்கிறது.

தினமும் மதிய காட்சிக்கு ரூபாய் 15 லிருந்து 20 ரூபாய் வரை டிக்கெட் விலை வசூலிக் கப்படுகிறது. வார இறுதியில் ஹவுஸ் ஃபுல்லாக ஓடுகிறது DDU .

# சீன- அமெரிக்க வர்த்தக உறவு; நம்பிக்கையளிக்கும் நகர்வு!

அமெரிக்கா - சீனா இடையே கடந்த சில மாதங்களாக நிலவிவந்த வர்த்தகப் போர், சர்வதேச அளவில் விரிவடைந்து விடுமோ என்று அஞ்சப்பட்டு வந்த நிலையில், நிலைமை சற்று சுமுகமாகியிருப்பது ஆறுதல் அளிக்கிறது.

அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸ் நகரில் சமீபத்தில் நடந்த 'ஜி-20' அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் சந்திப்புக்குப் பிறகு, வர்த்தகப் போரை அடுத்த மூன்று மாதங்களுக்கு நிறுத்திவைக்க ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.



சீனத்திலிருந்து இறக்குமதியாகும் சூரியஒளி மின்சாரத் தயாரிப்புச் சாதனங்கள், சலவை இயந்திரங்கள் ஆகியவற்றின் மீது ஜூலை மாத இறுதியில் அமெரிக்கா காப்பு வரி விதித்தது. சீனத்தின் அனைத்துப் பொருட்கள் மீதும் அடுத்து வரி விதிக்கப்படும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்திருந்தார். அமெரிக்காவின் இந்நடவடிக்கைக்கு சீனத் தரப்பிலிருந்து கடும் எதிர்வினை வந்தது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சோயாபீன்ஸ், மோட்டார் வாகனங்கள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றுக்கு சீனாவும் காப்பு வரி விதித்தது. ஐரோப்பிய ஒன்றியம், மெக்ஸிகோ, கனடா மீதும் இப்படியான நடவடிக்கைகளில் அமெரிக்கா இறங்கியதும், அந்நாடுகள் பதிலடி நடவடிக்கையில் இறங்கியதும் பொருளாதாரப் பதற்றத்தை ஏற்படுத்தின.

தற்போது அமெரிக்காவும் சீனாவும் ஒப்புக்கொண்டிருப்பதன் அடிப்படையில், அடுத்த மூன்று மாதங்களுக்குள் இரு நாடுகளின் அமைச்சர்களும் உயரதிகாரிகளும் சந்தித்து வர்த்தக உறவில் ஏற்பட்ட சிக்கல்களையும் பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்க்கப் பேச்சு நடத்துவார்கள். அறிவுசார் சொத்துரிமை தொடர்பானதும், உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு சீன அரசு அளிக்கும் மானிய உதவி உள்ளிட்ட பணப் பயன்களும் விவாதிக்கப்படும்.

இதற்கிடையில் சீனாவிலிருந்து அமெரிக் காவுக்கு இறக்குமதியாகும் பொருட்கள் மீதான இறக்குமதி வரியை 10% என்ற அளவிலிருந்து ஜனவரி முதலாம் திகதி முதல் 25% என்று உயர்த்தும் முடிவை அமெரிக்க அரசு ஒத்திவைக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவு ஆண்டுக்குச் சுமார் ரூ.14 லட்சம் கோடி என்பது குறிப்பிடத்தக்கது!

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பற்றுவரவில் ஏற்படும் இடைவெளியைப் பெருமளவு குறைக்க, அமெரிக்காவின் வேளாண் விளை பொருட்களை சீனா அதிகம் வாங்கும். ஒரு வேளை, சமரசப் பேச்சு தோல்வியில் முடிந்தால் சீனாவிலிருந்து இறக்குமதியாகும் எல்லாப் பொருட்கள் மீதும் அமெரிக்கா 25% காப்பு வரி விதித்து, அந்தப் பணத்தைப் பொதுப் பயன்பாட்டுக்கு வைத்துக்கொள்ளும். புதிய காப்புவரி உடனடியாக அமுலுக்கு வரும். அமெரிக்காவின் எச்சரிக்கையை அடுத்து கனடா, மெக்ஸிகோ ஆகிய நாடுகளும்கூட கடந்த அக்டோபரிலேயே அமெரிக்கா விரும்பிய வகையில் வர்த்தக உடன்பாட்டுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவும் சீனாவும் எதிர்பாராத வகையில் திடீரென தற்காலிக உடன்பாட்டுக்கு வரக் காரணம் என்ன என்று தெரியவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும் இரு நாடுகளும் பரஸ்பரம் கடந்த ஆண்டு புதிதாக விதித்துக்கொண்ட உயர் காப்பு வரிகளை விலக்கிக்கொள்வது அவசியம். இரு வல்லரசு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகப் போர் பிற நாடுகளுக்கும் பரவும் அது உலகப் பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்ற அச்சம் சர்வதேச அரங்கில் நிலவியது. இப்போது அது மாறிவிட்டது. அமெரிக்காவின் உயர் வரி விதிப்பைக் கண்டித்த சீனா, பதிலுக்கு அமெரிக்கப் பொருட்கள் மீது விதித்த கூடுதல் வரியால் அமெரிக்க நிதிச் சந்தையில் இழப்பு தொடங்கியது.

சீனப் பொருளாதாரத்திலும் மந்த நிலை ஏற்பட்டது. இதை இரு நாடுக ளின் தலைவர்களும். உணர்ந்தி ருப்ப தால், இதை மேலும் வளர்க்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் என்றே கணிக்க வேண்டியிருக்கிறது.

உலகச் சந்தையில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் சீனா, உள்நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றுவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை விலக்க வேண்டும் என்று அமெரிக்கா நிச்சயம் வலியுறுத்தும். அமெரிக்காவிடமிருந்து அதிகம் இறக்குமதி செய்வோம் என்று சீனா உறுதியளித் திருப்பதிலிருந்தே அது பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்திவருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அதேநேரத்தில், அமெரிக்காவின் காப்பு வரிக் கொள்கைகளைச் சீனமும் பதிலுக்குச் சுட்டிக்காட்ட இப்போது வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இரு நாடுகளுமே பேச்சு நடத்தி, சுமுக முடிவு கண்டு வெற்றிபெற்றதாக அறிவிப்பதே உலக வர்த்தகச் சூழலுக்கு நல்லது!

த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்

# இலஞ்சம் கொடுக்கும் மனோபாவம் மக்கள் மத்தியிலிருந்து நீங்க வேண்டும்

சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம் உலகெங்கும் இன்று 9ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இன்று எமது மக்கள் மத்தியில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் ஊழலுக்கு துணை போகும் பிரஜைகளாகவே உள்ளனர். ஊழலை அனுசரித்து வாழப் பழகிப் போனவர்களாக மக்கள் இருக்கிறார்கள்.

அரசாங்கத் திணைக்களங்களில் தமது கருமங்களை தடையின்றி நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், குற்றச்செயல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இலஞ்சம் கொடுக்கும் நடைமுறையை இன்னுமே இல்லாதொழிக்க முடியாதிருக்கிறது.

தொகையை இலஞ்சமாகவோ அல்லது "அன்பளிப்பு" என்ற பெயரிலோ கொடுத்து, காலதாமதமின்றி தங்கள் காரியங்களை முடித்துக் கொள்வதில் தவறில்லை என்ற மனநிலைக்கு மக்கள் மாறி விட்டனர்.

இத்தகைய மனப்போக்கானது, இலஞ்சத்தை, பொதுமக்கள் அங்கீகரித்து விட்டனர் என்ற உணர்வை லஞ்சம் வாங்குபவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் இலஞ்சம் கொடுப்பவராகவோ அல்லது இலஞ்சம் பெறுபவராகவோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய நிலைமை.

விதி முறைகளுக்குட்பட்ட காரியங்களை செய்து கொடுக்க, இலஞ்சம் கொடுப்பவர்களுக்கு உடனடியாக செய்து கொடுப்பதும், கொடுக்காதவர்களுக்கு ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி இழுத்தடிப்பதும் இன்று வழக்கமாகி விட்டது.

இன்றைய சூழலில் ஒரு நியாயமான, சட்டவிதிமுறைகளுக்குட்பட்ட காரியத்தை செய்து கொள்வதற்கு இலஞ்சம் கொடுக்க மாட்டேன் என்ற நிலைப்பாட்டை ஒருவர் மேற்கொண்டால், அவர் சமுதாயத்தில் சந்திக்க வேண்டிய இடையூறுகளும், அதன் விளைவாக ஏற்படும் மனவேதனையும் அளவிட முடியாதவை. இதுபோன்ற நிலைப்பாட்டை எடுத்தவரைக் காட்டிலும், அவரது குடும்பத்தினரின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கும்.

தனது கடமையில் இலஞ்சம் வாங்க மாட்டேன் என்று கடமையாற்றும் அலுவலர்களும் உள்ளனர். அவர்களது நேர்மையான செயற்பாட்டால் உடன் பணியாற்றும் அதிகாரிகளின் அதிருப்தியை எதிர்கொள்ள வேண்டியும் உள்ளது. நேர்மையான செயற்பாடு என்பது அரசுப் பணியில் இருப்பவர்கள் மட்டுமின்றி, பொதுமக்களும் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறையாகும்.

அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வரியை பல்வேறு காரணங்களைக் கூறி செலுத்தாமல் இருப்பதும் ஒரு வகை ஊழல் ஆகும். கடந்த அரை நூற்றாண்டில் கல்வி, விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரத்தில் கணிசமாக வளர்ச்சி அடைந்துள்ள உலகில் ஊழலும், அது தொடர்பான செயற்பாடுகளும் அளவுக்கு அதிகமாக தலைதூக்கியுள்ளன.

பணம் ஈட்டுவது குறித்து சமுதாயத்தின் பார்வையும் மாறத் தொடங்கியுள்ளது. நேர்மையாக வாழ்வதுதான் உன்னதமான வாழ்க்கை முறை என்ற நிலைமை மாறி வருவதைக் காண முடிகிறது.

உலக நாடுகள் பலவற்றிலும் ஊழல் மிக அதிகமாக வியாபித்துள்ளதைக் காண முடிகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை ஊழல் சீரழிப்பதோடு, அந்நாட்டின் நிலையான ஆட்சிக்கும் உள்நாட்டு பாதுகாப்புக்கும் அது அச்சுறுத்தலாக விளங்குகின்றது.

சர்வதேச அளவில் ஊழலைத் தடுக்க ஐ.நா அமைப்பு 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் 31இல் ஊழலுக்கு எதிரான போரை தீவிரமாக நடத்தி, அதை உலக நாடுகளில் இருந்து விரட்டியடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இதன்படி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 9ம் திகதியை சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக கடைப்பிடித்து, ஊழலின் நச்சுத்தன்மையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமெனத் தெரிவித்தது.

ஆண்டுக்கு ஒருமுறை ஊழல் எதிர்ப்பு தினம் அனுசரித்து விட்டு, மற்றைய நாட்களில் வாழ்க்கையை தொடர்வதால் ஊழல் ஒழிப்பில் எந்த முன்னேற்றமும் அடைய முடியாது. இலஞ்சம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட வேண்டும்.

இலஞ்சம் கேட்பவரிடம், "லஞ்சம் ஏன் கொடுக்க வேண்டும்" எனக் கேட்க வேண்டும். ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளில் பங்கேற்க வேண்டும்.

ஊழலுக்கு எதிரான உணர்வை இளைய தலைமுறையினருக்கு ஊட்ட வேண்டிய பொறுப்பில் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களேயாவர்.

பரீட்சைக்குரிய பாடங்களை மட்டும் கற்றுக் கொடுக்காமல், ஊழலின் கறை படியாமல் களங்கமற்ற மனிதர்களாக வாழ்வில் திகழும் வழிமுறைகளையும் ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஊழலுக்கு அடிபணியாமல் பணியாற்றுபவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

facebook

# குருவும் சிஷ்யனும்

(சென்றவார தொடர்ச்சி)

எந்தத் தத்துவத்தாலும் அதை மாற்ற முடியாத வாழ்க்கை. தயங்காதீர்கள். தாகத்தைத் தணித்துக் கொள்ளுங்கள். இதுவே வாழ்க்கை. இதுவே இவ்வுலகு. ' என்று சிஷ்யன் கூறி அவரை ஊக்கப்படுத்தினான்.

சிவகுரு அவளைத் தன்னை மறைந்து பார்த்துக் கொண்டு நின்றார். அவர் மனதில் ஆசையும் காமமும் கொழுந்துவிட்டு எரிய உடல் வெப்பத்தில் முறுகிய தோசைக்கல் ஆகியது. சிவகுருவுக்கு தான் பூமியில் அல்ல கற்பனைக்கும் எட்டாத சுவர்க்கத்தில் நிற்பது போன்று தோன்றியது. முன்வைத்த காலைத் தொடர்ந்து முன்வைப்பது பற்றியே அவர் அவாக் கொண்டார். 'அப்படி இந்தச் சிஷ்யன் சொல்வது சரி என்றாலும், உன்னையே நீ அறியாதவன் என்று அந்தத் துறவி ஏன் என்னைப் பார்த்துக் கூறினார்?' என்கின்ற எண்ணம் திடீரென அவருக்கு வந்தது. சிவகுரு அப்படியே நின்றார். துறவி வாய்விட்டு அவரைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தது.

உள்ளே போங்கள்.' என்று கூறிச் சிஷ்யன் சிரித்தான். துறவியின் சிரிப்பில் 'உன்னையே நீ அறியாதவன்.' என்கின்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலிப்பது போல இருந்தது. சிஷ்யன் சிரிப்பில் 'உங்களுக்கு ஏன் இந்த வேஷம்?' என்று கேட்பது போல இருந்தது. சிவகுருவுக்கு ஆசையாகவும் இருந்தது. கவலையாகவும் இருந்தது. அவமானமாகவும் இருந்தது. வெட்கமாகவும் இருந்தது.

சிவகுரு சிறிது நேரம் சிந்தித்தார். இந்தச் சிறிய விடையத்தையே தன்னால் தவிர்க்க முடியாவிட்டால் தன்னில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதாக விளங்கிக் கொண்டார். 'சிஷ்யன் எப்போதும் சிஷ்யனாக இருப்பான். குருவே அதை உணர வேண்டும். எது தனது இலக்கு என்பதைத் தீர்க்கமாக உணர வேண்டும். சிஷ்யனின் சொற் கேட்டு இங்கு வந்திருக்கக்கூடாது. இங்கே மட்டும் அல்ல எங்கும் அவன் சொல்லைக் கேட்டுப் போகக்கூடாது. என்னை நான் என்னுள் அறிந்து அதற்கேற்ப நடந்திருக்க வேண்டும். இப்போதும் எதுவும்



கெட்டுப் போய்விடவில்லை. திரும்பிப் போய்விட வேண்டியதே. அது உண்மையா? எண்ணத்தால் தீண்டியது மாறுமா? எண்ண எண்ணச் சிவகுருவுக்கு மீண்டும் மீண்டும் அவமானமாய் இருந்தது.

போங்கள் எதற்குத் தயங்கியபடி நிற்கிறீர்கள்?' என்று சிஷ்யன் மீண்டும் கேட்டான். சிவகுரு தன்னை இந்த இக்கட்டான நிலையில் இருந்து விடுவிக்க எண்ணினார்.

இல்லை சிஷ்யா. நான் அதற்காக வெளியே வரவில்லை. நீ இங்கு அழைத்து வருவாய் என்றும் எனக்குத் தெரியாது. நீ எனக்குச் சேவை செய்யும் சேவகன் என்று நினைத்திருந்தேன். ஆனால் நீ எனக்கே குருவாக நடந்து கொள்ளப் பார்க்கிறாய். உன் இழுப்பில் நான் இங்கு வந்து இருக்கிறேன் என்பது உண்மையில் எனக்கு அவமானமாக இருக்கிறது. என்னை இப்போது குரு என்று நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது. என் வழியில் உன்னைக் கொண்டு செல்லாது உன் வழியில் நான் வந்ததால் நான் அந்தத் தகுதியை இழந்து விட்டேன். இனி என்றாலும் உன்னை உன்னிடத்தில் வைத்துக் கொள்ள நான் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். வா வெளியே போகலாம். நதி ஓரமாக இன்னும் நான்கு மைல்கள் நடக்கலாம். அப்போது உணர்ச்சி தணியும். உண்மை மேலும் புலப்படும் என்றார் குரு.

ஏன் குருவே இப்படி மறுக்கிறீர்கள்? அவள் அழகான தேவதை. இப்போது போனால் இனி வராத இந்த உலக வாழ்வின் கணங்கள். எப்போது முடியும் என்பது தெரியாத இவ்வுலக வாழ்க்கை. 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்கின்ற என்றும் மாறாத உண்மை. அதற்கு மேல் என்ன இருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா குருவே? எப்போதாவது அதைக் கண்டு இருக்கிறீர்களா? நாளைய கற்பனைக்காக இன்றைய நிஜத்தை ஏன் தவற விட வேண்டும்?' என்றான் சிஷ்யன்.

உனக்கு நான் பதில் கூறப் போவதில்லை. அது என்ன நோக்கமும் இல்லை. நான் குருவாக இருந்திருக்க வேண்டும். எனது தடுமாற்றம் சில கணங்கள் உன்னைக் குருவாக மாற்றிவிட்டது. அது மன்னிக்க முடியாத எனது தவறு. அது தவறு என்று சொல்வதற்கு காரணம் நீ வெளியே செல்பவன். அதில் ஆசை கொண்டவன். உலகைப் பார்த்து, மனித இச்சைகளில் இன்றும், என்றும் மயங்குபவன். நானோ என்னுள் என்னைப் பார்க்க வேண்டும் என்னும் அவாக் கொண்டவன். என்னுள் நான் என்னைக் காண கடும் பிரயத்தனத்தோடு பயணிக்க வேண்டும்.

(அடுத்த வாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1581


### தெய்வேந்திரம்

இனி கோலமாவுல கை வச்சா
முதல் வெட் போடி நீதான் டி...





### டிலக்ஷன்

போடி ஸ்ப்ரே அடித்துக் கொள்பவன் மனிதன்
அது தீர்ந்தவுடன் அவசரத்துக்கு ரூம் ஸ்பிரே
அடித்துக் கொள்பவன் மாமனிதன்



### சஞ்சீவன்




### குணசீலன்

பிறக்கும்போதே எலெக்ட்ரீஷியனா
பிறந்தவனாலதான் இப்படி யோசிக்க முடியும்



### தர்சிகன்

நேசிப்பவர்களைப் பாராட்டு
தேவைப்படுபவர்களுக்கு உதவு,
காயப்படுத்தியவர்களை மன்னித்துவிடு,
விலகியவர்களை மறந்தே விடு



### கலையரசன்

வாழத் தெரிந்தவரிடம் வாழ்க்கை
இருப்பதில்லை, பாசம் தெரிந்தவரிடம்
தாய் இருப்பதில்லை, அன்பு தெரிந்தவரிடம்
காதல் இருப்பதில்லை, உழைக்கத்
தெரிந்தவரிடம் காசு இருப்பதில்லை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




SINGER
Trusted Excellence

## ஒரு மகத்தான இடம் உங்கள் சேவையை நாடுகிறது

### கிளை முகாமையாளர்கள்

பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் தத்தமது கிளைகளில் அன்றாட நடவடிக்கைகளின் திட்டமிடல், ஏற்பாடு மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பார்கள். நாம் தேடுபவர்கள் 30 முதல் 40 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும் தொழில் முனைவுகளில் ஆர்வம் உடையவர்களாகவும் தளபாட மற்றும் இலக்ரோனிக் வியாபார அனுபவம், வாடகைக் கொள்வனவு, பொருள் தொகுதிகளின் பதிவேடுகளைப் பேணுதல், வாடிக்கையாளர் சேவை கட்புலனாகும் வணிகம், சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் சிறந்த அறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டும். இப் பதவியில் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு, ஊழியர்களை முகாமைத்துவம் செய்யும் சிறந்த ஆற்றல் அவர்களுக்கு இருப்பது அவசியம்.

மாதாந்த விற்பனை இலக்குகளை அடைதல், கண்டிப்பான பண மீட்பு விகிதத்தைப் பேணுதல், பதிவேடுகளை முகாமைத்துவம் செய்தல், உற்சாகமான ஊழியர் அணியை வழிநடத்துதல் ஆகிய பொறுப்புக்கள் இப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் தமது நிதி வலிமையை நிருபிக்கும் வகையில் ரூ.150,000/- ஐ பிணைப் பணமாக வழங்க வேண்டியிருக்கும். விற்பனை நிலையமொன்றின் சகல விற்பனை மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு விரிவான பயிற்சி வழங்கப்படும். பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் தரகுப்பணம் உட்பட ஆறு இலக்க மாதாந்தச் சம்பளத்தை எதிர்பார்க்கலாம்.

**கிளைகளின் விரிவாக்கம் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படுவதால் நாடளாவிய ரீதியில் வெற்றிடங்கள் உள்ளன.**

சிங்கர் நிறுவனம் சகலருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் நிறுவனமாகும். ஆகவே, மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட ஆண்-பெண் இருபாலாரும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். தயவுசெய்து உங்கள் சுயவிபரக் கோவை, உறவினர் அல்லாத 2 நடுவர்களின் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றை அடுத்த 7 தினங்களுக்குள் எமக்குக் கிடைக்கத்தக்கதாக, கீழ்க்காணும் தபால் முகவரிக்கு அல்லது hr@singersl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயக் கட்டத்தில் குறிப்பிடவும்.

உதவி முகாமையாளர் - மனித வளங்கள்
சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. 80, நவம் மாவத்தை, கொழும்பு 02.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 161

## நிழலான நினைவுகள்

(உலக நீரிழிவு தினத்தையிட்டு நவம்பர் 14)

நீரிழிவோர் பேரழிவாய்
நிலமெங்கும் பரவிவிட
நிம்மதியை இழந்து இங்கு
நினைவுகளும் கலங்கிவிட
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

கொல்களமாய் எம்தேசம்
கொதித்திருந்த வேளையிலும்
இப்படி நாம் இருக்கவில்லை
இதயத்தை இழக்கவில்லை
சீரழிவாய் வந்து இந்த
நீரிழிவு தாக்கியெம்மை
நிலைகுலைய வைத்து இங்கு
நிம்மதியைத் தகர்த்து விட
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

அற்றைத் திங்கள்
அவ்வெண் நிலவினிலே
அன்போடு கதைபேசி
அறுசுவையில் மகிழ்ந்திருந்தோம்
உயிர்துடித்து வாழ்ந்திருந்தோம்
உடைமைகளை இழந்திருந்தோம்
உறுதுணையாய் இருந்த
உறவுகளைத் தொலைத்திருந்தோம்
சிலுவையிலே அறைந்தது போல்
சில நேரம் துடித்திருந்தோம்
சிறகுகளை அறுத்தது போல்
சில காலம் தவித்திருந்தோம்
பல ரோகம் கண்டிருந்து
பல விதமாய்த் தவித்திருந்தும்
சல ரோக நோயிதனை
சரி வரவே கண்டதில்லை
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

உணவே மருந்தெனவே
உவகையோடு வாழ்ந்திருந்தோம்
ஊரரிசி உண்டு நிதம்
உடற்பயிற்சி செய்திருந்தோம்
உறவுகளின் தழுவலிலே
உண்மையாக வாழ்ந்ததனால்
உயிர்கொல்லி நோய்களினை
ஊரை விட்டே வைத்திருந்தோம்
காலத்தின் கோலத்தால்
கண்டதெல்லாம் உண்டுவிட்டு
கட்டையிலே போகும்வரை
கலங்கியே தான் வாழுகின்றோம்
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

சுவைக்கு அடிமையாய் நாம்
சூழலினை மறந்து இங்கு
துரித உணவினையே
துயில் கலைத்து உண்டுவிட்டு
துடிக்கும் நோய்களினைத்
துயராய்ச் சுமந்து இங்கு
துன்பப் படுகின்றோம்
துயருக்குக் காரணம் நாம்
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

உடலுழைப்பை மறந்துவிட்டு
உடற்பயிற்சி தனை விடுத்து
ஊரோடு ஒட்டி வாழும்
உறவு நிலை தனை மறந்து
ஊர் பேரறியாத உடல்நோய்கள்
உருக்க எம்மை
உள்ளங் குமுற இங்கு
ஊரெல்லாம் அலைகின்றோம்
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

சின்னத் திரையினிலே
சீரழிவுக் காட்சிகளும்
பென்னம் பெருந்திரையில்
பேரின்பக் காட்சிகளும்
அன்னை தந்தையர்க்கு
அனுதினமும் பொழுதாகில்
சின்னஞ்சிறு பிள்ளை
சீரழிந்து தான் இருக்கும்
எந்தையும் தாயும்
இனிது குலவியிங்கு
இன்பம் பொங்கிவர
இனிதே தான் வாழ்ந்திருந்தோம்
தந்தையோ பிறநாட்டில்
தனித்திருந்து மெயில் அனுப்ப
தாயோரோ இங்கிருந்து
தனதுருவை ஸ்கான் அனுப்ப
தம்பிமார் வட்ஸ் அப்பில்
தம்படங்கள் தானனுப்ப
தங்கைமார் தளராமல்
தமது கதி பேஸ்புக்கில்
இப்படித்தான் எம் வாழ்வு
இங்கு கழிகிறது
கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்து மூத்தகுடி
கடைசிவரை பழம் பேச்சு
கதைத்தே தான் வாழ்ந்து விட்டோம்
ஒற்றுமையா என்ன விலை
ஒருவருக்கும் தேவையில்லை
உளறிப் பிதற்றுகின்றோம்
உண்மையினைக் கண்டறியோம்
வாயினால் வாழுகின்ற
வல்லரசு எதுவென்று
பரிசில் கொடுப்பதென்றால்
பதற்றமின்றி நமக்குத்தான்
**நினைத்தே தான் பார்க்கின்றேன்**
**நிழலான நினைவுகளை**

நள்ளிரவு வேளையிலும்
நங்கையவர் கலக்கமின்றி
நடைபயின்ற தேசத்தில்
நரிகளிங்கு ஊளையிட
மாமனும் மச்சானும்
மைந்தரும் கூடியிங்கு
மதுவுண்டு களித்துவிட்டு
மதம்பிடிக்கும் காலமிது
கந்தபுராண கலாசாரம்
கண்ட மண்ணில்
கண்டபடி வாழ்ந்து இன்று
கனவுகளைத் தொலைத்து விட்டோம்
வாள்வெட்டுக் கலாசாரம்
வரிந்து கட்டி நிற்க இங்கு
வரலாறு தமைத் தொலைத்து
வாடியே தாம் வதங்கியுளோம்
பேரழிவு கண்டு நிதம்
பொசுங்கியே வாழ்ந்த நாங்கள்
சீரழிவு அற்ற ஒரு
வாழ்வுக்காய் சேர்ந்திருப்போம்
நீரிழிவு நாள் இன்று
நிச்சயமாய்க் கூடியிங்கு
பேரழிவு வராமல்
பெருஞ் சபதம் நாம் செய்வோம்
**இனியொரு விதி செய்ய**
**இன்றே நாம் முடிவெடுப்பின்**
**எங்கள் வாழ்வு அது**
**இனிதே தான் மலர்ந்து விடும்**
**எங்களுக்குள் பிரிவினைகள்**
**ஏதுமின்றி வாழ்ந்து விடின்**
**எல்லா நாளுமிங்கு**
**இனிமையாய்க் கழிந்துவிடும்.**

Dr.எம்.அரவிந்தன்

## நீரிழிவும் பார்வைக் கோளாறும்

● நீரிழிவு நோய் கண், மூளை, இதயம் மற்றும் சிறுநீரகங்களை பாதிக்கும்.

● இந்நோய் உள்ளவர்களுக்கு ஏனையோரை விடவும் பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

● கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கியமாக விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.

● விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களினால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை, இதயம் மற்றும் சிறு நீரகங்களிலும் இதே மாறு தல்கள் ஏற்படுவதால் இந்தப் பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிந்து கொள்ளமுடியும்.

● நீரிழிவு நோயால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற விடயங்கள் சார்ந்து அமைந்திருக்கும்.

● பலவருடங்கள் நோய் உள்ளவர்களில் 70தொடக்கம் 80 சதவீதமானவர்களுக்கு விழித்திரைப்பாதிப்பு ஏற்படும்.

● நீரிழிவு நோயாளர்கள் பார்வையிழக்கும் வாய்ப்பு அதிகம். குறிப்பாக 25 மடங்கு அதிகமாகக் காணப்படும்.

● குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரைஎந்தவித அறிகுறிகளும் தெரியாது.

● விழித்திரைப் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து லேசர்சிகிச்சையளிப்பதன் மூலம் கணிசமான அளவில் பார்வையிழப்பைத்தடுக்க முடியும்.

● லேசர்சிகிச்சை மூலம்இருக்கும் பார்வையைப் பாது காக்க முடியும். மாறாக இழந்த பார்வையை திரும்பப்பெற முடியாது.

● விழித்திரைப் பாதிப்பினால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவருமே 12 மாதங்களுக்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்து கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண்பார்வையை முற்றிலும் இழந்து போகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

Dr.எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார்
கண் மருத்துவ நிபுணர் யாழ் போதனா வைத்தியசாலை